


# 100 வது ஆண்டு மலர்

## பாலர் ஞானோதய சங்கம்

(கட்டுவன் - வறுத்தலைவிளான் - மயிலிட்டி தெற்கு)

**(1922 - 2022)**

**கட்டுவன், தெல்லிப்பளை.**

PALAR GNANOTHAYA SANGAM UK

PALAR GNANOTHAYA SANGAM SWISS


Best wishes for the Grand opening of
Palar Gnanothaya Sanga Valagam
and for the Centenary Celebrations
GANESHAAR
STORES
GANESHAAR STORES
GROCERS & GENERAL MERCHANTS (SINCE 1935)
5A, Cargills Ground, Nuwara Eliya.

உ

சிவமயம்

# விநாயகர் துதி



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.


# காணிக்கை

எமது கிராமங்களை ஓர் அமைப்பின் கீழ் ஒன்றிணைத்து,
எமது கிராமங்களின் வளர்ச்சிக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும்
அயராது தம்மால் இயன்ற பங்களிப்பை வழங்கிய
எமது கிராமப் பெரியோருக்கு
இம்மலரினைக் காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்.

# பொருளடக்கம்


1. வாழ்த்துச்செய்திகள் 1– 9
2. பாலர் ஞானோதய சங்க நிர்வாக சபை இலங்கை, ஐக்கிய இராட்சியம் சுவிஸ் 10 – 11
3. பாலர் ஞானோதய சங்கத்தின் வரலாறு *(பாலர் ஞானோதய சங்கத்தின் அங்கமான பாலர் ஞானோதய சங்க கலை உடல் வளர்ச்சிக் கழகத்தின் 25 வது ஆண்டு மலரிலிருந்து ...)* 12–37
4. ஐம்பது வருடங்களைக் கடந்து பாலர் ஞானோதய சங்க ஐக்கிய இராட்சியக் கிளை 38–43
5. சங்கம் வளர்த்த எங்களூரின் மீள் வாழ்வு (பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்) 44–47
6. கட்டுவனும் மயிலிட்டி தெற்கும் இரட்டைக் கிராமங்கள் (கலாநிதி சிவ. தியாகராஜா) 48–59
7. முதல் 25 ஆண்டுகள்தோறும் சங்கத்திற் சொற்பொழிவு செய்த பெரியார்கள் (1922/23 – 1947/48) 60–61
8. பாலர் ஞானோதய சங்க நூற்றாண்டு வளாகம் 62–65
9. பாலர் ஞானோதய சங்க நூற்றாண்டு வளாகம் கட்டுவதற்கு அன்பளிப்பு செய்தோர் விபரம் 66–68
10. முதல் இருபத்தைந்து ஆண்டுச் சங்க உத்தியோகத்தர்கள் (1922 / 23 – 1947/48) 69–71
11. பாலர் ஞானோதய சங்கத்தில் தலைவர்களாக அங்கம் வகித்தோர் (1922 இல் இருந்து) 72–74
12. பாலர் ஞானோதய சங்க பதிவுச் சான்று 75
13. பாலர் ஞானோதய சங்கத்தின் யாப்பு 76–80
14. பாலர் ஞானோதய சங்கத்தின் யாப்பு குழு விபரம் 81
15. நன்றியுரை 82

# வாழ்த்துச்செய்தி



**திரு. நமசிவாயம் பாலச்சந்திரன்**
**தலைவர்,**
**பாலர் ஞானோதய சங்கம்**

கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான் ஆகிய மூன்று கிராமத்து மக்களும் ஒரே சமூகத்தவராகவும் உறவுகளாற் பிரித்துப் பார்க்க முடியாதவர்களாகவும் ஒன்றுபட்டு வாழ்ந்து வந்தார்கள். அவ் ஒன்றுபட்ட சமூகத்தினை மேம்படுத்துவதற்கான ஒரு சமூகக் கட்டமைப்பை உருவாக்க முனைந்ததன் பேறாக 1922ம் ஆண்டிலே **பாலர் ஞானோதய சங்கம் (கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான்)** எனும் பெயரிலே ஒரு சங்கத்தை ஸ்தாபிதம் செய்தனர் அச் சங்கத்திலே சிறார்களின் கல்விக்காக **பாடசாலை,** விவசாயிகளுக்காக **வெங்காயச் சங்கம், புகையிலைச் சங்கம், சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம்,** இளைஞர்களுக்காக **கலை உடல் வளர்ச்சிக் கழகம்,** பெண்களுக்காக **மாதர் சங்கம்,** மக்களின் அன்றாட நுகர்வுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக **ஐக்கிய பண்டகசாலை,** குடும்ப, சமூகப் பிணக்குகளை தீர்த்து வைப்பதற்காக **மத்தியத்தர் சபை** போன்ற அமைபபுகளை உருவாக்கி சிறப்புப் பெற்றிருந்த வேளையில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணத்தினால் மக்கள் ஊரை விட்டு இடம்பெயர்ந்ததால் சங்கத்தில் ஒரு தொய்வு நிலை ஏற்பட்டது.

இடம்பெயர்ந்த நிலையில் சங்கத்தின் முன்னோடிகளின் அயராத முயற்சியினால் சங்கத்தால் இழக்கப்பட்ட யாப்பு வரையப்பட்டு சமூக சேவைத் திணைக்களத்தில் பதிவு செய்து வங்கிக் கணக்கைப் புதிதாக ஆரம்பித்து கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கல் இடர்பட்ட மக்களுக்கான சிறு உதவிகள் என்பவற்றை முன்னெடுத்துள்ளது.

எமது ஊரின் ஒரு பகுதியானது இராணுவத்தால் விடுவிக்கப்பட்டமையால் மீளக் குடியமர்வதை ஊக்குவிக்கும் முகமாக அரசினால் வீடு அமைக்கும் நிதி உதவியைப் பெறத் தகுதிபெற்றும் காணியில்லாமையினால் சந்தர்ப்பத்தை இழக்கும் நிலையில் உள்ளோர்க்கு சங்கத்தினூடாக காணி வழங்க எடுத்த முயற்சியில் தகுதி பெற்ற பயனாளிகளுக்கு காணி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உதவிகளுக்கான நிதியினை ஐக்கிய இராட்சிய பாலர் ஞானோதய சங்கத்தினூடாக திரு. கு. கருணாகரன் அவர்கள் வழங்கி உதவினார். இச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் தாய்ச் சங்கச் செயலாளர் திரு வ. இராசதுரை அவர்களும் ஐக்கிய இராட்சியக் கிளை செயலாளர் திரு மு.ஜெயசிறி அவர்களும் சிறப்பாகச் செயற்பட்டமை பாராட்டுக்குரியது.

சங்கமானது 2022ஆம் ஆண்டு நூறு ஆண்டுகளை நிறைவு செய்வதனால் நூற்றாண்டு விழா நடாத்துவது பற்றி இடம்பெற்ற கலந்துரையாடலின் நூற்றாண்டு மண்டபம் ஒன்றை அமைத்தல், நூற்றாண்டு மலர் வெளியீடு என்பவற்றை எமது தாய்ச்சங்கம் முன்மொழிந்த போது ஐக்கிய இராட்சியக் கிளையினர் சுவிஸ் கிளையினருடன் இணைந்து மண்டபத்தை அமைத்துத் தருவதாக வாக்குறுதி அளித்தவாறு சகல வசதிகளையும் கொண்ட மண்டபத்தை அமைத்து முடித்து 20.09.2023 திகதி அன்று திறப்பு விழாவினை நடாத்தவும் 23.09.2023 நூற்றாண்டு விழாவில் நூற்றாண்டு மலர் ஒன்றினையும் தாமே பதிப்பித்து வழங்குவதற்கான செயற்பாடுகளை நிறைவேற்றியமைக்கான தாயச் சங்க நிர்வாகிகள் சார்பாகவும் பொதுமக்கள் சார்பாகவும் உளமார்ந்த நன்றியினையும் நூற்றாண்டு விழாவானது சிறப்புற வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# ஆசிச்செய்தியும், நூற்றாண்டு விழா வாழ்த்தும்



**திரு. வ. சின்னத்துரை**

**முன்னைநாள் பாலர் ஞானோதய சங்கத் தலைவர்**

நூற்றாண்டு விழாக் காணும் எமது பாலர் ஞானோதய சங்கத்துக்கு கடந்தகால நிர்வாகத்தில் பல பதவிகளில் அங்கம் வகித்தவர் என்றவகையிலும், முன்னைய சந்ததி சார்பிலும் இன்னும் பல நூறாண்டுகள் தனது சேவையைத் தொடரவேண்டும் என்று மனமுவந்து வாழ்த்துகிறேன் .

எமக்குப்பின் யார் என்ற பதட்டத்துடன் இருந்தோம். புலம் பெயர்ந்தாலும் எமது ஊர்ப்பற்று மாறாத எமது எம் உறவுகளின் முன்னெடுப்புகள் எம்மை மனஉவகை கொள்ளச்செய்துள்ளது வாழ்க உங்கள் தொண்டு வளர்க்க, பாலர் ஞானோதயவின் சேவைகள்.

*( உயர்திரு வல்லிபுரம் சின்னத்துரை அவர்கள் பாலர் ஞானோதய சங்கத்தின் முத்த உறுப்பினரும் தனது உடல் இசைவாக இயங்கும் வரை சங்கத்துக்காக பல பொறுப்புகளை விருப்புடன் ஏற்று செவ்வனே செய்து சிறப்புடன் செயலாற்றியவர். பாலர் ஞானோதய சங்க கலை உடல் வளர்ச்சி கழகத்தில் தலைவராக பல ஆண்டுகளும் பின்னர் பாலர் ஞானோதய சங்கத் தலைவராக 5 ஆண்டுகளுக்கு மேலாகவும் தனது சேவைகளை எமது கிராமங்களுக்கு முழுமையான அர்ப்பணிப்புடன் வழங்கியுள்ளார். )*

# ஆசிச்செய்தியும், நூற்றாண்டு விழா வாழ்த்தும்



**திருமதி பரமேஸ்வரி முருகேசு**
**முன்னைநாள் மாதர் சங்க உபதலைவர்/ செயலாளர்**

நூறு வருடங்களுக்கு முன்பு எமது முன்னோர்களால் எமது கிராமங்களின் வளர்ச்சிக்காக தூரநோக்கான சிந்தனையுடன் ஆரம்பிக்கப்பட்ட எமது பாலர் ஞானோதய சங்கம். போரினால் பல அழிவுகள், நலிவுகளையும் சந்தித்து இன்று மீண்டும் புதுப்பொலிவுடன் வீறுகொண்டு எழுந்திருப்பது என்னையும் எமது மக்களையும் பேருவகை கொள்ள செய்துள்ளது.

அன்றய எமது கனவான எமது சங்கத்துக்கு என ஒரு கட்டடம் என்ற கனவை, இன்றய புலம்பெயர் வாழ் இங்கிலாந்து மற்றும் சுவிஸ் வாழ் எமது கிராமத்து மக்கள் நனவாக்கியுள்ளனர். இத்திட்டத்தை நனவாக்க அயராது உழைத்த அனைத்து உறவுகளையும் நான் மனதார வாழ்த்துகிறேன்.

பாலர் ஞானோதய சங்க நூற்றாண்டு விழா வெற்றிகரமாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். வயது மூப்புக் காரணமாக இவ் விழாவில் கலந்து கொள்ள முடியாமைக்கு மனம் வருந்துகிறேன்.

*(தற்சமயம் இங்கிலாந்தில் வாழும் அம்மையார் திருமதி பரமேஸ்வரி முருகேசு அவர்கள், எமது சங்கத்தின் நீண்ட கால உறுப்பினரும், பாலர் ஞானோதய சங்க மாதர் சங்க உப தலைவர் ஆகவும் பொருளாளர் ஆகவும் சேவைபுரிந்துள்ளார். இத்துடன் இவர் பாலர் ஞானோதய சங்க உப பிரிவுகளான, ஐக்கிய நாணய சங்கம், ஐக்கிய பண்டகசாலை போன்ற அமைப்புகளில் செயலாளர் ஆகவும் பொருளாளர் ஆகவும் சேவை ஆற்றியுள்ளார்.)*

# ஆசிச்செய்தியும், நூற்றாண்டு விழா வாழ்த்தும்
## மனமுவந்து வாழ்த்துகிறேன்



**ஆ. வ. பாலசுப்பிரமணியம் (A.V.Palan)**
**முன்னைநாள் செயலாளர்,**
**கலை உடல் வளர்ச்சிக்கழக உபதலைவர்**

1922ம் ஆண்டில் எமது ஊர் இளைஞர்களால் தமது தேவைகளைப் பூர்த்திசெயும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டதனால் பாலர் ஞானோதய சங்கம் என்று அழைக்கப்பட்டது. சங்கம் விரிவடைந்து வரும் காலங்களில் விவசாயிகளுக்காக விவசாய சங்கமும். இளம் பெண்களுக்காக தையல் பயிற்சி வகுப்புக்களும், நெசவு தொழில் நிலையமும் ஆரம்பிக்கப்பட்டது. மக்களின் நலன் கருதி பலநோக்கு கூட்டுறவு சங்கமும் ஆரம்பிக்கப்பட்டது.

பாலர் ஞானோதய சங்கத்தின் அனுசரணையுடன் மலையாள புகையிலை ஏற்றுமதியும் செய்யப்பட்டது . வெங்காயம், இலங்கையின் பிற மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1956ம் ஆண்டளவில் புகையிலைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு விவசாயிகளை இச்சங்கம் ஊக்குவித்தது . அரசாங்க உதவியுடன் தபால் கந்தோர், வவுணத்தம்ப வீதியில் வைத்தியசாலையும் நிறுவப்பட்டது. அறிவைப் புகட்டும் நோக்கத்துடன் நூல்நிலையமும் அமைக்கப்பட்டது ஒரு கிராமத்தில் மாதர்களின் பங்கு – முக்கியம் என்பதனை உணர்ந்து பாலர் ஞானோதய மாதர் சங்கத்தினையும் ஸ்தாபித்தார்கள் .

போர்க்கால சூழ்நிலையிலும் சங்கம் தனது கடமையைத் தவறாது செய்துள்ளது. பல துறைகளிலும் சேவையாற்றிய பாலர் ஞானோதய சங்கத்துக்கு நூற்றாண்டில் வாழ்த்துரை வழங்குவதில் பெருமைப்படுகின்றேன்.

என்றும் பாலர் ஞானோதய சங்கத்துக்காக,
**ஆ. வ. பாலசுப்பிரமணியம் (A.V.Palan)**

*( உயர்திரு. ஆ. வ பாலசுப்பிரமணியம் அவர்கள் பாலர் ஞானோதய சங்கத்தின் மூத்த உறுப்பினரும், பல ஆண்டுகளாக சங்கத்துக்காக பல பொறுப்புகளை விருப்புடன் ஏற்று செவ்வனே செய்து சிறப்புடன் செயலாற்றியவர். பாலர் ஞானோதய சங்க கலை உடல் வளர்ச்சி கழகத்தில் உப தலைவராக பல ஆண்டுகளும், பின்னர் பாலர் ஞானோதய சங்கச் செயலாளர் மற்றும் பொருளாளராக பல ஆண்டுகளுக்கு மேலாகவும் தனது சேவைகளை எமது கிராமங்களுக்கு முழுமையான அர்ப்பணிப்புடன் வழங்கியுள்ளார். இவர் ஒரு சிறந்த நாடகக்கலைஞர் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

# ஆசிச்செய்தியும், நூற்றாண்டு விழா வாழ்த்தும்

*வாழ்த்துக்களும் நல்லாசிகளும்!*

ஒரு நூற்றாண்டைக் கடந்து சரித்திரம் படைத்து நிற்கும் எமது பாலர் ஞானோதய சங்கத்தை மேலும் எமது மக்களுக்கு சேவை புரிந்து பல நூறாண்டு சரித்திரம் படைக்க இறைவனை வேண்டுகின்றோம் இச் சங்கத்தில் எமது இளமைக்காலத்தில் உறுப்பினர்களாக சேவை புரிந்ததை எண்ணி பெருமைகொள்கிறோம்

புலம் பெயர்ந்தாலும் எமது மண்ணின் மீது கொண்ட பற்றால் ஐக்கிய இராட்ச்சிய கிளை உறுப்பினர்கள் எமது கிராமத்துக்கு செய்துவரும் சேவைகளை எண்ணி பெருமைகொள்கிறோம் .

என்றும் எமது கிராமங்களின்மேல் பற்றுடன் கந்தவனம் துரைராஜா (காந்தி), முத்துகுமாரு கணேசானந்தன் . சின்னப்பு ஆலாலசுந்தரம்.



**Eur.Ing திரு கந்தவனம் துரைராஜா (காந்தி):** இவர் தற்போது பாலர் ஞானோதய சங்க ஐக்கிய இராட்சியக் கிளையின் போசகரும், முன்னைநாள் தலைவரும். இலங்கையில் பாலர் ஞானோதய சங்கம் மற்றும் இதன் உப பிரிவான கலை உடல் வளர்ச்சிக் கழக நிர்வாகத்தில் முக்கிய பதவிகளை வகித்தவரும் ஆவர்.



**கலாநிதி முத்துகுமாரு கணேசானந்தன் :** இவர் தற்போது பாலர் ஞானோதய சங்க ஐக்கிய இராட்சியக் கிளையின் போசகரும், முன்னைநாள் செயலாளரும், இலங்கையில் பாலர் ஞானோதய சங்கதில் செயலாளர் மற்றும் இதன் உப பிரிவான கலை உடல் வளர்ச்சிக் கழக நிர்வாகத்தில் செயலாளர் மற்றும் முக்கிய பதவிகளை வகித்தவரும் ஆவர்.



**திரு. சின்னப்பு ஆலாலசுந்தரம்:** இவர் தற்போது பாலர் ஞானோதய சங்க ஐக்கிய இராட்சிய கிளையின் போசகரும், முன்னைநாள் செயலாளர், பொருளாளர், இலங்கையில் பாலர் ஞானோதய சங்கம் மற்றும் இதன் உப பிரிவான கலை உடல் வளர்ச்சிக் கழக நிர்வாகத்தில் முக்கிய பதவிகளை வகித்தவரும் ஆவர்.

# பாலர் ஞானோதய சங்க ஐக்கிய இராட்சியக் கிளைத் தலைவரிடமிருந்து .......



**திரு. கனகசபை கணேசநாதன்**
**தலைவர், பாலர் ஞானோதய சங்கம்**
**ஐக்கிய இராட்சியம்**

*எனது அன்பான உறவுகளே!*

50 ஆண்டுகளை கடந்துவிட்ட பாலர் ஞானோதய சங்க ஐக்கிய இராட்சிய கிளை நூறாண்டு கண்ட எமது ஞானோதயாவை அழியாவரம் பெற வாழ்த்துகிறோம். பல தடைகள், இடர்களைத் தாண்டி மீள்எழுச்சி கண்டுள்ள எமது தாய்ச்சங்கத்தை வணங்கி வாழ்த்துவதில் பெருமைகொள்கிறோம் .

எமது ஊர்கள் முன்னுதாரணமாகத் திகழ்ந்த காலம் சென்று, இன்று பொலிவிழந்து, இடிந்த கட்டிடங்களாலும், புதர்களாலும், இன்னும் பல பகுதிகள் விடுவிக்கப்படாமலும் காணப்படுகின்றன. இக்கிராமங்களை மீண்டும் கட்டி எழுப்பும் பாரிய பணி இன்று உள்ளது. இவ் வரலாற்றுக் கடமையை நாம் எவரும் தட்டிக்கழிக்க முடியாது. நாம் எல்லோரும் இருகரம் கொண்டு எமது கிராமங்களை மீள் கட்டியமைக்க ஞானோதய அமைப்பின் கீழ் அணிதிரண்டு, எமது வலுக்களை ஒருமுகப்படுத்தி எமது கிராமங்களின் மீள் கட்டுமானப்பணியை முன்னேடுப்போமாக. காலம் எம்மீது செலுத்தியுள்ள இக்கடமையில் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட இம்மலரின் மூலம் உங்கள் எல்லோரிடமும் வேண்டுகின்றேன்.

எமது சங்கம் எமது தாய்ச் சங்கத்துடனும், எமது ஊர்களுடனும் இணைந்து செயற்பட்ட நீண்ட வரலாற்றைக்கொண்டது. இதில் சிலவற்றை நாம் இம்மலரில் ஆவணப்படுத்தியிருக்கிறோம்.

இத்துடன் எதிர்காலத்தில் எமது தாய்ச்சங்கத்துடன் இணைந்து செயற்படுத்த இருக்கும் திட்டங்களை இங்கு நிரைப்படுத்துகின்றேன்.

1. பாலர் ஞானோதய சங்கத்துக்கான மண்டபம்.: இதனை மேலதிகப் பயன்பாட்டுக்காக வலுவூட்டல்.
2. பாலர் ஞானோதய வித்தியாலயம், கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் போன்றவற்றுக்கு கல்வி மேம்பட உதவிகள் வழங்கல்.
3. எமது கிராமமக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான உதவிகள் வழங்கல்
4. அத்தியாவசிய தேவைகள் சம்பந்தமான பொருட்களை கிராமத்திலேயே பெறுவதற்கான வியாபார நிறுவனங்களை அமைப்பதற்கு உதவி நாடல்.
5. பொது போக்குவரத்து சேவையினை எமது கிராமம் வரை அல்லது எமது கிராமத்தினூடாகப் பெறுவதற்கு முயற்சித்தல்.
6. பொது இடங்கள், குளங்களைப் புனரமைப்புச் செய்தல்.

# பாலர் ஞானோதய சங்க சுவிஸ் கிளை செயலாளரிடமிருந்து .......



**திருமதி கமலினி சிறிதரன்**
**செயலாளர், பாலர் ஞானோதய சங்கம், சுவிஸ்.**

கட்டுவன் பாலர் ஞானோதய சங்கத்தின் ஒரு கிளையாக சுவிஸ் நாட்டில் 07.05.2017 இல் கட்டுவன் பாலர் ஞானோதய சங்கம் – சுவிஸ் என்னால் நிறுவப்பட்டது. இதை நிறுவுவதற்கு மூல காரணமாக இருந்தவர் கனடாவில் வசிக்கும் திரு.குணா முத்துத்தம்பி (இரட்ணகுமார்). தொடக்கவிழாவில் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் 9 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். சங்கத்தின் ஆரம்பவிழாவை சிறப்பிக்கும் விதமாக குணா ( கனடா), வீரபத்மன் (பிரான்ஸ்), நிரஞ்சன்(பிரான்ஸ்), நந்தன் (பிரான்ஸ்), கணேசலிங்கம் (வெள்ளை பிரான்ஸ்). ரகு (கனடா), சிவானந்தன் (நோர்வே) ஆகியோரும் வருகை தந்து விழாவை சிறப்பித்து எம் ஊர் மக்களுடன் சேர்ந்து விழா நடைபெற ஆதரவு தந்தனர்.

ஆரம்பவிழாவிற்கு வந்த சுவிஸ்வாழ் ஊரவர்களிடம் அன்றைய செலவுகளுக்காக சிறு தொகை சேர்க்கப்பட்டு மீதி 250 Sfr. இருப்பில் இருந்தது. கட்டுவன் பாலர் ஞானோதயா வித்தியாலயத்தின் முற்றத்தில் சரஸ்வதி சிலை அமைப்பதற்கு பணம் கோரப்பட்டதால் இருப்பில் இருந்த பணம் 15.05.2022 இல் திரு. அருள்தாஸ் மூலம் ஒரு இலட்சம் ரூபாவாக மாற்றப்பட்டு வழங்கப்பட்டது. எமது சங்கம் ஐக்கிய இராட்சிய கிளையுடன் இணைந்து கட்டுவன் பாடசாலைகளுக்கும் மாணவர்களுக்கும் பல உதவிகளைச் செய்துள்ளது. எமது ஊரிலுள்ள வறிய குடும்பங்களுக்கு சுய தொழிலுக்கான உதவிகளையும் மற்றும் பல வேலைத்திட்டங்களையும் ஐக்கிய இராட்சிய கிளையுடன் இணைந்து செய்கின்றது. பல ஆண்டுகள் கனவாக இருந்த பாலர் ஞானோதய சங்க கட்டிடம் கட்டுவன் சந்திக்கு அருகாமையில் மிகவும் அழகாக கட்டி முடிக்க ஐக்கிய இராட்சியக் கிளைக்கு நாமும் பல வழிகளில் உதவி செய்திருக்கின்றோம்.

தொடர்ந்தும் எம் மண்ணுக்கும் மக்களுக்கும் சகல நாடுகளிலுமுள்ள பாலர் ஞானோதய சங்கக் கிளைகளுடனும் தாய்ச் சங்கத்துடனும் இணைந்து எம்மால் முடிந்த உதவிகளை செய்வோம் என்பதை உறுதியுடனும் மகிழ்வுடனும் கூறிக்கொள்கின்றோம்.

**“எம்மண் காக்க திண்ணமாய் திரள்வோம்”**

# பாலர் ஞானோதய சங்கம் - இலங்கை
# நிர்வாகசபை

தலைவர் : திரு. ந. பாலச்சந்திரன்

செயலாளர் : திரு. வ. இராஜதுரை

பொருளாளர் : திரு. சு. நவரத்தினம் (அமரர்)

**உபதலைவர்கள்**

திரு. சே. சுப்பிரமணியம் , திரு. க .கனகநாயகம்

**பொருளாளர் (கல்வி நிதி )**

திரு. கா. அருள்தாஸ்

**நிர்வாக உத்தியோகத்தர்கள்**

செல்வி. சி.மகேஸ்வரி (அமரர்), திருமதி.நி.விமலாதேவி, திரு. மு.சிவப்பிரகாசம்,
திரு. அ.கணேசலிங்கம், திரு. க. தர்மநாயகம், திரு. கு.சத்சனாமூர்த்தி,
திரு. பூ.சிவராஜா (அமரர்), திரு. க சிவபாலன், திரு. ப. தங்கராஜா,
திரு. சு .தளையசிங்கம்

**அமரர்கள் ஆனவர்களின் இடத்துக்கு தெரிவுசெய்யப்பட்டவர்கள் :**

பொருளாளர் : திரு கா. அருள்தாஸ்

நிர்வாக உத்தியோகத்தர்கள் : செல்வன் Y.யாதவன்

# பாலர் ஞானோதய சங்கம் - ஐக்கிய இராட்சியம் (UK)

## நிர்வாகசபை

தலைவர் : திரு. கனகசபை கணேசநாதன்,
செயலாளர் : திரு. ஜெயஸ்ரீ முத்துக்குமாரு (ஸ்ரீ)
பொருளாளர் : திருமதி .சுமதி விஜயதாஸ்

உப தலைவர் : திருமதி. ரஞ்சிதமலர் ஸ்ரீவசந்தேஸ்வரன்
உப செயலாளர் : Dr. கயானி கண்ணபிரான்
உப பொருளாளர் : செல்வன் த. ரமணன்

**நிர்வாக உத்தியோகத்தர்கள் :**

Dr. கு. கருணாகரன்

Dr. ச. சிவானந்தா

திரு. கா. உதயதாஸ்

திருமதி. T. சிவநாயகம்

திரு. வே. ரதிகுலன்

# பாலர் ஞானோதய சங்கம் - SWISS (சுவிஸ்)

தலைவர் : திரு. செல்வராசா கண்ணதாசன்

செயலாளர் : திருமதி கமலினி சிறிதரன்

பொருளாளர் : திரு. சேனாதிராசா நிர்மலநாதன்

# மயிலிட்டி தெற்கு
# பாலர் ஞானோதய சங்கம்

**ஆரம்பம்**

1922ம் ஆண்டில் எமது கிராமங்களின் (கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான்) கல்வி, விளையாட்டு, சமய உணர்ச்சி, நாகரீகம், பொருளாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மேம்பட தூரநோக்கு சிந்தனையில் எமது முன்னோர்களால் ஆரம்பிக்கப்பட்டது தான் பாலர் ஞானோதய சங்கம்.

எமது கிராமங்களின் இளைய சமுதாயத்தைக் கருத்தில் கொண்டு எமது கிராமங்களின் வளர்ச்சிப்பாதைக்கு முக்கிய பங்காற்றியவர்களால் உருவாக்கியது பாலர் ஞானோதய சங்கமாகும். போருக்கு முன்னைய காலப்பகுதியில் எமது கிராமங்களில் இருந்து சிறந்த கல்விமான்களையும், விளையாட்டு வீரர்களையும், சிறந்த சமய நெறியாளர்களையும், கலைஞர்களையும், சிறந்த வர்த்தகப் பெருமக்களையும், சிறந்த விவசாயிகளையும் உருவாக்குவதற்கு இச் சங்கம் வடிவமைத்த கட்டுமானங்களே காரணம் என்றால் மிகையாகாது. எமது கிராமத்திலிருந்து சிறந்த பொறியியலாளர்கள், சிறந்த வைத்தியர்கள், சத்திரசிகிச்சை நிபுணர்கள், சிறந்த கட்டிடக் கலை வல்லுநர்கள், வர்த்தகப் பெருமக்கள், இலங்கை வானொலிக் கலைஞர்கள், சிறந்த பாடகர்கள், அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்று நாடகக் கலைஞர்கள், கோலாட்ட கலைஞர்கள் அகில இலங்கை விளையாட்டுக் குழுக்களில் பங்குபற்றி (உதைபந்தாட்டம், பூப்பந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டிகள் ) எமது கிராமங்களுக்குப் பெருமை சேர்த்தவர்கள் பலர்.

போரினால் எமது கிராமங்கள் முழுமையாக அழிவடைந்து அனைத்து உடமைகளும் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்படடன. இதன்போது, எமது சங்கத்து உடமைகளும் , ஆவணங்களும் முற்றாக அழிவடைந்து விட்டன. எம்மால் முடிந்தவரை கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் எமது வரலாற்றை ஆவணப்படுத்துகிறோம். இறைவன் கருணையால் எமது 25வது ஆண்டு மலர் கிடைக்கப்பெற்று, எமது வெள்ளிவிழா மலரில் இருந்து முதல் 25 வருடங்களின் தகவல்களை சுருக்கமாகத் தருகிறோம் .

**சங்கம் நிறுவுகை**

மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான். கட்டுவன் ஆகிய முக் கிராமங்களிலுமுள்ள நன்னோக்குடைய சில இளைஞர்கள் ஒருங்கு சேர்ந்து துந்துபி ௵ கார்த்திகை ௴ 10–ந் திகதிக்குச் சரியான கிறீஸ்தாப்தம் 1922–ம் ௵ கார்த்திகை ௴ 23–ந் திகதி மேற் குறித்த சைவமடப் புறச்சாரில் ஒரு கூட்டத்தைக் கூட்டினர், அக்கூட்டத்தில் ஒரு சற்சன சங்கத்தை நிறுவுவதென முடிவு செய்து “பாலர் ஞானோதய சங்கம் என்ற பெயரில் இச்சங்கத்தை நிறுவினர். குறித்த சங்கத்துக்குக் கட்டுவன் திரு.கந்தவனம் பொன்னம்பலம் தலைவராகவும், திரு. சின்னத்தம்பி சரவணமுத்து காரியதரிசியாகவும், திரு. கந்தையா சின்னப்பு தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். அக்காலத்தில் பணங்கிடைப்பது மிக அரிதாயிருந்தது. இளைஞர்களுக்குச் செலவுக்கும் பணம் கிடைப்பதில்லை. ஒவ்வொரு இளைஞனும் மாதந்தோறும் மூன்று சதம் உறுப்புரிமைப் பணம் கொடுக்கவேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டது. இளைஞர்கள் மாதமிருமுறை ஒழுங்காகக் கூட்டங்களை நடாத்தி வந்தனர். வீடுகள் தோறும் பனையோலைக் குட்டான்களைக் கொடுத்துப் பிடிஅரிசி போடுவித்து, மாதம் முடிய அவற்றை எடுத்து ஒன்று சேர்த்து விற்று அதனால் வரும் பணத்தையும் பெற்றுச் சுருக்கமாகவும் நன்னோக்குடனும் செலவுக்கு உபயோகித்தனர். அக் காலத்திலே ஒரு படி அரிசி 18 சதமாக விற்கப்பட்டது. இவ்வித சிரமமான நிலைமையிலும் இச்சங்கம் சிரத்தையுடன் தவறாது நடாத்தப்பட்டு வந்தது.

இதன் பின்னரான அனைத்து ஆவணங்களும் அழிக்கப்பட்டுவிட்டன. இதனால் ஒருசிலரின் கடின உழைப்புகள் இந்த இதழில் தவறவிடப்படுவது கவலைக்குரியது.

சங்கம் தொடங்கிய காலத்தில் இருந்து இடப்பெயர்வு இடம்பெறும் வரை ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்பட்ட நிகழ்வு மாணிக்கவாசகர் குருபூசையாகும் . மாணிக்கவாசக பெருமான் ஞானோதயம் பெற்ற அடிப்படையில் தான் எமது சங்கத்தின் பெயரும் உருவானது. இடப்பெயர்வின் பின் அனைத்தும் அழிந்து நிறுத்தப்பட்டது.

உயர்கல்விக்காகவும், உத்தியோக தேவைகளுக்காகவும் எமது கிராமத்தவர்கள் வெளிநாடுகளில் குடிபெயர்ந்தனர். மலேசியா , இந்தியா , அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு சென்றவர்களில் , இங்கிலாந்து நாட்டுக்கு சென்ற எமது சங்க அங்கத்தவர்கள், 1972இல் எமது அனுமதியுடன் அமரர் திரு. ஆறுமுகம் சிவானந்தசுந்தரம் தலைமையில் ஒரு கிளையை நிறுவினார்கள். எமது கிராமத்துக்கு ஒரு மைதானம் வேண்டும் என்ற எமது கனவை தமது பொருளாதார உதவி மூலம் நனவாக்கியவர்கள் இவர்களே. அன்றிலிருந்து இன்றுவரை இக் கிளையினர் எம்முடன் மிக நெருக்கமாக திட்டமிடல் மற்றும் உதவி வழங்கல் போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். இதே போன்று கனடா , பிரான்ஸ் , சுவிஸ் போன்ற நாடுகளிலும் எம்மூர் மக்கள் சங்கங்களை நிறுவி எமது கிராம வளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

எமது சங்கம், எமது மூன்று கிராமங்களிலும் வாழ்ந்த மக்களின் மேம்பாட்டுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தவேளை, இலங்கையின் சுதேசிய இனங்களின்

எழுச்சிக்காகத் தோற்றம் பெற்ற சிங்கள இனத்தின் முன்னோடி திரு. அநாகரிகதர்மபாலாவும், இஸ்லாமிய இனத்தின் முன்னோடி அறிஞர் திரு. சித்திலெப்பையும், தமிழ்இனத்தின் முன்னோடி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும், தத்தமதுமொழி, மதம், கலை, கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கும், வலுப்படுத்துவதற்குமான முன்னெடுப்புகளை மேற்கொண்டனர்.

இவ்வகையில், சமூகத்தின் கல்வியை மேம்படுத்த சுதேசிய கல்விக்கூடங்களை உருவாக்க முனைந்தனர். 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், ஆறுமுகநாவலர் அவர்கள் சைவத் தமிழ்ப்பாடசாலைகளை நிறுவுவதற்காக எடுத்த முயற்சியால் யாழ்ப்பாணத்தில் கல்விக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஊர்களில் காணப்பட்ட தனவான்கள் பலரும் தம் சொந்த நிலங்களை வழங்கியும், தமது குலதெய்வங்கள் பெயர்களிலும், ஊர்ப்பெரியார்களின் பெயர்களிலும் பாடசாலைகளை நிறுவினார்கள்.

1927 ஆம் ஆண்டளவில் எமது கிராமத்திலும் பாலர்ஞானோதயசங்கத்தினர் பாடசாலை ஒன்றை நிறுவ முயன்ற போது, எமது சங்கக் காணியில் " ஞானோதய வித்தியாசாலை" என்னும் பெயரில் ஆரம்பப் பாடசாலை நிறுவப்பட்டது. பாடசாலைக்கான கட்டிடங்கள் எம்மூர்களின் தனவான்களாலும், மலேயா வாழ் எம்மூரவர்களின் பங்களிப்புடனும் அமைக்கப்பட்டன.

சைவத் தமிழ்ப் பாடசாலைகள் "இந்து போட் இராசரத்தினம்" என எல்லோராலும் அறியப்பட்ட பெரியாரின் தலைமையில் இயங்கிய "சைவ வித்தியா அபிவிருத்திச் சங்க" நிர்வாகத்தின் கீழ் இணைக்கப்பட்டமையால் பாடசாலைச் சொத்துக்கள் பரிமாறப்பட்டன. 1961 ஆம் ஆண்டு நாட்டில் உள்ள பாடசாலைகளை அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் அடிப்படையில், அரசால் பொறுப்பேற்கப்பட்டு அரச பாடசாலையாக மாற்றம் பெற்றது. பாடசாலைக்கு முதல் தலைமை ஆசிரியராக திரு. பொன்னையா அவர்கள் நியமிக்கப்பட்டார் எனவும், ஆசிரியர்களின் ஊதியமும் மற்றும் சங்கத் தேவைகளுக்கும் வீடுவீடாக "பிடி அரிசி" சேகரிக்கும் முறையில் பணம் சேகரிக்கப்பட்டது.

மாணவர் தொகை அதிகரிப்பால் காணி, கட்டிடம் ஆகியவற்றில் காணப்பட்ட பற்றாக்குறை காரணமாக குறித்த காணியில் விரிவுபடுத்த முடியாமையால், 1962 ஆம் ஆண்டு கல்வித் திணைக்களத்துடன் பாலர் ஞானோதய சங்கம், தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினர் கலந்துரையாடியதின் பயனாக ஏற்பட்ட இணக்கப்பாட்டில் பாடசாலையானது மயிலிட்டி தெற்கில் தற்போது இயங்கும் இடத்துக்கும், வெங்காயச் சங்கமானது பாடசாலை முன்னர் இயங்கிய இடத்துக்கும் மாற்றப்பட்டன.

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விவசாய உற்பத்தி கூட்டுறவு முறைமை வெங்காய ஏற்றுமதிச் செயற்படு வழக்கு ஒழிந்துபோன நிலைமையில், 1973 ஆம் ஆண்டளவில் தெல்லிப்பளை பலநோக்குச் சங்க நிர்வாகத்துக்கும் , பாலர்ஞானோதய சங்க நிர்வாகத்துக்கும் ஏற்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய பாலர் ஞானோதய சங்கத்திடம் காணியும், கட்டிடமும் முழுமையாகக் கையளிக்கப்பட்டது, மேற்படி இணக்கப்பாட்டை

எட்டுவதில், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. முருகையா அவர்களும், பாலர்ஞானோதய சங்கத்தின் சார்பின், திரு.சி. நாகலிங்கம் அவர்களும், திரு.K.T. பாலசுப்பிரமணியமும் ஈடுபட்டனர்.

கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான் ஆகிய மூன்று கிராமங்களிலும் வாழ்ந்த மக்கள் ஒரே சமூகத்தை சேர்த்தவர்களாகவும் , தமக்குள் நெருங்கிய உறவுகளைக் கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். எமது சங்கம் கிராமங்களின் வளர்ச்சிக்கான நீண்ட காலத்திட்ட அடிப்படையில் பல உப அமைப்புகளை நிறுவியது. இதற்கான பொருளாதார, நில மற்றும் கட்டிட தேவைகளை சமூகத்தில் வாழ்ந்த பொதுமக்களின் பங்களிப்புடனும், அரச உதவியுடனும் அமைத்துக்கொண்டனர்.

**இவ்வகையில் அமைக்கப்பட்ட நிறுவனங்களாவன :**

1. தனித்துவமான காணி / கட்டிடம் கொண்ட அமைப்புக்கள்

   I. பாடசாலை
   II. ஐக்கிய பண்டக சாலை
   III. கிராமிய வைத்திய நிலையம்
   IV. வெங்காயச் சங்கம் (இது ஆரம்பத்தில் பாலர் ஞானோதய சங்க கட்டிடம் பின்னர் பாடசாலை இயங்கியது)
   V. நெசவுசாலை
   VI. வாசிகசாலை
   VII. அந்தியகால சகாய நிதிச் சங்க வண்டியும், நிறுத்தும் இடமும்
   VIII. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

2. தனித்துவமான கட்டிடம் கொண்டிராத அமைப்புக்கள்–பாலர்ஞானோதய சங்கத்தின் உபபிரிவுகள் (வாசிக சாலையைப் பயன்படுத்தும் உரிமை கொண்டவை)

   I. பாலர் ஞானோதய சங்கம் (1973 ஆம் ஆண்டிலிருந்து தமது கட்டிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.
   II. வாசிகசாலை
   III. கலை உடல் வளர்ச்சிக்கழகம்
   IV. அந்தியகால சகாய நிதிச் சங்கம்
   V. மாதர் சங்கம்
   VI. மத்தியஸ்தர் சங்கம்
   VII. இந்துசமய அபிவிருத்திச் சங்கம்
   VIII. கிராம அபிவிருத்திச் சங்கம்

1973 இல் கட்டிடம் கையளிக்கப்பட்டபின் , அனைத்து உபபிரிவுகளும் இக்கட்டிடத்திலும், வாசிகசாலையிலும் பாலர் ஞானோதய சங்க அனுமதியுடன் தமது சந்திப்புகளை நடாத்தி வந்தன .

(பாலர் ஞானோதய சங்கத்தின் வெள்ளிவிழா மலரிலிருந்து 1947 – 1948)

**சங்க வளர்ச்சியும் முதலாவதாண்டு நிறைவும்**

சங்க அங்கத்தவர்கள் பெரியோர்களைச் சங்கத்திற் சேர்த்து அவர்களின் பண உதவியையும் புத்திமதிகளையும் பெற்றுச் சங்கத்தை நன்கு பலப்படுத்த விரும்பினர். முற்போக்கான இளைஞர்கள் சிலர் காலஞ்சென்ற வறுத்தலைவிளான் ஆசிரியர் திரு. கணபதிப்பிள்ளை சரவணமுத்து அவர்களிடம் சென்று தங்கள் நோக்கத்தை வெளியிட்டனர். இளைஞரது உணர்ச்சித் திறமுணர்ந்த நல்லாசிரியராகிய அவர் வேண்டிய புத்திமதிகளைக் கூறிக் கூட்டங்களில் தாமும் பங்குபற்றினார். “குணசுந்தரம்” எனப் பெயரிய கற்பனைக் கதையினுள்ளீடாகிய மேற்றர நீதிஸ்தல விசாரணை (சுப்ரீம் கோட் விசாரணை)யை “சாம்கோட்'' (Sham Court) எனப்படும் “மாதிரி நீதிஸ்தல விசாரணை ஆக்கி, அதனை நடிக்கச் செய்வதில் பெரிதும் உதவி புரிந்தனர். இவர் செய்த கைம்மாறு கருதாத உகவி எஞ்ஞான்றும் மறக்கக்கூடியதன்று. ஓர் ஆண்டு நிரம்புமுன் இளைஞர்கள் பணம் சேகரித்து விளம்பரம் செய்து பந்தரமைத்து அதில் சாம்கோட் (Sham Court) என்று சொல்லப்படும் நீதிஸ்தல விசாரணையைத் திறம்பட நடாத்திக் காட்டி அங்கு சமூகங் கொடுத்த மக்கள் யாவரையும் களிப்புறச் செய்தனர். இதன் பயனாக இளைஞர்களுக்குப் பெரியோர்களின் உதவியும் ஒருவாறு கிடைத்தது. சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவுவிழா 1924–ம் ஹூ தை மீ 15–ந் திகதி சைவ மடப் புறச்சாரில் நடைபெற்றது. வருட முடிவில் செலவு நீக்கி 6 ரூபா 41 சதம் கையிருப்புப் பணமெனக் காணப்பட்டது. இக்கூட்டத்தில் பல பெரியார்கள் சமூகமாயிருந்தனர். விசேட கூட்டங்களை நடாத்துதற்கு மடப் புறச் சாரின் விஸ்தீரணக் குறைவு தடையாயிருந்தமையால் இளைஞர்கள் மிகவும் வருத்தமுற்றனர். அவ்விடத்துச் சமுகமாயிருந்த காலஞ் சென்ற வியாபாரியார் திரு. சு. கந்தையா அவர்கள் சங்கம் நடாத்துவதற்கென ஒரு விசேடநிலையமமைக்கும் பொருட்டுத் தாம் 250/– ரூபா நன்கொடையாகக் கொடுப்பதாக வாக்களித்தனர். சில பெரியார்களையும் ஒருங்கு சேர்த்து இரண்டாவதாண்டிற்குரிய சங்க நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். மயிலிட்டிதெற்கு ஆசிரியர் திரு. சி. கந்தவனம் அவர்கள் தலைவராகவும், திரு.கந். பொன்னம்பலம் அவர்கள் காரியதரிசியாகவும், வியாபாரியார் திரு. க.கந்தையா அவர்கள் தனாதிகாரியாகவும், திரு. க. சின்னப்பு அவர்கள் உதவித் தனாதிகாரியாகவும் நியமிக்கப்பட்டனர்.

**சங்கத்தின் இரண்டாவதாண்டு**

சங்கத்திற்கென ஒரு நிலம் வாங்கிக் கட்டிடம் அமைப்பதற்குச் சங்க நிர்வாகிகளும் ஊரிலுள்ள சில பெரியார்களும் சேர்ந்து கையொப்பங்களிட்ட "வேண்டுகோள் "பத்திரங்கள் 1924-ம் ஞூ)பங்குனி மீ 24-ந் திகதி அச்சிடுவிக்கப்பட்டன. இப்பத்திரங்கள் உள்ளூர் வாசிகளுக்கும் பிறதேசங்களில் உத்தியோகம் பார்க்கும் எம்மூர் மக்களுக்கும் அனுப்பப்பட்டன. இவ்வேண்டுகோளை அங்கீகரித்துச் சிலர் பண உதவி புரிந்தனர். இவ்வருடத்தில் சங்கம் 22 பகிரங்கக் கூட்டங்களை நடாத்தியது. பல பெரியார்கள் சமூகமளித்துச் சொற்பொழிவுகளாற்றினர். சங்கத்தார் "சச்சிதானந்த இராசயோகிகள்" என அழைக்கப்படும் பிரம்மஸ்ரீ சங்கரசுப்பையர் அவர்களை வரவழைத்துக் கதாப்பிரசங்கம் செய்வித்ததோடு, திருவாலங்காட்டுத் தேர்த் திருப்பணிக்குப் பணமும் சேகரித்துதவினர். ஏழாலை வடக்கு ஆசிரியர் பிரம்ம ஸ்ரீ. பொ. சுந்தர சர்மா அவர்களும் வறுத்தலைவிளான் ஆசிரியர் திரு. க. சரவணமுத்து அவர்களும் ஒவ்வொரு கூட்டத்திற்கும் சமூகந் தந்து வேண்டிய உதவிபுரிந்து இளைஞரை ஊக்கப்படுத்தி வந்தனர். இவ்விருவரிடத்தும் இச்சங்கம் எஞ்ஞான்றும் மறக்கொணாக் கடப்பாடுடையதாகவிருக்கின்றது.

**சமய பாடப் பரீட்சை**

சமயக் கல்வி விருத்தியின் பொருட்டுச் சிறுவருக்காகச் சமய பாடங்கள் வகுத்துப் பரீட்சை நடாத்தி அப்பரீட்சையில் தேறிய மாணவர்களுக்குச் சங்கம் பரிசுகள் கொடுத்து உற்சாகப்படுத்தி வந்தது.

இரண்டாவதாண்டு நிறைவுவிழா 1925-ம் ஞூ மாசி மீ 1-1 திகதி நடந்தேறியது. இவ்வாண்டில் சங்க மண்டபக் கட்டிடத்துக்காகச் சம்பாதிக்கப்பட்ட பணம் 470 ரூபா. வருடாந்தக் கூட்டத்தில் மயிலிட்டி ஆசிரியர் திரு. சி. சுவாமிநாதன் B.A.அவர்கள் சமூகமாயிருந்தார். மூன்றாவதாண்டிற்கு அவரே சங்கத் தலைவராக நியமனம் செய்யப்பட்டனர்.

**சங்கத்தின் மூன்றாவதாண்டு**

இவ்வருடத்தில் 17 பகிரங்கக் கூட்டங்கள் நடைபெற்றன. மகா சிவராத்திரிப் புண்ணியதினத்தன்று சங்க இளைஞர்களால் "மார்க்கண்டேயர் சரித்திரம்" நாடகமாகச் சிறப்புற நடிக்கப்பட்டது. இவ்வருடத்திலும் சமய பாடப் பரீட்சை நடாத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டடன.

**சங்கக் கட்டிட நிலம்**

1925-ம் ஞூ ஆவணி மீ 24-ந் திகதி நொத்தாரிஸ் அ.சோமசுந்தரம் அவர்களால் 2128-ம் இலக்கத்தில் முடிக்கப்பட்ட அறுதிச் சாதனப்படி வறுத்தலைவிளான் " வளமாரி" என்னும் நிலத்தில் 4 பரப்பு 400 ரூபா விலையாகச் சங்கக் கட்டிடத்தின் பொருட்டு வாங்கப்பட்டது.

**சங்க மண்டபம்**

இந்நிலத்தில் சங்க மண்டபக் கட்டிடவேலை ஆரம்பிக்கப்பட்டது. சங்க ஆதரவில் நடைபெற்ற விசேட கூட்டம் ஒன்றில் உபநியாசம் செய்த தெல்லிப்பளை மகாஜன ஆங்கிலக் கல்லூரித் தாபகரும் தலைமை ஆசிரியருமாகிய காலஞ்சென்ற ஆசிரியர் திரு. தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள் இவ்விடத்தில் ஒரு சைவப் பாடசாலை அவசியம் தொடங்கவேண்டும்" என வற்புறுத்திக்கூறிச் சங்கத்தார் உள்ளத்தில் சைவப் பாடசாலையின் அத்திவாரத்தை நிலை நாட்டிச் சென்றனர்.

**சங்க மண்டபத் திறப்பு விழாவும் சங்கத்தின் மூன்றாவதாண்டு நிறைவும்**

மேற்கூறிய இரு விழாக்களும் 1926–ம் ஆு ஆனி மீ 5–ந் திகதி 891 ரூபா செலவு செய்து சிறப்பாக நடைபெற்றன. சங்க மண்டபக் கட்டிடத்துக்காகச் சேர்க்கப்பட்ட தொகை 891 ரூபா 12 சதம்; செலவு 1233 ரூபா 42 சதம் ஆகும். 12 சதம் மேலதிகச் செலவு 342 ரூபா 30 சதம் இத்தொகை தனாதிகாரியாகவிருந்த வியாபாரியார் திரு. க.கந்தையா அவர்களாற் செலவிடப்பட்டது. இவர் தாம் வாக்குப் பண்ணிய ரூபா 250 ஐயும் கொடுத்ததுமன்றிக் கடனும் பெற்றுச் சங்கமண்டப வேலையை முற்றுப்பெறச் செய்தனர். இந்த வருடாந்தவிழாவில் சைவவித்தியாசாலை ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்னும் விடயம் வாதிக்கப்பட்டு, ஈற்றில் ஒரு வருடகால எல்லைக்குள் வித்தியாசாலை ஆரம்பிக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

**சங்கத்தின் நான்காவதாண்டு**

இவ்வாண்டில் 18 பொதுக் கூட்டங்களும் பகிரங்கக் கூட்டங்களும் நடைபெற்றன. சைவ வித்தியாசாலை ஆரம்பிக்கும் நோக்கமாக மீண்டும் ஒரு வேண்டுகோள் பத்திரம் அச்சிடுவித்துப் பணஞ் சேர்ப்பதற்குப் பலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. சங்க விதிகள் திருத்தி அமைத்து அச்சேற்றப்பட்டன. சங்க மண்டபத்தை பெரிதாக்கவும் வித்தியாசாலை யாக்கவும் வேண்டிய வேலைகள் நடைபெற்றன.

**ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை**

வருடந்தோறும் சங்க ஆதரவில் நடைபெற்றுவரும் இக் குரு வருட பூசை இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டுச் செவ்வனே நடாத்தப்பட்டது. பல நூற்றுக்கணக்கான அகதிகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

**கிராமச் சங்கக் கூட்டம்**

மயிலிட்டிக் கோவிற்பற்றுக்குப் பிரத்தியேக கிராம சங்கம் நிறுவப்பட்டபின் அதன் கூட்டங்களை, கிராம சங்கக் கட்டிடம் அமைக்கும் வரைக்கும் சங்க மண்டபத்தில் நடாத்துவதற்கு இச்சங்கம் ஏற்ற உதவிகளைச் செய்து வந்தது.

**சங்க வித்தியாசாலை ஆரம்பமும் சங்கத்தின் நான்காவதாண்டு நிறைவும்**

மேற்கூறிய இரு பெருங்கருமங்களும் 1927–ம் ஞு ஆனி மீ 9–ந் திகதி நடைபெற்றன. இவ்வாண்டில் சம்பாதிக்கப்பட்ட பணம் 986 ரூபா 86 சதம் செலவு 1391 ரூபா 79 சதம்; வரவுக்கு மேற் செலவு 404 ரூபா 93 சதம் ஆகும். இத்தொகையும் தனாதிகாரியாகவிருந்த வியாபாரியார் திரு. க. கந்தையா அவர்களாற் செலவிடப்பட்டது.

**சங்கத்தின் ஐந்தாவதாண்டு**

இவ்வாண்டில் வித்தியாசாலைக் கட்டிடக் குறை வேலைகளை முடிக்க வேண்டியிருந்த மையால் கூட்டங்கள் நடாத்துவதில் கவனம் செலுத்தப்படவில்லை. புதிதாகத் தொடங்கிய வித்தியாசாலைக்குப் பிள்ளைகளைச் சேர்ப்பது சிரமமான வேலையாக இருந்தது. சங்கம் தனது சொந்தப் பணத்தில் மாணவர்களுக்கு வேண்டிய புத்தகஞ் சிலேற்று முதலிய உபகரணங்களை வாங்கிக் கொடுத்துப் பிள்ளைகளை வித்தியாசாலைக்குச் சேர்த்தது. அரசினரின் உதவி நன்கொடை பெறும் வரையும் ஆசிரியர்களின் வேதனம் கொடுக்கும் பொறுப்பும் சங்கத்தின் மேலாயிற்று. கட்டிடவேலையை முடிப்பதற்குச் சங்கப் பஞ்சாயத்தார் 1200 ரூபா கடன்பட்டனர். பண உதவி புரிவதாக வாக்குப் பண்ணிய பலர் அங்ஙனஞ் செய்யத் தவறி விட்டனர். இவ்வித கஷ்ட நிலைமையோடு சங்கமும் வித்தியாசாலையும் நடந்து வந்தன. இத்தருணத்தில் சங்கம் ஆரம்பித்த வித்தியாசாலையைச் சைவவித்தியா விருத்திச் சங்கத்தார் பொறுப்பில் கொடுத்துவிட்டால் அவர்களின் உதவி கிடைக்கு மெனச் சிலர் விரும்பினர்.

**சங்க வித்தியாசாலை சை. வி. வி. சங்கத்துக்குக் கையளிக்கப்பட்டமை**

பாடசாலை வேலையைப் பூர்த்தி செய்வதற்கும் அதற்கு வேண்டிய உபகரணங்களைத் தேடுவதற்கும் ஆசிரியர்களின் வேதனங்களைக் கொடுப்பதற்கும் சங்கத்தில் பணமின்மையால், நிலம், கட்டிடம் முதலியவற்றிற்குப் பொறுப்பாளிகளாகவிருந்த சங்கப் பஞ்சாயத்தார் 1927–ம் ஞு) ஆடி மீ 11–ந் திகதி நொத்தாரிஸ் க. ஐயாத்துரைமுன் 646–ம் இலக்கத்தில் முடிந்த உறுதிப்படி ஒன்பது நிபந்தனைகளுக்கமைவாக வித்தியாசாலையைச் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்துக்குக் கையளித்தனர்.

**மத்திய மயிலிட்டி ஐக்கிய சங்கம்**

இவ்வருடத்தில் இச்சங்கத்தாரின் நன்முயற்சியால் “மத்திய மயிலிட்டி ஐக்கிய சங்கம்” என்னும் பெயருடன் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யும் சங்கம் ஒன்று கமக்காரரின் நன்மையை நாடி ஸ்தாபிக்கப்பட்டது. இதன் வரலாற்றைப் பிறிதோரிடத்திற் காண்க.

**தபாற் பெட்டி**

அக்காலத்தில் கடிதங்களை அனுப்பும் பொருட்டு எம்மூர் மக்கள் இரண்டு மைலுக்கப்பாலுள்ள தெல்லிப்பளைத் தபால்நிலையத்துக்குச் செல்ல வேண்டியவரா யிருந்தார்கள். இச் சிரமத்தை நன்குணர்ந்த சங்கத்தார் அரசினருடன் வாதாடி மயிலிட்டி தெற்கு, கட்டுவன் சந்திக்கு அருகாமையில் வைக்கப்பட்டிருக்கும் தபாற்பெட்டியை 1927 அமைப்பித்தனர்.

### சங்கத்தின் சிரமமான காலம்

சங்கம் பலமடைந்து நற்பயனைக் கொடுப்பதற்கு வித்தியாசாலையும் அதன் ஆசிரியரும் உதவியாயிருப்பார் எனச் சங்கம் நம்பியிருந்தது. ஆனால் தெய்வசங்கற்பத்தாற் போலும் நம்பிக்கை மாறிற்று. ஐந்தாண்டுச் சிறுவன் போன்ற சங்கத்திற்கு அளவற்ற சிரமங்கள் நிகழலாயின. வித்தியாசாலை ஆசிரியருக்கும் சங்க நிர்வாகிகளுக்குமிடையே ஏற்பட்ட விவாதங்கள் காரணமாகச் சங்கத்திலும் பிரிவுகள் ஏற்படலாயின. சங்கத்தின் ஐந்தாவதாண்டு நிறைவுவிழா 1928–ம்ஹ சித்திரை மீ 9–ந் திகதி நடைபெற்றது. இவ்வாண்டிற் சேர்ந்த பணம் 551 ரூபா 15 சதம், செலவு 1770 ரூபா 04 சதம், மேலதிகச் செலவு 1218 ரூபா 89 சதம். இது சங்கப் பஞ்சாயத்தாரில் ஒருவரும் தனாதிகாரியுமாகிய திரு.க.சுந்தையா அவர்களாலும், திரு.சி. கந்தவனம், திரு. க. பொன்னம்பலம் என்பவர்களாலும் கடன் பட்டுச் செலவிடப்பட்டது. மேற் காட்டிய கஷ்டங்களாற் சங்கத்தார் பணம் சம்பாதிக்கவும் கடனை நீக்கவும் இயலாதவராயினர். ஆறாவதாண்டிற்கு மறுபடியும் ஆசிரியர் திரு.சி.கந்தவனம் அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இக் கூட்டத்தில் வித்தியாசாலையைச் சை. வி. வி. சங்கத்துக்குப் பஞ்சாயத்தார் கையளித்தமை பிழையெனவும் அதைத் திரும்பவும் சங்கத்தார் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### சங்கத்தின் ஆறாவதாண்டு

மேற்கூறிய வருடாந்தக் கூட்டத்தின்பின் சங்கத்தில் இன்னும் கூடிய பிரிவு ஏற்பட்டது. எதிர்க் கூட்டத்தார் 1928–ம் ஹ சித்திரை மீ 25–ந் திகதி ஓர் வருடாந்தக் கூட்டத்தை நடாத்தினர். இதன் பயனாகச் சங்கக் கூட்டங்கள் கூட்டுவதற்கு வித்தியாசாலையில் இடவசதி தடைப்பட்டது. இதன்பின் சங்கம் ஒரு விசேட பொதுக்கூட்டத்தை 1928–ம் ஹ வைகாசி மீ 16–ந் திகதி கூட்டியது. இக்கூட்டத்தில் முன் நியமிக்கப்பட்ட சங்க உத்தியோகஸ்தர் நீக்கப்பட்டனர். கட்டுவன் திரு. சி. கார்த்திகேசு அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு காரிய நிர்வாகசபை நியமிக்கப்பட்டது. சங்கத்தின் இழந்த உரிமைகளைத் திரும்பவும் பெற்றுக்கொள்ளும் நோக்கமாக, இச் சங்கப் பஞ்சாயத்தாருக்கும், சை. வி. வி. சங்கத் துக்கும் எதிராக ஒரு வழக்கைத் தொடர வேண்டுமெனச் சங்கம் அனுமதி அளித்தது, இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் பெரிய நீதி ஸ்தலத்தில் 1928–ம் ஹ ஆடி மீ 2–ந் திகதி 23851–ம் இலக்கத்தில் சங்கத்தலைவர் திரு.சி.கார்த்திகேசு அவர்களால் ஒரு வழக்குத் தொடரப்பட்டது.

### மடத்துச் சாரில் மறுபடியும் கூட்டங்கள்

சங்கம் தனது உரிமைகளைச் சட்ட பூர்வமாகப் பெற்றுக் கொள்ளும் வரையும் மறுபடியும் கூட்டங்களை மடத்துச் சாரில் நடாத்தி வந்தது. அங்கத்தவர்கள் வழக்குச் சம்பந்தமாகத் தங்கள் காலத்தைச் செலவிட்டமையால் கூட்டங்களைக் கூட்ட இயலவில்லை. எனினும் இவ்வாண்டில் நாலு பகிரங்கக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**அனுதாப சம்பவம்**
**(திரு.க.கந்தையா அவர்களின் மரணம் )**

சங்கத்தின் தனாதிகாரியாகவிருந்து தமது நன்கொடையுடன் பிறரிடம் பணஞ் சேர்த்தும், போதாமைக்குக் கடன்பட்டும், நிலம் வாங்கவும், சங்கமண்டபம் கட்டவும், வித்தியாசாலையாக்கவும் அருந்தொண்டாற்றிவந்த வியாபாரியார் திரு.க.கந்தையா அவர்கள் காத்திராப் பிரகாரம் உண்டான நோய் காரணமாக 1928– ௵ ( கார்த்திகை ௴ 9 ந் திகதி தமது பூதவுடம்பை நீத்துப் புகழுடம் பெய்தினார். கைம்மாறு கருதாது இவர் செய்துவந்த தொண்டு சங்கத்தாலும், எம்மூரவர்களாலும்,பிற் சந்ததியார்களாலும், எஞ்ஞான்றும் பாராட்டப்படத்தக்கது.

**சங்க வழக்கு விசாரணை**

1929–ம் ௵ பங்குனி ௴ 26–ந் திகதி வழக்கு விசாரணை ஆரம்பமானது. காலஞ்சென்ற நியாயதுரந்தரர் தெல்லிப்பளை திரு. சி.சுப்பிரமணியம் அவர்களும், கொழும்பு நியாயவாதி திரு. A. ஞானப்பிரகாசம் அவர்களும் வழக்கை நடாத்தினர்.

சங்கத்தின் ஆறாவதாண்டு நிறைவுவிழா 1929–ம் ௵ சித்திரை ௴ 21–ந் திகதி மடத்துக்கருகாமையில் அமைக்கப்பட்ட பந்தரில் நகர் காவலர் (பொலிஸ்) பாதுகாப்புடன் நடைபெற்றது. இவ்வாண்டு சம்பாதித்த பணம் 456 ரூபா 50 சதம், செலவு 583 ரூபா 25 சதம், மேலதிகமான செலவு 126 ரூபா 75 சதம் ஆகும். ஏழாவதாண்டிற்கு மீண்டும் திரு. சி.கார்த்திகேசு அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

**சங்கத்தின் ஏழாவது ஆண்டு**

வித்தியாசாலை சம்பந்தமாகத் தொடரப்பட்ட வழக்கு இவ்வாண்டில் 15 தினங்களாக விசாரிக்கப்பட்டது. சங்க அங்கத்தினர் பலர் விசாரிக்கப்பட்டனர். வழக்குச் செலவுக்காகச் சங்க அங்கத்தினரிடமிருந்தும், பல அபிமானிகளிடமிருந்தும் 935 ரூபா 28 சதம் சேர்க்கப்பட்டது. இத்துடன் 1536 ரூபா 06 சதம் கடன் வாங்கியும் செலவிடப்பட்டது. வழக்குத் தொடர்ந்த சங்கமே சரியான சங்கமென்றும் வித்தியாசாலையைச் சை. வி.வி. கையளித்த உறுதியில் கண்ட நிபந்தனைகளுக்கமைவாக வித்தியாசாலை சை. வி. வி. சங்கத்தார் பொறுப்பிலிருக்குமென்றும், 1929–ம் ௵ ஐப்பசி ௴ 21–ந் திகதி தீர்ப்புக் கூறப்பட்டது. வித்தியாசாலை விஷயமாகக் கூறப்பட்ட தீர்ப்பில் திருப்தி கொள்ளாமையால் மீண்டும் கொழும்பு உயர்தர நீதிமன்றத்துக்கு மனுச்செய்யப்பட்டது. இக்காரணத்தால் சங்கத்தின் ஏழாவதாண்டு நிறைவுவிழா காலந்தவறி 1930–ம் ௵ ஆவணி ௴16–ந் திகதி மடத்துக்கணிதாய் அமைக்கப்பட்ட பந்தரில் நடைபெற்றது. இவ்வருட வரவு 935 ரூபா 28 சதம், செலவு 2441 ரூபா 34 சதம் ஆகும். கடன் பட்டு:வழக்கின் பொருட்டுச் செலவிட்டதொகை 1536 ரூபா 06 சதம் ஆகும்.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

வலிகாமம் வடக்குப் பகுதிக்கு முன் இருந்ததுபோல ஒரு விசேட மணியகாரன் நியமிக்கப்படவேண்டுமென்றும், கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான் என்னும் முக்கிராம மக்களின் நலத்திற்காக ஒரு வைத்தியசாலையும் உபதபாற் கந்தோரும் அமைப் பித்துத் தரும்படி அரசினரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் இக்கூட்டத்திற் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**சங்கத்தின் எட்டாவதாண்டு**

உயர்தர நீதிமன்றத்துக்குச் சங்கம் செய்துகொண்ட மனு விஷயத்தில் பணம் செலவிடமுடியாது சகலரும் சோர்ந்துவிட்டனர். சில அபிமானிகள் இதற்கும் கடன் பட்டுச் செலவு செய்தனர். யாழ்ப்பாணம் பெரிய நீதி ஸ்தலத்தில் கூறப்பட்ட தீர்ப்பின்படியே உயர்தர நீதிமன்றத் தீர்ப்பும் 1930-ம் ஆு) ஐப்பசி *மீ* வெளிவந்தது. இவ் வழக்கில் சங்கத்துக்காக நேர்மையாகவும் திறமையாகவும் கடமையாற்றிச் சங்க உரிமைகளைப் பெறச் செய்த நியாயந் தார் காலஞ்சென்ற திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும்,நியாய வாதி திரு.A.ஞானப்பிரகாசம் அவர்களுக்கும், பலவித உதவிகள் செய்த நியாயதுரந்தரர் மல்லாகம் திரு.அ.அப்பாத்துரை அவர்களுக்கும் சங்கம் எக்காலத்தும் மறக்கொணாக் கடப்பாடுடையதாகவிருக்கின்றது.

நீதி ஸ்தலத் தீர்ப்பின்படி உறுதி நிபந்தனைகளுக்கமைவாகச் சங்கம் எட்டாவதாண்டு நிறைவுவிழாவைச் சங்க வித்தியாசாலையில் 193-ம் ஆு ஆனி மீ 13-ந் திகதி நடாத்த முயற்சி செய்தது. ஆனால் மீளவும் கூட்டம் நடாத்துதற்குப் பலவிதத் தடைகள் உண்டாயின. அங்கத்தவர் விரும்பியவாறு கூட்டம் வித்தியாசாலைக் கருகாமையிலிருந்த ஒரு திருமணப் பந்தரில் நடைபெற்றது. வரவு செலவுக் கணக்கின்படி வரவு 47 ரூபா 35 சதம் செலவு 592 ரூபா ஆகும். வரவுக்குமேல் செலவு 544 ரூபா 65 சதம் ஆகும். சென்ற ஆண்டும் இவ்வாண்டும் 2080 ரூபா 71 சதம் கடன் வாங்கிச் செலவு செய்யப்பட்டது.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

**1. மயிலிட்டி தெற்குக் கிராம விதானை**

மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான் என்னும் கிராமங்களுக்கு முன்னைய நியமனம் போல மீண்டும் ஒரு கிராம விதானையார் நியமிக்கப்படல் வேண்டுமெனவும், இக்கிராமங்களை வயாவிளான் கிராம விதானையாரின் பகுதியோடு சேர்த்தமையால் இக் கிராம மக்கள் இடர்ப்படுகின்றனரெனவும் அரசினருக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**2. வாசிகசாலை**

நம் கிராம வாலிபர்களினதும் பொது மக்களினதும் முன்னேற்றங்கருதி ஒரு வாசிகசாலை ஆரம்பிக்க வேண்டுமெனவும் தீர்மானஞ் செய்யப்பட்டது. இதன் பிரகாரம்

சங்கத்தினதும் ஏனைய அபிமானிகளினதும் உதவியோடு வாசிகசாலையொன்று 1932–ம் ஞூ பங்குனி மீ தொடங்கப்பட்டுச் செவ்வனே நடாத்தப்படுகின்றது.

**சங்கத்தின் ஒன்பதாவதாண்டு**

இவ்வாண்டில் மூன்று பகிரங்கக் கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றன. சை. வி.வி. சங்கத்தாருக்குச் சில விண்ணப்பப்பத்திரங்கள் எழுதி அனுப்பியதன் பேறாக 1931–ம் ஞூ ஆவணி மீ 20–ந் திகதி தொடக்கம் சங்கக் கூட்டங்கள் வித்தியாசாலைத் தலைமை ஆசிரியரிடம் திறப்புப்பெற்று வித்தியாசாலையில் நடாத்தப்பட்டன.

ஒன்பதாவதாண்டு நிறைவுவிழா 1932–ம் ஆண்டு வைகாசி மீ 20–ந் திகதி சங்க வித்தியாசாலை மண்டபத்தில் மகாவித்துவான் கணேசையர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்வாண்டில் வரவு 72 ரூபா 83 சதம் ஆகும். செலவு 65 ரூபா 31 சதம் ஆகும். கையிருப்பு 7 ரூபா 52 சதம் ஆகும். இவ் வருடமும் வழக்குச் செலவுக்கு ரூபா 100 கடன் வாங்கப்பட்டது. வழக்குச் செலவு கணக்காக கடந்த ஆண்டுக் கடன் பணமும் ஒருங்கு சேர்ந்து 2180 ரூபா 71 சதம் இருந்தது. பத்தாவதாண்டிற்கு மகாவித்துவான் பிரம்மஸ்ரீ. சி. கணேசையர் அவர்கள் சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

**சங்கத்தின் பத்தாவதாண்டு**

சங்கக் கூட்டங்களை ஒழுங்குபட நடாத்தவும் சங்கக் கடன்களைத் தீர்க்கவும் முயற்சி செய்யப்பட்டது. ஆயினும் நம் தேசத்தில் பணம் குறைவுற்றமை காரணமாக முயற்சிகள் பயனளிக்கவில்லை. இவ் வருடத்தில் ஒரு பகிரங்கக்கூட்டமும், பல காரிய நிர்வாகக்கூட்டங்களும் நடைபெற்றன. பத்தாவதாண்டு நிறைவுவிழா, சங்கத்தலைவர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ. சி. கணேசையர் அவர்களின் தலைமையில் 1933–ம் ஞூ வைகாசி மீ 6 – ந் திகதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வருட வரவு 32 ரூபா 95 சதம் ஆகும். செலவு 9 ரூபா 47 சதம் ஆகும். சென்ற வருடக் கையிருப்பும் இவ்வருடக் கையிருப்பும் சேர்ந்த மொத்தப் பணம் 31 ரூபா ஆகும். வழக்கின்பொருட்டுக் கடன்பட்டுச் செலவிடப்பட்ட பணம் 2180 ரூபா 71 சதம் கொடுத்துத் தீர்க்கப்படாமல் சில அங்கத்தினர் பொறுப்பிலிருந்தது.

**சங்கத்தின் பதினொராவதாண்டு**

இவ்வாண்டில் யாழ்ப்பாணம் நகாசபைத் தலைவராகவிருந்த திரு.R.R.நல்லையா அவர்கள் தலைமையில் ஓர் பகிரங்கக்கூட்டம் நடாத்தப்பட்டது. உயர்தர நீதிமன்றத்து நீதியரசர் கௌரவ M.T.அக்பார் அவர்கள் “சமூகத் தீங்குகளைத் தடுத்தல்” என்னும் பொருள்பற்றி ஒரு சிறந்த சொற்பொழிவு செய்தார்.

**சங்க உரிமைகள்**

சங்கம் கூட்டங் கூட்டுவதிலும், குருபூசை நடாத்துவதிலும், பொது நன்மைக்கேதுவான வேறு பல காரியங்களைச் செய்வதிலும் ஏற்பட்ட கஷ்டங்களைக் குறிப்பிட்டு சை. வி. வி.

சங்கத்தாருக்கு மனுக்கள் அனுப்பி அவர்களை நேரில் சந்தித்துப் பேசியதன் பயனாகக் குறித்த சங்கத்தாரால் வித்தியாசாலையின் படலைத் திறப்பு இச்சங்கத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. சங்கத்துக்குரிய நிபந்தனைகளை நிறைவேற்றவும் அவர்கள் உடன்பட்டனர்.

### சங்கக் கடன்

வித்தியாசாலை வழக்குச் சம்பந்தமாகச் சங்கத்துக்கு ஏற்பட்ட 1218 ரூபா கடன் 2180 ரூபா 71 சதம் ஆகும். வித்தியாசாலைக் கட்டிடத்தைப் பூரணமாக்குதற்குக் கடன்பட்டுச் செலவிட்ட பணம் 89 சதம். இருவகையும் சேர்ந்த மொத்தக் கடன் தொகை 3399 ரூபா 60 சதம் ஆகும். இத்தொகை சங்கத்தில் அபிமானங்கொண்ட சில அங்கத்தவர்களால் கடன்பட்டுச் செலவிடப்பட்டது. இக் கடனைத் தீர்க்கவேண்டுமெனப் பன்முறை சங்கத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் பணவிஷயமாக அபிப்பிராயபேதங்கள் ஏற்படலாயின. இக்காரணத்தால் சங்கமும் நிலைகுன்றிப் போகுமோ எனப் பலர் எண்ணினர். இதை நன்குணர்ந்த திரு. சி. கந்தவனம், திரு. க பொன்னம்பலம் என்பவர்கள் சங்கம் நிலைத்திருந்து நம் ஊரவர்களுக்கு வேண்டிய சேவை புரியவேண்டுமென்னும் பேரவாவினால் தாங்கள் குறித்த கடனைக் கொடுத்துத் தீர்க்க உடன்பட்டனர். அங்ஙனமே சில ஊர் அபிமானிகள் உதவியுடனும் கடனும் கொடுக்கப்பட்டது. இருவரும் பொறுப்பேற்றபின் அங்கத்தினர் படிப்படியாகச் சங்கத்தில் ஆர்வம் காட்டத் தலைப்பட்டனர். பதினொராவதாண்டு நிறைவுவிழா 1934ம் ஆண்டு ஆவணி *மீ* சங்கத்தலைவர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ.சி. கணேசையர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்வருட வரவு 108, ரூபா 72 சதம் ஆகும். செலவு 58 ரூபா 44 சதம் ஆகும். கையிருப்பு 50 ரூபா 28 சதம் ஆகும்.

### சங்கத்தின் பன்னிரண்டாவதாண்டு

இவ்வாண்டில் காரிய நிர்வாகசபையார் பலமுறை கூடிக் கிராம மக்களின் நலனுக்காக வெள்ளவாய்க்கால் வெட்டுதல், மயிலிட்டி தெற்குப் பகுதிக்கு விதானையார் நியமனம், உப தபாற்கந்தோர் அமைத்தல் ஆகிய விஷயங்களைக் குறித்து மந்திரிமாருக்கு மனுக்கள் அனுப்பிவைத்தனர். அரசாங்க சபையில் காங்கேசன் துறைப் பகுதிக்குப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்ட ஸ்ரீமான். சு.நடேசபிள்ளை B. A., B. L., F. R. E.S. அவர்களுக்கு ஒரு வரவேற்பு உபசரணை நடாத்தப்பட்டது. கதாப்பிரசங்கம் ஒன்றும் இராமாயணப் பிரசங்கம் ஐந்தும் நடைபெற்றன. பன்னிரண்டாவதாண்டு நிறைவு விழா 1935–ம் ௵ ஆனி *மீ* 8–ந் திகதி தலைவர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ.சி.கணேசையர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்வாண்டு வரவு ரூபா 170 சதம் 70. செலவு ரூபா 108 சதம் 99. கையிருப்பு ரூபா 61 சதம் 71 ஆகும்

### தீர்மானங்கள்

கிராமமக்களின் நன்மைக்காகக் கைத்தொழிற்சாலை ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும், முன்கேட்ட வைத்தியசாலை, உப தபாற்கந்தோர், வெள்ளவாய்க்கால்,

மயிலிட்டி தெற்குக் கிராம விதானை நியமனம் ஆகியவற்றைக் குறித்து மீண்டும் அரசினரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**சங்கத்தின் பதின் மூன்றாவதாண்டு**

வருடாந்தக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் காரியநிர்வாக சபையார் வேண்டிய ஒழுங்கு முயற்சிகள் புரிந்தனர். இவ்வாண்டில் வெள்ளத்தால் ஏழைமக்களுக்குப் பெரு நட்டங்கள் ஏற்பட்டன. அரசினருக்குப் பல மனுக்கள் எழுதி வற்புறுத்தியமையால் சிரமப்பட்டவர்களுக்கு நிவாரணம் ஒருவாறு அளிக்கப்பட்டது. இத்தருணத்தில் வெள்ளவாய்க்காலின் அவசியம் அரசினருக்கு நன்கு வற்புறுத்தப்பட்டது. பதின்மூன்றாவதாண்டு நிறைவு விழா 1936–ம் ஆண்டு ஆனி *மீ* 6–ம் 7 – ம் திகதிகளில் நடைபெற்றது. இவ்வருடம் வரவு ரூபா 196 சதம் 19 ஆகும். செலவு ரூபா 87 சதம் 10 ஆகும். கையிருப்பு 109 ரூபா 09 சதம் ஆகும்.

**தீர்மானப் பயன்**

பொதுமக்களிடம் கிராமவரிப்பணம் அறவிடுவதை அரசினர் உடனே நிறுத்தவேண்டுமென்றும் பனங்கட்டி செய்வதன்பொருட்டு எவ்வித நிபந்தனையுமின்றிப் பதநீர் இறக்க அனுமதிக்க வேண்டு மென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வறியவர், செல்வர், வளர்ந்தவர், மாணவர் என்ற பேதமின்றி எல்லோரிடமும் தலைவரிப் பணம் அறவிடுதல் அநீதியாகும் என்பதைச் சங்கம் 1936–ம் ஆண்டு தொடக்கம் அரசினருக்கு எடுத்துக்காட்டி வந்தது. 1947–ம் கிராமவரிப்பணம் அறவிடும்முறை நீக்கப்பட்டது.

**சங்கத்தின் பதின் நான்காவதாண்டு**

இவ்வாண்டில் மாணவர்களுக்கிடையில் ஒரு பேச்சுப்போட்டி நடாத்துவதற்கு வேண்டிய முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வருட தினத்தன்று மாணவர்களுக்கிடையே விளையாட்டுப்போட்டி நடாத்தித் திறமைவாய்ந்தவர்களுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. சிவராத்திரிப் புண்ணிய தினத்தில் சங்க வித்தியாசாலையில் நான்கு ஜாமப் பூசைகளும் நடாத்தப்பட்டன. சிறுவர்களால் சாவித்திரி சத்தியவான் சரிதம்" நாடகமாக நடிக்கப்பட்டது.

**வெள்ளவாய்க்கால்**

கிராமவாசிகளின் நலன் கருதி வறுத்தலைவிளான் கம்மிப்பதிக் குளத்திலிருந்து கிழக்கு நோக்கிக் கட்டுவன், மயிலிட்டிதெற்கு வரையும் ஒரு வாய்க்கால் வெட்டி, மயிலிட்டி தெற்குச் சந்தியிலிருந்து வடக்கு நோக்கிக் கரைவரையும் செல்லும் தெரு (D. R. C. Road) ஓரமாக வெட்டும் வாய்க்காலுடன் இணைத்து வெள்ளத்தைக் கடலுள் வீழச் செய்யும் திட்டத்துடன் வெள்ள வாய்க்காலமைக்க அரசினர் உடன்பட்டனர். இதற்கு வேண்டிய நிலப்பகுதிகள் பகிரங்க அளவைப் பகுதியாரால் அளந்து படம் போடப்பட்டன. பதினான்காவதாண்டு நிறைவு விழா 1937ம் ஆண்டு, வைகாசி *மீ* 22–ந் திகதி நடைபெற்றது. மாணவர்களுக்கிடையில் பேச்சுப்போட்டி நடாத்தி நான்கு பிரிவிலும் மாணாக்கர் பன்னிருவர் பரிசுக்குரியவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். அடுத்தநாளாகிய 23ந் திகதி பரிசுபெற்ற மாணவர்களும் சங்க

நிர்வாகிகளும் அடங்கிய கூட்டு நிழலுருவ படம் ஒன்று பிடிக்கப்பட்டது. இவ்வாண்டு சேர்க்கபட்ட பணம் 231 ரூபா 19 சதம். செலவு 151 ரூபா 11 சதம். கையிருப்பு 80 ரூபா 8 சதம் ஆகும்.

### நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

சென்ற ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களோடு இவ்வாண்டில் கட்டுவன் கிராம மக்களின் பொருளாதார நிலையை அரசினர் விசாரணை செய்து குறைகளை நீக்குவற்கு வேண்டிய நன்முயற்சிகளைச் செய்யவேண்டுமெனவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### சங்கத்தின் பதினைந்தாவதாண்டு பண்ணோடு தேவாரமோதல்

பண்ணோடு தேவாரமோதக் கற்றுக்கொடுக்க ஒரு இசை வகுப்புத் தொடங்கப்பட்டது. குப்பிளான் இசைத்தமிழ் வித்துவான் திரு. செல்லத்துரைப்பிள்ளை அவர்கள் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவ்வகுப்பில் பல சிறுவர்கள் சேர்ந்து கற்று மிக்க தேர்ச்சி பெற்றனர். இவ்விசைவகுப்பில் அருந்தொண்டாற்றிய பிள்ளை அவர்களை என்றும் மறவோம்.

### உபதலைவர் திரு.வே.நாகமுத்து அவர்களின் பிரிவு

சங்கத்திற்குப் பல உதவிகள் புரிந்து தலைவராகவும் உப தலைவராகவும் கடமையாற்றிய, சுதேச வைத்தியரும் சைவாசாரானுஷ் டான சீலருமாகிய ஸ்ரீமத் வேலுப்பிள்ளை நாகமுத்து அவர்கள் இவ்வாண்டில் சிவபதமடைந்தார். பதினைந்தாவதாண்டு, நிறைவு விழா 1938ஆம் ஆண்டு சித்திரை *மீ* 13இல் ஆரம்பமாகி மூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெற்றது. 13–ந் திகதி விளையாட்டுப் போட்டியும், 14–ந் திகதி பேச்சுப் போட்டியும், 15–ந் திகதி தேவாரப்போட்டியும், ஏனைய நிகழ்ச்சிகளும் நடந்தேறின. இவ்வருட வரவு 174 ரூ.33 சதம் செலவு 88 ரூ.17 சதம். கையிருப்பு 86 ரூபா 14 சதம் ஆகும்.

### சங்கத்தின் பதினாறாவதாண்டு

காரிய நிர்வாகசபை பலமுறை கூடிச் சங்கம் மேற்கொள்ள வேண்டிய கருமங்களைக் கவனிக்கப் பல உபசபைகளை ஆக்கியது.

### ஸ்ரீ கணேச வாசகசாலைக் கட்டிடம்

சங்கத்தினதும் ஏனைய அபிமானிகளினதும் உதவியோடு நடந்து வந்த வாசிகசாலைக்கு, சங்க வித்தியாசாலை நிலத்தில் ஒரு செவ்விய கட்டிடம் அமைக்கப்பட்டது. கட்டிடத் திறப்புவிழா யாழ்ப்பாணம், Dr. சி. சுப்பிரமணியம் அவர்களால் நிறைவேற்றப்பட்டது. இவ் வாசிகசாலைக்கு "ஸ்ரீ கணேச வாசகசாலை" எனப் பெயரிடப்பட்டது.

**வித்துவ சன்மானம்**

சங்கத் தலைவர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களின் "சஷ்டியப்த பூர்த்திவிழா"வின்போது சன்மானமாக யாழ்ப்பாண மக்களால் அளிக்கப்பட்ட பொற்கிழிக்குச் சங்கத்தாரும் 75 ரூபா கொடுத்துதவினர்.

**குற்ற நிவாரணச் சபை**

இவ்வாண்டில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் கொலை, களவு முதலிய துர்ச்செய்கைகள் நடந்தன. அதனால் அடைந்த சிரமங்களை கண்ணுற்ற சங்கம் கூட்டங் கூட்டிக் குற்ற நிவாரணச் சபையொன்றை அமைத்தது. இச்சபை தொண்டர் படையைத் திரட்டிப் பலகாலமாக இராக்காலங்களில் காவல் புரிந்து கள்வரின் தீய செயல்களைத் தடுத்து நன்மை புரிந்தது.

**கிளை வைத்தியசாலை ஸ்தாபனம்** (Visiting Dispensary)

1929–ம் ஆண்டு தொடக்கம் இச்சங்கமும் வேறு பலரும் எடுத்த முயற்சியின் பயனாக அரசினர் ஓர் கிளை வைத்தியசாலையைக் கட்டுவன் சந்திக்கும் வயாவிளான் சந்திக்குமிடையில் சங்கானை வல்லைத்தெருவிலமைத்தனர்.

சங்கத்தின் பதினாறாவதாண்டு நிறைவுவிழா 1939–ம் ஆண்டு சித்திரை மீ 29–ம், 30–ம் திகதி நடைபெற்றது. இது 29–ந் திகதி பேச்சுப் போட்டியும் 30–ந் திகதி ஏனைய சங்க நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இவ்வாண்டில் வாவு 305 ரூபா 59 சதம் செலவு 259 ரூபா 15 சதம் கையிருப்பு 46 ரூபா 14 சதம் ஆகும்.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

நிரப்பப்படாதிருந்த கட்டுவன் விதானையாரின் பதவிக்குக் கட்டுவனிலுள்ள தகுதியான ஒருவரை நியமிக்கும்படி மாகாண அதிபரைக் கேட்டுக்கொள்ளுவதாக ஒரு தீர்மானமும், வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

**சங்கத்தின் பதினேழாவதாண்டு கட்டுவன் கிராம விதானையார் நியமனம்**

கட்டுவன் கிராம விதானையாராகவிருந்து இளைப்பாறிய திரு. க. அப்பாக்குட்டி அவர்களின் பதவிக்குப் பதினொரு விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பப்பட்டன. அக்கால மாகாண அதிபர் திரு. R.B. நாஷ் அவர்கள் கிராமமக்களின் விருப்பத்துக்கு மாறாக அக்காலத்திலிருந்த கச்சேரி முதலியாரின் விருப்பத்திற்கிணங்க வீமன்காம வாசி ஒருவரை 1939–ம் ஆண்டு வைகாசி மீ 27–ந் திகதி அப்பதவிக்கு நியமனம் செய்தார். உடனே சங்கமும் கிராமத்தவர்களும் கிளர்ச்சி செய்தனர். அக்காலத்தில் உள்நாட்டு மந்திரியாகவிருந்த சேர் பான் ஜயதிலகா அவர்களுக்கு 1939–ம் ஆண்டு வைகாசி மீ 29 திகதி ஓர் மனு அனுப்பப்பட்டது. அவ்வாண்டில் சங்கக் காரியதரிசியாகவிருந்த திரு. க. பொன்னம்பலம் அவர்களும், திரு. த. சீவரத்தினம் அவர்களும் கொழும்பு சென்று மந்திரியாரையும் ஏனைய அரசாங்கசபை அங்கத்தினரையும் கண்டு சம்பாஷித்து மாகாண

அதிபரால் நடாத்தப்பட்ட கிராம விதானை நியமனத்திலுள்ள குறைகளை எடுத்துக்காட்டினர். இதன் பெறுபேறாக நியமனம் அழிக்கப்பட்டது. மீள விண்ணப்பப்பத்திரங்களை மாகாண அதிபர் ஏற்று திரு. ந.நாகலிங்கம் அவர்களைக் கிராம விதானையாக 1939– ஆவணி *மீ* 31 திகதி நியமித்தனர். சங்கத்தின் பதினேழாவதாண்டு நிறைவு விழா 1940ம் ஆண்டு ஐப்பசி*மீ* 13 திகதி நடைபெற்றது. இவ்வாண்டில் வரவு 112 ரூபா 82 சதம், செலவு 81 ரூபா 52 சதம், கையிருப்பு 31 ரூபா 30 சதம் ஆகும்.

### சங்கத்தின் பதினெட்டாவதாண்டு

#### மயிலிட்டிதெற்கு, வறுத்தலைவிளான் என்னும் கிராமங்களுக்கு பிரத்தியேக கிராம விதானை நியமனம்

1929ம் ஆண்டு தொடக்கம் சங்கம் பலமுறைகளில் வேண்டிக் கொண்ட இவ் வேண்டுகோளை நிறைவேற்ற அரசினர் உடன்பட்டனர். மாகாண அதிபர் விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுச் சங்க உபதலைவர்களில் ஒருவராகயிருந்த திரு பூ. பத்திநாதர் அவர்களைச் சங்கத்தாரின் வேண்டுதலின் பேரிலும் பலவித தகுதிகள் நோக்கியும் 1940ம் ஆண்டு மார்கழி *மீ* 5ம் திகதி மேற்குறித்த கிராம விதானையாராக நியமித்தனர்.

### வெள்ளவாய்க்கால்

பல ஆண்டுகளாக வெட்டித் தரும்படி கேட்டுவந்த வெள்ளவாய்க்காலை வெட்டுவதற்கு வேண்டியதான நிலப்பகுதியை விலைக்கு வாங்கப் பணம் ஒதுக்கியிருப்பதாக அரசினர் அறிவித்தனர்.

பதினெட்டாவதாண்டு நிறைவுவிழா 1941ம் ஆனி *மீ* 22ம் திகதி நடைபெற்றது. இவ்வாண்டு வரவு ரூபா 91 30 சதம் செலவு 89 ரூபா 45 சதம் கையிருப்பு 1 ரூபா 82 சதம் ஆகும்.

### சங்கத்தின் பத்தொன்பதாவது இருபதாவது இருபத்தொராவது ஆண்டுகள்

உலக மகாயுத்தம் காரணமாக யுத்த பயமும் உணவு கஷ்டமும் நிலவிய இக்காலத்தில் சங்கக் கூட்டங்களைக் கூட்டும் விஷயத்தில் அங்கத்தவர்கள் கவனம் செலுத்தினாரல்லர்.

### சுகாதாரப் பொருட்காட்சி

1941–ம் ஆண்டு புரட்டாதி*மீ* 12–ம், 13–ம், 14–ந் திகதிகளில் சுகாதாரப் பொருட்காட்சியும், 16ம் திகதி குசலவன் சரித்திர நாடகமும் சங்க ஆதரவில் நடைபெற்றன. வடமாகாண அதிபர் திரு. M.பிரசாத் அவர்கள் 12ம் திகதி பொருட்காட்சியைத் திறந்துவைத்தார். திருவாளர்கள் Dr. S. துரைசா, Dr. K. கதிரவேலு, Dr. F.குணரத்தினா, வலிகாமம் வடக்கு மணியகாரன் முதலியார் திரு. N.தம்பிப்பிள்ளை, சுகாதாரப் பரிசோதகர் திரு.பி.நடேசன் முதலியோர் சொற்பொழிவுகள் செய்தனர். 13ம் திகதி சுகாதாரப் போட்டி நடைபெற்றது. மயிலிட்டிக் கிராமசங்கப் பகுதியிலுள்ள பாடசாலைகள் இப்போட்டியிற் பங்குபற்றின.

**உணவு அபிவிருத்தி**

சங்க நிர்வாகிகள் ஊர்தோறும் சென்று உணவுக்குரிய பயிர் 2 வகைகளை விருத்தி செய்யும்படி பல கூட்டங்கள் கூட்டிச் சொற்பொழிவுகள் செய்தனர். இருபத்தொராவதாண்டு நிறைவுவிழா 1944ம் ஆண்டு வைகாசி மீ 8–ந் திகதி நடைபெற்றது.

**சங்கத்தின் இருபத்திரண்டாவதாண்டு இலவசப்பால் விநியோகம்**

உணவுக் கஷ்டத்தினால் சிறுவர்கள் நற்போசணையற்று வருந்துவதை நிவிர்த்தியாக்க அரசினர் எட்டுவயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு இலவசமாகப் பால் கொடுக்க ஏற்பாடுகள் செய்தனர். இதை அறிந்த இச்சங்கமும் இப்பகுதியிலுள்ள சிறுவர்களுக்குப் பால் கொடுப்ப தற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்தது. இப்பொழுதும் குறித்த இலவசப் பால் விநியோகம் நடைபெற்று வருகின்றது.

**தண்ணீர்ப் பந்தர்**

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவ காலங்களில் மத்திய மயிலிட்டி ஐக்கியசங்கத்தாரால் நடாத்தப்பட்டுவந்த தண்ணீர்ப் பந்தரை இவ்வாண்டு தொடக்கமாக அச்சங்கத்தாரிடம் பண உதவி பெற்று இச்சங்கம் பொறுப்பேற்று நடாத்தி வந்தது. சங்கத்தின் இருபத்திரண்டாவதாண்டு நிறைவுவிழா 1915ம் ஆண்டு 27ம் திகதி நடைபெற்றது. வரவு செலவுக் கணக்கின்படி வரவு 265 ரூபா 98 சதம், செலவு 89 ரூபா 30 சதம், கையிருப்பு 175 ரூபா 68 சதம் ஆகும்.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

"ஒரு நிரந்தரமான வைத்தியசாலையும் ஒரு பிரசவ விடுதியும் இப் பகுதியிலுள்ள வர்களுக்கு அவசியம் அமைத்துக் கொடுக்கும்படி அரசினரைக் கேட்டுக் கொள்ள வேண்டும்" என ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**சங்கத்தின் இருபத்துமூன்றாவதாண்டு**
**மத்திய ஆங்கிலக் கல்லூரியும் பிரதம வைத்தியசாலையும்**

கல்விப்பகுதியார் மத்திய ஆங்கிலக்கல்லூரி ஒன்றை வலிகாமம் வடக்கில் ஸ்தாபிக்க முயற்சித்தனர். இதை அறிந்த இச்சங்கமும் அக்கல்லூரி மயிலிட்டிக் கோவிற்பற்றில் ஏற்ற ஓர் இடத்தில் அமைக்கப்பட வேண்டுமென்னுந் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிக் கல்விப்பகுதியாருக்கு அனுப்பிவைத்தது. யுத்த காலத்தில் இராணுவத்தாரின் உபயோகத்திற்காகக் காங்கேசன்துறையில் நிறுவிய இராணுவ வைத்தியசாலையைப் பிரதம பொதுமக்கள் வைத்தியசாலையாக மாற்றி அமைக்கும்படி அரசாட்சியாருக்கு விண்ணப்பம் அனுப்பிவைத்தது. இவ்வாண்டிலேயே மத்திய கல்லூரி வயாவிளானில்

நிறுவப்பட்டது. இராணுவ வைத்தியசாலையை பிரதம பொதுஜன வைத்தியசாலையாக மாற்றி அமைக்கப்பட்டது.

**நிரந்தர வைத்தியசாலையும் பிரசவ விடுதியும்** (Central Dispensary & Maternity Home)

இவ்வாண்டில் ஒரு நிரந்தர வைத்தியசாலையையும் ஒரு பிரசவ விடுதியையும் இப்பகுதியிலுள்ளவர்களுக்கு அமைத்துக் கொடுப்பதாக அரசினர் உடன்பட்டனர். 1939ம் ஆண்டு வல்லைத் தெருவில் அமைக்கப்பட்ட சங்கானை கிளை வைத்தியசாலையை ஸ்ரீ கணேச வாசிகசாலைக் கட்டிடத்தில் மாற்றியமைத்தனர். இதன் பின் வாசகசாலை மயிலிட்டி தெற்கு, கட்டுவன் சந்திக்கருகாமையில் உள்ள வேறொரு கட்டிடத்தில் நடைபெற்று வருகின்றது.

சங்க வருடாந்தக்கூட்டம் 1946ம் ஆண்டு சித்திரை *மீ* 21ம் திகதி நடைபெற்றது. வரவு செலவுக் கணக்கின்படி வரவு 186 ரூபா ஆகும். செலவு 146 ரூபா 09 சதம் கையிருப்பு 39 ரூபா 91 சதம் ஆகும். சென்ற ஆண்டுக் கையிருப்பும் சேர்ந்து மொத்தக் கையிருப்புப் பணம் 215 ரூபா 69 சதம் ஆகும்.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

சங்க எல்லைக்குட்பட்ட வீடுகள்தோறும் சுகாதார வசதியை முன்னிட்டு மல சல கூடங்கள் அமைக்க ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட வேண்டுமென ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**சங்கத்தின் இருபத்துநான்காவதாண்டு**

சங்கத்தின் பணநிலை மிகக் குறைந்த அளவில் இருந்தமையாலும், பணமின்றிச் சங்கம் செய்யவேண்டிய பல புதிய கருமங்களைச் செய்ய முடியாமையினாலும் பணம் சேகரிக்கும் வேலையில் அங்கத்தவர் ஈடுபட்டனர். சங்க அங்கத்தவராகிய இளைஞர்கள் ஒரு சங்கீதக் கச்சேரி நடாத்த வேண்டுமென முயற்சித்தனர்.

**சங்கீத நடனக் கச்சேரி**

1947ம் ஆண்டு சித்திரை *மீ* 4ம் திகதி மயிலிட்டிக் கிராமசங்கத் தலைவரும் "ஈழகேசரி"ப் பத்திரிகை அதிபருமாகிய திரு. நா. பொன்னையா அவர்களின் தலைமையில் ஒரு சங்கீத நடனக் கச்சேரி நடைபெற்றது. தலைவர் அவர்கள் 250 ரூபா நன்கொடையாகக் கொடுத்துதவினார். சேகரிக்கப்பட்ட பணம் 1523 ரூபா 87 சதம். கச்சேரியைத் திறமையாக நடத்துவதிலும் பணம் சேகரிப்பதிலும் உபகாரிகளாகவிருந்த சங்க நிருவாகஸ்தர்களுக்கும், அபிமானிகளுக்கும், மாணவர்களுக்கும், பண உதவி புரிந்த அன்பர்களுக்கும் சங்கம் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

### கட்டுவன் கிராமத்துப் பொருளாதார விசாரணை

1937ம் ஆண்டு சங்கத்தின் 14ம் வருடாந்த விழாவில் நிறை வேற்றப்பட்டு அரசினருக்கு அனுப்பிவைக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாக நடாத்தப்பட்ட கடிதப் போக்குவரத்துக்கள் காரணமாக 1947ம் ஆண்டு ஆனி *மீ* தொடக்கம் மூன்றுமாச காலமாக அரசாங்க உத்தியோகஸ்தரால் பொருளாதார விசாரணை நடத்தப்பட்டது. இவ்விசாரணையின் அறிக்கை இன்றுவரை வெளிப்படுத்தப்படவில்லை. இவ்விசாரணையின் பெறுபேறாக அரசினர் இக்கிராமத்திற்குப் பல அபிவிருத்திகளைச் செய்து வைப்பார்கள் எனச் சங்கம் எதிர்பார்க்கின்றது.

இவ்வாண்டு நிறைவுவிழா 1947ம் ஆண்டு ஆடி *மீ* 27ந் திகதி நடைபெற்றது. வரவு செலவுக் கணக்கின்படி வரவு 2721 ரூபா 28 சதம் செலவு 1258 சதம் ஆகும். ரூபா 42 சதம் கையிருப்புப்பணம் 1462 ரூபா 66 சதம் ஆகும்.

### நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

பரம்பரை பரம்பரையாக 30 அடிமுதல் 40 அடி வரை ஆழமான எம் கிராமக் கிணறுகளில் துலாக் கருவியால் நீர் பாய்ச்சி ஆடி கமஞ்செய்து கஷ்டப்படும் ஏழைக் கமக்காரரின் கஷ்டங்களை நீக்கும் பொருட்டு அரசினர் மின்சார சக்தியால் நீர் இறைத்தற்கேற்ற உதவி களைச் செய்து கொடுக்கவேண்டுமென ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### சங்கத்தின் இருபத்தைந்தாவதாண்டு

காலத்துக்குக் காலம் சங்கம் பல தீர்மானங்களை நிறைவேற்றி அரசினருக்கு அனுப்பியுள்ளது. அவற்றின் சார்பாகப் பல கடிதங்களும் எழுதப்பட்டன. அரசாங்கத்தாரால் இக் கிராம மக்கள் பொருட்டுக் கவனிக்கப்படவேண்டிய விஷயங்கள் பல இருந்தன. வெள்ளவாய்க்கால் சம்பந்தமாக 68,000 ரூபாவரை செலவிட்டு அரசினர் வெள்ளவாய்க்கால் வெட்டுவதற்குரிய நிலத்தை வாங்கியுள்ளனர். காலதாமதமின்றி வாய்க்கால் வெட்டும் வேலையை ஆரம்பிப்பார்களென்று எதிர்பார்த்தனர். இக்கிராமத்தில் கைத்தொழிற்சாலை ஒன்றை நிறுவ அரசினர் முன்வந்தனர். ஆனால் அதற்கு வேண்டிய கட்டிடமொன்றை அமைத்துக் கொடுக்க நிலமும் பணமும் இல்லாது சங்கம் கஷ்டப்படுகின்றது. எல்லா நற்காரியங்களையும் அரசினர் செய்து கொடுப்பாரென நாம் எதிர்பார்த்திருத்தல் சாலாது. அரசினர் ஊர் அபிமானிகள் கிராமங்களின் முன்னேற்றங் கருதி வேண்டியன செய்ய முன்வருவார்களாக.

## பாலர் ஞானோதய சங்கத்தின் அங்கமான பாலர் ஞானோதய சங்க கலை உடல் வளர்ச்சிக் கழகத்தின் 25 வது ஆண்டு மலரிலிருந்து ...

எமது 25 வது வெள்ளிவிழாவின் பின் பல கலைவிழாக்கள் , கொண்டாட்டங்கள் , எமது கிராம அபிவிருத்தித் திட்டங்கள் எமது சங்கத்தின் தலைமையில் நடைபெற்றன. இவற்றில் முக்கியமானது எமது கிராமத்துக்கான விளையாட்டு மைதானம். ஆனால் இதைப்பற்றிய தகவல்கள் போரினால் அளிக்கப்பட்டுவிட்டன .

ஆயினும் எமது இங்கிலாந்து கிளை வழங்கிய ஆதாரங்களின் அடிப்படையிலேயே இப்போது எம்மால் இம்மைதானம் பற்றிய தகவல்களை முழுமையாக திரட் ட முடிந்தது.

1986 களின் பின் எமது கிராம மக்கள் முற்றாக எமது கிராமங்களை விட்டு அயல் கிராமங்களுக்கும், வேறு மாவட்டங்களுக்கும், பெருந்தொகையானோர் வெளிநாடுகளுக்கும் இடம்பெயந்தனர் . ஆயினும் எஞ்சி இருந்த நாம் எம்மால் முடிந்தவரை எமது நாட்டுக்குள்ளேயே பல சந்திப்புகளையும் நிகழ்வுகளையும் இயன்றவரை நடத்தியிருந்தோம் . இடப்பெயர்வின் பின் இன்றுவரை இச் சங்கத்தை கட்டிக் காத்தவர் திரு வ. இராஜதுரை அவர்கள். இவர் இன்றும் எமது சங்கத்தின் செயலாளராக சேவையாற்றி வருகிறார்.

மீண்டும் நிலங்கள் பகுதி பகுதி யாக விடப்பட்டபோது எமது இங்கிலாந்து கிளையுடன் இணைந்து வறிய மாணவர்களுக்கான உயர்கல்வி நிதி, வறுமைக்கோட்டுக்குக்கீழ் வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவச காணி வழங்கி , அரச உதவியுடன் வீடுகட்டி கொடுத்தல் போன்ற செயல்திட்டங்களை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளோம் . 2018இல் பிரான்ஸ் வாழ் எமது ஊரவர் மற்ற நாடுகளில் வாழும் மக்களின் பொருளாதார உதவியுடன் எமது தலைமையில் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க எமது கிராம நிலத்தில் ஒரு ஒன்றுகூடலை நடத்தினோம் .

2020க்கு பின் ஞானோதய வித்தியாசாலை, கட்டுவன் புலம் மகா வித்தியாலயம் போன்றவற்றுக்கான உதவிகள், எமது மக்களுக்கு Covid காலத்தில் உலர் உணவு வழங்கியமை, வாழ்வாதார திட்டங்கள் வழங்கியமை போன்றவற்றை எமது இங்கிலாந்துக்கிளை, சுவிஸ் கிளையுடன் இணைந்து வழங்கி வருகின்றது. இன்று எமது சங்கத்துக்கென்று ஒரு பெரிய மண்டபம் எமது நிலத்தில் இக்கிளைகளால் நிறுவப்பட்டு வேறு நாடுகளில் வாழும் சில தனிநபர்களுடன் இணைந்து திறந்து வைக்கப்படுகின்றது. இந்த நூற்றாண்டு வளாகமானது எமது கிராமங்களுக்கு உதவிய பல பெரியவர்களின் நினைவுசின்னமாக விளங்கும் என்பதில் எமக்கு ஐயமில்லை . புலம்பெயர்ந்து வாழும் உறவுகளும் , எமது நாட்டில் வாழும் எமது உறவுகளும் இணைந்து எமது கிராமங்களின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் உதவி புரிந்து ஒரு முன்னிலைக் கிராமமாக உருவாக்க உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம் .

**கழக வரலாறு**

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக ஞானோதய கலை உடல் வளர்ச்சிக் கழகம் நமது கிராமத்து இளைஞர்களின் நலனை முன் வைத்து அரிய பல சேவைகளைச் செய்து வந்துள்ளது. ஆரம்பத்தில் பாலர் ஞானோதய சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட நமது கழகம் இத்தனை ஆண்டுகளாக ஆர்வமிக்க இளைஞர்களால் பேணி வளர்க்கப்பட்டு இன்று வளர்ச்சியடைந்து பரந்துபட்டுள்ளது.

நமது கழகத்தின் வரலாறு அதன் ஆரம்பம் – வளர்ச்சி –ஆற்றிய சேவைகள், உறுப்பினர்கள் தனித்தும், ஒருமித்தும் கழகத்திற்கு ஈட்டிக்கொடுத்த சாதனைகள் இவற்றை அயலாரும் அறிய வேண்டும் என்ற தமது பெருவிருப்பின் காரணமாக இம்மலரை வெளியிட முன் வந்துள்ளோம்.

**ஆரம்பம்**

நமது கிராமத்தில் பாலர் ஞானோதய சங்கம் கிராமப் பெரியார்கள் பலரை உள்ளடக்கிய பெரிய சங்கமாக இயங்கி வந்தது. சிறப்பான முறையில் இது இயங்கிய போதும் இளைஞர்களின் கருத்துக்களையும், அவர்களுடைய தேவைகளையும் முற்றாகப் பூர்த்தி செய்யும் நோக்குடன் இளைஞர்களுக்கென ஞானோதய உடல் வளர்ச்சிக் கழகம், கலை வளர்ச்சிக் கழகம் என்ற பெயர்களுடன் இரு அமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இக் கழகங்களை தொடக்கிய காலத்தில் எமக்கு தெரிந்தவரை முக்கியமாக திரு அ நல்லையா, திரு. அ. த. நடராசா, திரு. த. இராசரத்தினம், திரு. பொ. பாலசுப்பிரமணியம், திரு. மு. வேலாயுதம், திரு. ப. சிவபாதசுந்தரம், திரு. வே. தங்கராசா, திரு. க. சிதம்பரநாதன், திரு. வ. ஐயாத்துரை, திரு. த. இராசலிங்கம், திரு. சி. சிவபாதசுந்தரம் ஆகியோர் கழக வளர்ச்சிக்காக முன்னின்று உழைத்தார்கள். இதன் வளர்ச்சியை மேலும் உறுதிப்படுத்தும் நோக்குடன் 1948 ஆம் ஆண்டு ஆடி மாதம் வலிகாமம் வடக்கு காரியாதிகாரியாகக் கடமை ஆற்றிய திரு பாலச்சந்திரன் அவர்கள் வருகை தந்து ஆசி கூறி கழகத்தை ஸ்தாபன ரீதியாக ஆரம்பித்து வைத்தார். இக்காலப் பிரிவில் பல விளையாட்டுப் போட்டிகளும், இயல், இசை, நாடக நிகழ்சிகளும் நடாத்தப்பட்டன. பெரியார்களுடைய விழாக்களைக் கொண்டாடுவதுடன் பேச்சுப்போட்டி, தேவாரப்போட்டி ஆகியன ஆண்டு தோறும் நடைபெற்று வந்தன.

**வளர்ச்சி**

கழகம் ஆரம்பித்த முதல் ஆண்டில் ஆர்வமும் துடிப்பும் நிறைந்த இளைஞர்கள் அங்கத்தவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய அயராத உழைப்பினால் ஸ்ரீ வள்ளி, காவியத்தலைவி கண்ணகியின் வரலாறு போன்றவை அற்புதமான நாடகங்களாக உருவாக்கப்பட்டு ஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில் பெரும் திரளான மக்கள் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டன. இவ் ஆண்டு பாலர் ஞானோதய சங்கத்தின் "வெள்ளிவிழா" ஆண்டாகும். அவர்களது வெள்ளிவிழா கொண்டாட்டத்தின் ஒரு அங்கமாக இளைஞர்களின் நாடகம் அமைந்து மெருகூட்டியது. காலகதியில் கழகத்திற்காக உழைத்த இளைஞர்கள் பலர் உத்தியோகத்தின் நிமித்தம் கிராமத்தைவிட்டு வெளியேறிய போது

அதனுடைய வளர்ச்சி வேகம் சிறிது குன்றியது. 1948 ஆம் ஆண்டிற்கும் 1950 ஆம் ஆண்டிற்கும் இடையிலான காலப் பகுதியில் சிறு சிறு விளையாட்டுக் கழகங்கள் தலை தூக்கின. இதன் காரணமாக போட்டி மனப்பான்மை உருவாகியதே தவிர ஒற்றுமையான ஒரு அமைப்பு உருப்பெற முடியவில்லை. இந்த இடைப்பட்ட காலத்திலும் கழகம் திரு. க. சிதம்பரநாதன், திரு. த. இராசலிங்கம், திரு. க. பரராசசிங்கம், திரு. வ. ஐயாத்துரை, திரு. ச. விநாயகமூர்த்தி போன்ற இளைஞர்களால் ஆதரிக்கப்பட்டு வந்தது. சிதறுண்டு கிடந்த கழகங்கள் ஒன்று சேர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தைப் பிரதிபலிக்கும் நோக்கமாக 1950 ஆம் ஆண்டு சிறு விளையாட்டுக் கழகங்களான ஆனந்தா, றோயல் மற்றும் சிறு கழகங்களும் அழைக்கப்பட்டன. இக் கூட்டத்திற்குத் திரு த நடராசா, திரு க சிதம்பரநாதன்

திரு. வ. ஐயாத்துரை, திரு. க. வாமதேவன், திரு. பொ. பாலசுப்பிரமணியம், ஆசிரியர் திரு. சி. நாகலிங்கம் ஆகியோர் முக்கிய பங்கு கொண்டதுடன் பல பெரியார்களும் சமூகமளித்திருந்தனர். ஆனந்தா, றோயல் ஆகிய இரு கழகங்களையும் ஞானோதய கலை உடல் வளர்சிக் கழகத்துடன் ஒரே கொடியின் கீழ் கொண்டு வர கிராமப் பெரியார்களும் அரும்பாடு பட்டார்கள். 1953 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் றோயல் விளையாட்டுக் கழகம் தனது பெயரைக் களைந்துவிட்டு ஞானோதய கலை உடல் வளர்சிக் கழகத்துடன் ஒன்றிணைந்தது.

1953 ஆம் ஆண்டு சித்திரை மாத வருடப்பிறப்பை தொடர்ந்து முதன் முறையாக விளையாட்டுப் போட்டி 16.04.1953 இல் நடைபெற்றது. அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூன்று இல்லங்களாகப் பிரிக்கப்பட்டுப் போட்டிகள் நடைபெற்றன. அப்போதைய காரியாதிகாரி திரு. என். சிவஞானசுந்தரம் தலைமை தாங்கிப் போட்டியை நடத்தி வைத்தார். இந்த ஆண்டில் பாரதி விழாவும் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கழகத்தின் வரலாறு ஸ்தாபன ரீதியாகத் தொடர்ந்து நடைபெற்ற காலம் திரு. க. சிதம்பரநாதன் தலைமையிலான 1950 ஆம் ஆண்டு ஆகும். 1950 ஆம் ஆண்டு தொடக்கம் 1952 ஆம் ஆண்டு வரையும் உள்ள காலப் பகுதியில் திரு த இராசலிங்கம், திரு. வ. ஐயாத்துரை, திரு. சி. சிவபாதசிங்கம், திரு. அ. கனகரத்தினம் போன்றோர் ஆற்றிய சேவை குறிப்பிடத்தக்கது.

1953 ஆம் ஆண்டு தொடக்கம் 1955 ஆம் ஆண்டு முதற் பகுதி வரையில் உள்ள காலப் பகுதியில் திரு. க. துரைசுந்தரம், திரு. செ. கனகரத்தினம், திரு. வ. ஜெயராசசிங்கம், திரு. ப. குலசிங்கம் மற்றும் பல இளைஞர்கள் ஆர்வம் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

1955 ஆம் ஆண்டு கழகத்தின் வளர்ச்சிக்குப் பெருமை தேடித்தந்த ஆண்டாகக் குறிப்பிடலாம். இந்த ஆண்டில்த்தான் கிராமத்தின் இளைஞர்கள், வாலிபர்கள் அத்தனை பேரும் ஞானோதய கலை உடல் வளர்ச்சிக் கழகத்தின் கீழ் ஒன்று சேர்ந்தார்கள். இத்தனை காலமும் தனித்துவத்துடன் விளங்கிய ஆனந்தா விளையாட்டுக் கழகம் பாலர் ஞானோதய மாதர் சங்கத்தின் பெரு முயற்சியால் கழகத்துடன் ஒன்றாக இணைந்தது.

**அமைப்பு**

இக் காலப்பகுதியில் கிராமத்தின் சகல இளைஞர்களும் ஒன்றுபட்டதும் கழகம் துரிதமாக முன்னேறியது. கலை வளர்ச்சி, உடல் வளர்ச்சி ஆகிய இரு பிரிவுகளும் இரு காரியதரிசிகளின் துணையோடு ஒரு தலைவரின் கீழ் இயங்கி வந்தன. கலை வளர்ச்சிப் பிரிவில் வழக்கமான நிகழ்சிகளோடு நாடகங்களை நடத்துதல், பாரதி விழாக் கொண்டாடுதல் ஆகியன இடம் பெற்றன. உடல் வளர்ச்சிப் பிரிவில் விளையாட்டுப் போட்டி, உதை பந்தாட்டம், மென் பந்து கிரிக்கட், கைப்பந்தாட்டம் ஆகியன நடைபெற்றன. சித்திரை மாதம் ஆண்டு விழாவும் இடம் பெற்றது. 1955 ஆம் ஆண்டு முற்பகுதியில் திரு க துரைசுந்தரம் தலைமையில் இயங்கிய கலை, உடல் வளர்ச்சிக் கழகம், ஆனந்தா விளையாட்டுக் கழக இணைப்பால் அவ்வருட நடுப்பகுதியில் திரு. வ.சின்னத்துரையின் தலைமையில் நடைபெற ஆரம்பித்தது. இக் காலகட்டத்தில் பாலர் ஞானோதய சங்கத்தின் பொறுப்பில் இருந்த நூல் நிலையமும் இளைஞர்களுடைய கைக்கு மாறியதுடன் புதுப்பொலிவுடன் விளங்கியது. திரு. வ. சின்னத்துரையின் தலைமை தொடர்ந்து 1959 ஆம் ஆண்டு வரையும் நடந்தது. இக் காலப்பகுதியில் திரு. செ. கனகரத்தினம், திரு. க. இரத்தினசிங்கம், திரு. க. த. பாலசுப்பிரமணியம், திரு. ஆ. வ. பாலசுப்பிரமணியம், திரு. வே. பாலசுந்தரம், திரு. க. வரதராசா, திரு. பொ. ஆனந்தசுந்தரம், திரு. த. இராசலிங்கம் ஆகியோர் முக்கிய பொறுப்புகளை ஏற்றுச் சிறந்த சேவைக்கு உறுதுணை புரிந்தார்கள். 1959 ஆம் ஆண்டு தொடக்கம் 1960 ஆம் ஆண்டு வரையும் கழகம் திரு. அ. வ. பாலசுப்பிரமணியம் தலைமையிலும், 1961 ஆம் ஆண்டு தொடக்கம் 1962 ஆம் ஆண்டு வரையும் திரு. வே. பாலசுந்தரம்தலைமையிலும் சிறப்பாக நடைபெற்றது. 1963 ஆம் ஆண்டு திரு. வ. இராசதுரை தலைமைப் பதவியை ஏற்றார். இவர் தொடர்ந்து 1965 ஆம் ஆண்டு வரை கழகத்தை திரு. இ. பாலசுந்தரம், திரு. து. துரைராசசிங்கம், திரு. செ. மகேந்திரராசா, திரு. சி. செல்வராசா, திரு. க. இராசசிங்கம், திரு. து. கணேசலிங்கம், திரு. செ. சுந்தரலிங்கம் ஆகியோரின் உதவியுடன் சிறப்பாக நிர்வாகித்து வந்தார்.

1965 ஆம் ஆண்டு தொடக்கம் 1967 ஆம்ஆண்டு வரை திரு. க. விநாயகமூர்த்தி தமைலையில் நடைபெற்றது. இக் கால கட்டத்தில் கழக வளர்ச்சிக்கு திரு. க. மனோகரன், திரு. மு. கணேசலிங்கம், திரு. செ. இராசரத்தினம், திரு. ந. ஜெயநாதன், திரு. சி. துரைராசசிங்கம், திரு. க. உமாமகேஸ்வரன் ஆகியோர் குறிப்பிடத்தக்கது. 1968 ஆம் ஆண்டு தொடக்கம் 1970 ஆம் ஆண்டு வரை திரு. க. கந்தவனம் திரு. வ. ஜெயராசசிங்கம், திரு. இ. பாலசுந்தரம் ஆகியோர்களால் நடாத்தப்பட்டது. 1971 ஆம் ஆண்டு தொடக்கம் 1974 ஆம் ஆண்டு வரை திரு. வ. சிவபாலன் அவர்களின் தலைமையில் கழகம் சிறப்பாக நடைபெற்றது. இக் காலத்தில் முக்கியமாக திரு. க. சந்திரசேகரம், திரு. கு. கோபாலசிங்கம், திரு. க. மகாலிங்கம், திரு. செ. மகாலிங்கம், திரு. சி. சிவராசா ஆகியோர் ஆற்றிய சேவை குறிப்பிடத்தக்கது. 1974 ஆம் ஆண்டு பிற்பகுதியில் கழகம் தற்போதைய நிர்வாக சபையினால் பொறுப்பேற்கப்பட்டது.

**சாதனைகள்**

காலத்திற்கு காலம் கழகத்தின் இளைஞர்கள் தனித்தும் ஒருமித்தும் ஈட்டியுள்ள வெற்றிகள் கணக்கிலடங்கா. கலைத்துறையிலும் சரி விளையாட்டுத்துறையிலும் சரி அவர்களது சாதனைகள் கழகத்தின் திறமைக்கும் ஆர்வத்திற்கும் எடுத்துக்காட்டாக அமைந்ததோடு பெருமை தேடித்தந்ததொன்றாகும். 1948 ஆம் ஆண்டு தொடக்கம் 1950 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விளையாட்டுக் கழகங்களின் போட்டிகளில் எமது கழகமும் பங்கு பற்றி பல விருதுகளைப் பெற்று எமது கிராமத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டியது. 1950 தொடக்கம் 1956 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வசந்தன் நாடகம் பல கிராமங்களிலும் விழாக்களிலும் சிறப்பு நிகழ்ச்சியாக எமது கழக இளைஞர்களால் ஆடப்பட்டது. 1956 ஆம் ஆண்டு கழகத்தின் கலைக்குழு இலங்கை வானொலி நிலையத்திற்குச் சென்று பல்லோரும் வியக்கும் வண்ணம் வசந்தன் நாடகத்தை ஆடிக் கழகத்திற்கு பெருமை தேடித்தந்தது. அதே ஆண்டில் வலிகாமம் வடக்கு சனசமூக நிலையங்களின் கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு வெற்றி தேடித் தந்தது. விளையாட்டுப் போட்டிகளிலும் நாடக நிகழ்சிகளிலும் நமது இளைஞர்கள் அமோக பாராட்டுகளைப் பெற்றார்கள்.

ஆண்டு விழா நடைபெற்ற பொழுது "அனார்கலி" "சோக்கிரட்டீஸ்" ஆகிய நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. 1957 ஆம் ஆண்டில் நமது கழகத்திற்கும், குரும்பசிட்டி விளையாட்டுக் கழகத்திற்கும் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் எமது கழகம் அமோக வெற்றியீட்டியது.

1958 ஆம் ஆண்டு நமது உதைபந்தாட்ட வீரர்களின் ஆண்டாகும். குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தினர் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நமது முதல் பிரிவு வாலிபர்கள் திறமையாக ஆடி அவ்வாண்டின் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்கள். காங்கேசன்துறை றோயல் விளையாட்டுக் கழகம் நடாத்திய சுற்றுப் போட்டியில் இரண்டாவது பிரிவினர் "சாம்பியன்" களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். 1959 ஆம் ஆண்டு கழகத்து இளைஞர்கள் ஏராளமான நாடகங்களில் நடித்தார்கள். கல்லூரிகளிலும் மன்றங்களிலும் புகழ் பெற்றார்கள். சித்திரை மாதத்தில் நடைபெற்ற ஆண்டு விழாவில் "அமரசிற்பி" என்னும் நாடகம் அரங்கேற்றப்பட்டது.

1960 ஆம் ஆண்டு கழகம் சிறந்ததொரு கிரிக்கெட் குழுவைக் கொண்டிருந்தது. விளையாடிய அத்தனை ஆட்டங்களிலும் எமது குழு அமோக வெற்றி பெற்றது. அவ்வாண்டின் வலி வடக்கு சுற்றுப்போட்டியில் சாம்பியன்களான றோயல் கழகத்தை எமது கழகம் தோற்கடித்தது. இவ்வாண்டு குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தினர் நடாத்திய விளையாட்டுப் போட்டிகளிலும் எமது கழகம் கலந்து கொண்டது. யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் கலைப் போட்டி நிகழ்சிகளிலும் எமது கழகம் பங்கு பற்றியது. இந் நிகழ்சிகளில் எமது கழகம் அதிக புள்ளிகளைப் பெற்று முதலாவதாக தெரிவு செய்யப்பட்டது. இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. இவ் ஆண்டு தொடக்கம் 1966 ஆம் ஆண்டுவரை எமது கழகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பலர் யாழ்ப்பாண உதைபந்தாட்ட

தெரிவுக் குழு, கிரிக்கட் தெரிவுக் குழு, கொக்கி தெரிவுக் குழு ஆகியவற்றில் அங்கம் வகித்தது குறிப்பிடத்தக்கது.

1963 ஆம் ஆண்டு சித்திரை மாத வருடப்பிறப்பன்று விளையாட்டுப் போட்டியொன்று சிறப்பாக நடைபெற்றது. இதே ஆண்டில் குரும்பசிட்டி உதயதாரகை மன்றம் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் எமது முதலாவது பிரிவினர் சாம்பியன்களானார்கள். 1964 ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. இவ் வருடம் எமது இரண்டாவது உதைபந்தாட்டக் குழுவினர் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். 1965 ஆம் ஆண்டு எமது கழகம் ஒரு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை வெகு சிறப்பாக நடாத்தி வெற்றி கண்டார்கள். இதைத் தொடர்ந்து 1966 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட ஆண்டு விழாவுடன் “ஞானோதயன்” என்ற சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

1967 ஆம் ஆண்டும் 1968 ஆம் ஆண்டும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி தொடர்ந்து எமது கழகத்தால் சிறப்பாக நடாத்தப்பட்டது. எமது கழக மென்பந்து கிரிக்கெட் குழுவும் பல போட்டிகளில் பங்கு பற்றி வெற்றிவாகை சூடியது. 1970 ஆம் ஆண்டு உதயதாரகை விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் எமது முதலாவது குழு வெற்றியீட்டியது. 1970 ஆம் ஆண்டு எமது கழகத்தை நிர்வகித்து வந்த பல அங்கத்தவர்கள் உத்தியோகத்தின் நிமித்தம் வெளி ஊர்களுக்கு சென்று இருந்த காரணத்தால் சங்கம் தொடர்ந்தும் சிறப்பான முறையில் நடைபெறக் கூடியதாக இருக்கவில்லை. இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் பல புதிய இளைஞர்கள் மீண்டும் ஆர்வம் எடுத்து கழகத்தை சிறந்த முறையில் நடாத்தி வருகின்றார்கள்.

இறுதியாக இருபத்தைந்து ஆண்டுகளாக ஒரு இயக்கத்தை நிறுவி, பின்னர் அதனைப் பேணி வளர்த்து, குழப்பங்களைச் சமாளித்து, வெற்றிப் பாதையில் அதை இட்டுச் செல்வது சுலபமான காரியமல்ல. இதற்குரிய பெருமை இவ்வளவு காலமாக கழகத்திலிருந்த நிர்வாகிகளையும், அவர்களுக்கு ஒத்துழைத்த அங்கத்தினர்களையுமே சாரும். அவர்கள் எல்லோருடைய சேவையையும் ஏற்று, அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவும், மற்றும் இக் கழகத்தை அமைத்துத்தந்த பெரியவர்கள், காலா காலமாகக் காத்து நின்றவர்கள், உதவியும் உற்சாகமும் அளித்தவர்கள் யாவரையும் கௌரவிக்கும் முகமாகவும் நாம் இவ் விழாவினை எடுத்துள்ளோம்.

(பாலர் ஞானோதய கலை உடல் வளர்ச்சிக் கழகத்தின் 25 வது ஆண்டு வெள்ளி விழா மலரிலிருந்து – 1975 )

# ஐம்பது வருடங்களைக் கடந்து பாலர் ஞானோதய சங்க ஐக்கிய இராட்சியக் கிளை

எமது நாடு பிரித்தானிய காலனித்துவத்திற்குக் கீழ் இருந்த காலத்திலிருந்து எமது நாட்டிலிருந்து பலர் வெளிநாடுகளுக்கு மேற்படிப்பிற்காகவும் வேறு பல தேவைகளுக்காகவும் இங்கிலாந்து நாட்டிற்கு பயணம் செய்து தமது கல்வியை முடித்து சிலர் திரும்பியிருக்கிறார்கள், சிலர் பிரித்தானியாவிலேயே தங்கியிருந்திருக்கிறார்கள்.

ஆனால் இவை பற்றிய ஆவணப்படுத்தப்பட்ட தகவல்கள் எம்மிடம் இல்லை. ஆனால் எமக்குத் தெரிந்தவகையில் 1960களிலும் அதன்பின்னரும் பலர் எமது கிராமங்களில் இருந்து மேற்படிப்பிற்காக இங்கிலாந்து நாட்டிற்கு இடம்பெயர்ந்துள்ளார்கள். இதன் அடிப்படையில் அந்தக் காலங்களில் சிறுசிறு சந்திப்புக்களை மேற்கொண்டு எமது நாட்டிற்கு திரும்பி வரும் போது எமது கிராமங்களில் வசிக்கும் இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்குதல், கல்வித் தேவைக்கான சிறு சிறு உதவிகளை வழங்கி வந்துள்ளார்கள்.

1972 ஆம் ஆண்டு முதன்முதலாக பாலர்ஞானோதய சங்கத்தில் இருந்து பிரித்தானியாவில் வசித்துவரும் எமது கிராமத்தவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதாவது கிராமத்துக்கென விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று இதற்கான வேண்டுகோள் பாலர் ஞானோத சங்கத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு நடைபெறும் போது திரு.சி.நாகலிங்கம் பாலர் ஞானோத சங்கத்தின் செயலாளர் கோரிக்கை விட்டிருந்தார். இதேவேளை திரு. பண்டிதர் நமசிவாயம் ஐயா அவர்கள் தலைவராகவும் திரு. கே.ரி.பாலசுப்பிரமணியம் அவர்களும், திரு. சி.நாகலிங்கம் அவர்களும் இணைச் செயலளராகவும் செயற்பட்டு வந்துள்ளனர். இந்த வேண்டுகோளுக்கு அமைய இங்கு வசித்து வந்த எமது ஊர் மக்கள் பாலர் ஞானோதய என்ற ஒரு அமைப்பை ஆரம்பித்தனர்.

எமது கிராமத்திற்கு மைதானம் அமைப்பதற்கு பணம் சேகரிக்கத் தொடங்கினார்கள். இவ்வாறு பணம் சேகரிக்கப்பட்டபோதும் அங்கு இருந்த நடைமுறைச் சிக்கல் காரணமாக அந்த மைதானம் 1975 ஆம் ஆண்டளவிலேயே கை கூடியது. இதற்கான பெருந்தொகையான பணத்தினை பாலர் ஞானோதய சங்க ஐக்கிய இராட்சியக் கிளையே வழங்கியிருந்தது. சுமார் ஐந்தரை பரப்புக் காணி பாலர் ஞானோதய சங்கத்துக்குரியதாகவும் மிகுதிக் காணிகள் தனியாருக்கு உரியதாகவும் அவ்விடத்தில் அமைந்திருந்தது. ஆகவே தனியாரிடம் இருந்த காணிகளைக் கொள்வனவு செய்ய பாலர் ஞானோதய சங்க ஐக்கிய இராட்சியக்கிளையைச் சேர்ந்த, எமது மக்கள் அந்தப் பணத்தினைச் சேகரித்து அனுப்பியிருந்தனர். அவர்கள் பற்றிய பெயர் விபரங்கள் புத்தகத்தில் தனியாக தரப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில்

மைதானம் பாலர்ஞானோதய சங்கத்தில் திரு.சி.நாகலிங்கம் அவர்களின் தலைமையில் 5 பேர்கொண்ட குழு அமைக்கப்பட்டு அவர்கள் ஐவரின் மூலமாக அந்த காணிக் கொள்வனவு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று முழுமையாக காணி கொள்வனவு செய்யப்பட்டது. இத்துடன் தாய்ச் சங்கத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், பாலர் ஞானோதய சங்க ஐக்கிய இராட்சிய கிளையானது , எமது தாய்ச் சங்கத்தின் கிளையாக அங்கீகரிக்கப்பட்டு, மைதானத்தை வாங்குவதற்கு பொருளாதார உதவி வழங்கியமைக்காக நன்றி தெரிவித்து எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டது . இக்காணி வாங்குவதற்கு நிதி வழங்கியோர் விபரம் வேறு பக்கத்தில் தரப்பட்டுள்ளது .

இவ் விளையாட்டு மைதானம் பாடசாலைக்கும் கிராம மக்களுக்குமாக ஒரு பொது மைதானமாக வழங்கப்பட்டது.

இதுவே ஐக்கிய இராட்சியக் கிளையின் உத்தியோகபூர்வமாக செயற்பட்ட முதலாவது ஆவணப்படுத்தப்பட்ட திட்டமிடலாகும். அதாவது 1972 ஆம் ஆண்டு 22 ஆம் திகதி நவம்பர் மாதம் 50 ஆவது தினத்தை பாலர் ஞானோதய சங்க தாய்க்கிளை கொண்டாடிய சமயம் இங்கும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் முதலாவதாக ஒன்றுகூடி இந்த ஐக்கிய இராட்சிய பாலர் ஞானோதய சங்கத்தினை ஆரம்பித்தனர்.

இதனைத்தொடர்ந்து இங்கு வசிக்கும் மக்களால் சிறிய சிறிய உதவிகள் எமது கிராமங்களில் இருந்துவரும் வேண்டுகோள்களுக்கு அமைய வழங்கப்பட்டு வந்தன. ஆனால் அவற்றைப் பற்றிய விபரங்கள் வாய்மூலத் தகவல்களே இருக்கின்றனவே தவிர ஆதாரபூர்வமான தகவல்கள் எம்மிடம் இல்லை.

அண்மைக்காலத்தில் எமது கிராம மக்களுக்கென ஐக்கிய இராட்சிய கிளை செய்த உதவிகளையும் மற்றும் திட்டமிடல்களையும் இங்கு நாங்கள் வரிசைப்படுத்துகின்றோம். 1998 இல் முதன்முதலாக மிகப்பெரிய ஒன்றுகூடல் நடைபெற்றது. இதன்போது அனைத்து நாட்டு கிராம மக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு பல நூற்றுக்கணக்கான எமது கிராமத்தவர்கள் சந்தித்துக்கொண்ட முதலாவது ஒன்று கூடல் ஐக்கிய இராட்சியத்தில் நடைபெற்றது. இந்த ஒன்றுகூடல் திரு.சிவானந்தசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

1998 ஆம் ஆண்டிற்கு பின் ஒன்றுகூடல் 2000 ஆம் ஆண்டு வெற்றிகரமாக நடைபெற்றது. இதன்பின்னர் காலம்காலமாக அடுத்தடுத்த வருடங்களிலோ அல்லது ஒரு சில வருடங்கள் இடை வெளியிலோ பல ஒன்றுகூடல்கள் ஐக்கிய இராட்சியத்தில் நடைபெற்று வருகின்றன. இவற்றைப்பற்றிய விபரங்கள் இப்புத்தகத்தில்கிராம மக்களால் செய்யப்பட்ட அன்பளிப்புக்களை நாம் வரிசைப்படுத்தியுள்ளோம் அதன் மூலம் நீங்கள் கண்டு கொள்ளலாம்.

அடுத்ததிட்டமாக திரு. பண்டிதர் நமசிவாயம் ஐயா அவர்களுக்கு ஒரு வாழ்நாள் பாராட்டுவிழா ஒன்று நடைபெற்றது. அதற்காக நிதியுதவி வழங்கியமை மிகமுக்கிய ஒரு திட்டமிடலாகும். இவை பற்றிய விபரங்கள் இந்த புத்தகத்தில் வழங்கப்பட்டிருக்கின்றன. அதனையடுத்து 2009 ஆம் ஆண்டு போருக்கு பின்னரான நிகழ்வுக்காக எமது சங்கத்தினரால்

நிதி சேரிக்கப்பட்டு அன்றைய நிலையில் 1200 பவுண்டுகள் வழங்கப்பட்டிருந்தது. இது எமது சங்கத்தினர் Red Cross அமைப்பினர் ஊடாக ஒரு தொகையினையும் சாயி பண்ட் என்ற அமைப்பின் ஊடாக ஒரு தொகையினையும் அன்றைய போர்சூழலில் இருந்து தப்பிவந்த மக்களுக்கென உதவி அளிக்கும் உடனடிய நிவாரணம் வழங்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து எமது கிராமத்து மாணவர்களுக்கு உயர்தரக் கல்வி மேலதிக வகுப்புக்கள் பெற பணம் ஒரு தடையாக இருந்த போதும் உதவிவழங்குவதற்கு பணம் வழங்க தாய்ச்சங்கத்துடன் இணைந்து ஒரு நிதி நிலையத்தை உருவாக்கினோம். இதன்மூலம் இன்றுவரை பல மாணவர்கள் பயன்பெறுகின்றார்கள்.

மேலும் உயர்கல்வி நிதியில் எமது பங்களிப்பினை வழங்கி வந்துள்ளோம். அதன் ஊடாக இன்று பலர் உதவிபெற்று உயர்பதவிகளை வகிக்கின்றனர். அவர்கள் தொடர்ந்தும் பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடர்வதற்கும் அவர்கள் வேலைகளுக்கு செல்வதற்குத் தேவையான உதவியையும், மாணவர்கள் தமது கல்வியில் எதிர்காலத்தில் ஒளிமயமாக வாழ்வதற்கும் உதவி செய்கின்றோம்.

இந்த நிதி நிலையமானது இன்று ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக திரு. குட்டித்தம்பி கருணாகரன் அவர்கள் தனிப்பட்ட ரீதியில் எடுத்து, அதனை விரிவுபடுத்தி வலிகாமம், தெல்லிப்பளை உதவி அரசினர்பிரிவுக்குள் இருக்கும் உதவியினை கேட்கும் மாணவர்களுக்காக விரிவுபடுத்தி தொடர்ந்து உதவி புரிகின்றார்.

2010 ஆம் ஆண்டில் தினக்குரல் பத்திரிகை கருணைப்பாலம் என்ற அமைப்பின் ஊடாக நாம் எமது கிராமத்தைச்சேர்ந்த உடனடியான உதவியாக தற்காலிக குடியிருப்புக்களை அமைக்க நிதி உதவியினை வழங்கினோம்.

எமது கிராமங்களின் சில பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட போது ஐயனார் கோயில் மீள்புனரமைக்கவென பணிகள் இடம்பெற்றது. இதற்கான எமது சங்கத்தின் உதவியாக 1500 பவுண்டுகளை வழங்கினோம். அத்துடன் இந்த ஆலயத்தின் பூசகருக்கும் நிதி உதவியினை வழங்கி எமது பங்களிப்பினை பூர்த்தி செய்தோம்.

எமது கிராமத்தில் மீள்குடியேற விரும்புவோர் என்ற ரீதியில் , வறுமைக் கோட்டுக்குள் வாழும், மக்களுக்கு அரசின் வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இலவச காணி வழங்கியமை. இத்திட்டமானது, திரு. குட்டித்தம்பி கருணாகரன் (எமது நிர்வாகசபை உறுப்பினர் ) அவர்களின் முழுமையான நிதிப்பங்களிப்பில் வழங்கப்பட்டது.

எமது கிராமத்தில் மீள்குடியேற விரும்புவோர் என்ற ரீதியில் அவர்களை இனங்கண்டு அரச அதிபரின் ஊடாக காணி வசதி வழங்குவதற்காக திரு. குட்டித்தம்பி கருணாகரன் எமது சங்கத்தின் ஊடாக வழங்கிய உதவியினையடுத்து பல குடும்பங்கள் விண்ணப்பித்தபோதும், அரச அதிபரின் தகுதிகாண் அடிப்படையில் அவர்கள் வீடு கட்டுவதற்கான பண உதவியினை இரண்டு குடும்பங்களுக்கு இலவசமாக காணி வழங்கப்பட்டு அரச உதவியுடன் வீடு அமைத்து சந்தோசமாக வாழ்கின்றனர்.

இதனைத்தவிர பாலர் ஞானோதய வித்தியாசாலை அமைப்பதற்கு அந்த பாடசாலை முற்றாக அழிவுற்ற நிலையில் நாம் ஆளுநரையும், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரையும் அழைத்து வேண்டுகோள் விடுத்தோம். ஆயினும் எமது வேண்டு கோள்களுக்கு எந்தவிதமான பதில்களும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. ஆனால் ஒரு கட்டத்தில் பாடசாலை அரசின் உதவியுடன் பாடசாலை முழுமையாக அமைக்கப்பட்டது. அப்பாடசாலை அமைக்கப்பட்ட போது அதன் திறப்பு விழாவுக்கான முழுச்செலவினையும் நாம் பொறுப்பேற்றோம். அத்துடன் அந்த பாடசாலைக்கு Smart வகுப்பறையினை நாம் முதன்முறையாக அமைத்துக்கொடுத்தோம். இதற்கு எமது சங்கத்தை சேர்ந்த வைத்திய கலாநிதி திரு. முத்துக்குமாரு கணேசானந்தன் அவர்கள் தனது" Children Hunger Relief UK" என்ற தொண்டு நிறுவனம் மூலம் அன்பளிப்பாக வழங்கினார் . இதற்கான பயிற்ச்சி வகுப்புக்களும் முழுமையான நிதிஉதவியினை வழங்கினார். ஆனால் பாடசாலை தொடர்பானவர்கள் அதனை இன்று வரை முழுமையாகப் பயன்படுத்தாமல் வீணடிக்கப்படுவது வேதனைக்குரியது.

இதனைத்தொடர்ந்து 2022 இல் இருந்து, கட்டுவன்புலம் மகாவித்தியாலயம் என்ற பாடசாலை நேரடியாக தொடர்புகொண்டு சில உதவிகளை வேண்டியிருந்தது. அதன் அடிப்படையில் நாங்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தயடைந்த மாணவர்களுக்கு நாம் துவிச்சக்கரவண்டிகளை வழங்கியிருந்தோம். அத்துடன் பாடசாலையில் சில வகுப்பறைகளுக்கு வெப்பம் காரணமாக வெப்ப தடுப்பு உள்சீற்களை அடித்து வகுப்பறைகளை பாவிப்பதற்கு உதவியிருந்தோம். அவர்களுக்கும் ஒரு smart வகுப்பறையினை அமைத்து முழுமையாக பயன்படுத்த உதவியிருந்தோம். அதனைத் தவிர பாடசாலையை சுற்றியிருந்த மதில் உடைந்திருந்தது இதனையும் நாம் புனரமைப்பு செய்து கொடுத்துள்ளோம். பாடசாலை நூலகம் திருத்தி அமைத்ததுடன்' சைக்கிள் தரிப்பிடம், மோட்டார்சைக்கிள் தரிப்பிடம் என்பன அமைத்ததுடன், நீர் வழங்கல் வசதியையும் ஏற்படுத்தினோம். மேலும் பாடசாலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு கணினிகளையும், விளையாட்டு பயிற்சிக்கு தேவையான உபகரணங்களையும் வழங்கினோம். அங்குள்ள வறிய மாணவர்களுக்கு உணவு வழங்கலினையும் செய்துள்ளோம்.

Covid -19, முதலாவது முடக்க நிலையின் போது எமது மூன்று கிராமங்களிலும் வறுமைக் கோட்டுக்கு கீழ்வாழும் சுமார் 250 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகளும், வலிகாமத்தில் வாழும் மக்களின் குழந்தைகளுக்கான பால்மா வழங்கியமையும். இத்திட்டத்தில் பாலர் ஞானோதய சங்க சுவிஸ் கிளையும் எம்முடன் இணைந்து செயற்பட்டது. பாலர் ஞானோதய வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோருக்கு மேலும் ஒரு கட்டமாக உலர் உணவுப்பொதிகளை வழங்கியிருந்தோம்.

**எமது கிராமமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான உதவிகள் வழங்கல் :**

முதல் கட்டமாக, ஞானோதய வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் குடும்பங்களுக்கு அவர்கள் தமது வாழ்வாதாரத்தைப் பெருக்கி, எமது கிராமங்களிலேயே நிரந்தரமாக வசிப்பதற்கு உதவி புரியும் திட்டமாகும். இதற்காக நாம் முன்னை நாள் திட்டமிடல் மற்றும் மீள்குடியேற்ற அதிகாரியை வேறொரு நிறுவனத்தினூடாக உதவிக்கு அமர்த்தி, அவரை உதவி அரசாங்க அதிபர், கிராம சேவகர்கள், சமுர்த்தி அதிகாரிகள் மற்றும் சமூக உதவிநிறுவனங்கள் உதவியுடன் குடும்ப உறுப்பினர்களைச் சந்திக்க வைத்து, ஒவ்வொருவர் வீடுகளுக்கும் விஜயம் செய்து முழுமையான அறிக்கை பெற்று ஒரு திட்டத்தினை செயற்படுத்தினோம். சுமார் 17 குடும்பங்கள் இத்திட்டதில் உள்வாங்கப்பட்டன. அதன் அடிப்படையில் எம்மால் சேகரிக்கப்பட்ட 5935.00 (Rs 18,10,200.00) அனுப்பி வைக்கப்பட்டது. இப்பணத்தில் அவர்களது தேவைகளான :

1. சிறிய உளவு இயந்திரம்
2. மோட்டார் வாகன திருத்தும் நிலையம்
3. கட்டிட வேலை உபகரணங்கள்
4. குழாய் கிணறு ( தண்ணீர்த் தாங்கி உட்பட)
5. ஆடு, மாடு வளர்ப்புத்திட்டம்
6. மாணவர்களுக்கான உதவித்திட்டம்
7. வர்ணம் பூசுவதற்கான உபகரணங்கள்

அவர்களது தேவைகள் முழுமையாக வழங்கப்பட்டு அனைத்தும் நிறைவேற்றுபட்டுள்ளன. இனி வரும் காலங்களில் மற்றவர்களுக்காகத் திட்டங்கள் தொடரும். இத்திட்டதில் பாலர் ஞானோதய சங்க சுவிஸ் கிளையும் எம்முடன் இணைந்து செயல்பட்டது. அது பற்றிய விபரங்களும் இப் புத்தகத்தில் அடங்கும்.

(நாம் பாலர் ஞானோதய சங்க நிர்வாகம் ஊடக எமது ஊர்களில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டி எழுப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டோம். ஆயினும் நிர்வாக சபை எம்முடன் விரைவாகவும் அக்கறையுடனும் செயல்பட முடியாத காரணத்தால் பல திட்டங்களை நாம் வேறு நிறுவனங்களூடாக எமது மக்களுக்கான உதவிகளை முன்னெடுத்து வருகிறோம் ).

இத்துடன் எமது கிராமங்களில் குடும்ப சூழல் காரணமாக இளவயதில் பாடசாலைப் படிப்பை இடை நிறுத்திய இளம் பெண்களுக்கு (கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட அல்லது கணவனைப் பிரிந்து வாழும்) தொழில் பயிற்சியுடன் கூடிய நிரந்தர வாழ்வாதாரத்தை அமைத்துக்கொடுத்தல் . இதற்கான முயற்சிகள் முதற்கட்டம் முடிவுற்று , அடுத்த கட்டம் நடைபெற்று வருகின்றன. இதற்கான பெரும் பகுதி நிதியினை திரு. சங்கரப்பிள்ளை சிவானந்தா அவர்கள் வழங்கியுள்ளார். இதை விட, கட்டுவன்புலம் மகா வித்தியாலயம், ஞானோதய வித்தியாசாலை, வறுத்தலைவிளான் பாடசாலை மற்றும் குரும்பசிட்டி பாடசாலை போன்றவற்றில் கல்விகற்கும் ஐந்தாம் வகுப்புக் கீழ்

பயிலும் 43இற்கு மேற்பட்ட வறுமைக் கோட்டுக்குக்கீழ் வருமானம் பெறும் பெற்றோரைக் கொண்ட மாணவர்களுக்கு எமது நிர்வாக சபை உறுப்பினர்களின் அன்பளிப்பில் (திரு கு, கருணாகரன், திரு ச .சிவானந்தா) மாதம் 2000 ரூபா கடந்த 24 மாதங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினூடாக வழங்கி வருகின்றனர். வருட முடிவில் கிடைக்கும் அறிக்கையினைப் பொறுத்து, இவ் உதவி தொடரும்.

2017/2018 இல் பாலர் ஞானோதய சங்க தாய் சங்கத்துக்கு சொந்தமாக இருந்து வந்த காணியை மறுசீரமைக்கவும், உறுதிப் பத்திரத்தை பெறுவதற்கான முயற்சிக்கு முழுமையான பொருளாதார உதவி வழங்கினோம் . (1000.00). பாலர் ஞானோதய சங்கம் – இலங்கை (தாய் சங்கம்) தொண்டு நிறுவனமாக பதிவுசெய்தல். இது 2018 ஆண்டு பதிவு செய்யப்பட்டது. மேலும் பல உதவிகளாக, துவிச்சக்கர வண்டி வழங்குதல், Covid -19 இரண்டாம், மூன்றாம் கட்டநிலைகளில் உலர் உணவுப்பொதிகள் வழங்கியமை மற்றும் எமது கிராமத்தை சேர்ந்த வேறு கிராமங்களில் வசிக்கும் மாணவர்களுக்கான பொருளாதார உதவி வழங்கியமை போன்றவை எமது அனுசரணையுடன் தனிப்பட்ட நபர்களால் (UK & Swiss) வழங்கப்பட்டுள்ளது. இதனைவிட வெளி மாவட்டங்களைச் சேர்ந்த உயர் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்கு கீழ்வாழும் சில மாணவர்களுக்கு மடிக்கணினி (laptop ) கைத்தொலைபேசி (Mobile Phone) போன்றவை அவர்களின் கல்வித்தேவைகளுக்காக வழங்கப்பட்டன.

**தற்போது எம்மால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள்:**

( 2020 இலிருந்து பாலர் ஞானோதய சங்க சுவிஸ் கிளையும் எம்முடன் திட்ட முன்னெடுப்புகளில் இணைந்து செயல்பட கொள்கை ரீதியில் இணக்கம் கண்டுள்ளோம். மற்ற நாடுகளில் வசிக்கும் எமது ஊர்களின் சங்கங்களுடனோ அல்லது தனிப்படட நபர்களுடனோ இணக்கம் காண முயற்சிக்கின்றோம் )

1. பாலர் ஞானோதய சங்கத்துக்கான மண்டபம் (இதைப்பற்றிய விளக்கம் வேறுபக்கத்தில் விளக்கமாக தரப்பட்டுள்ளது.)
2. பாலர் ஞானோதய வித்தியாசாலைக்கான உதவிகள்.
3. எமது கிராம மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான உதவிகள் வழங்கல்.
4. அத்தியாவசிய தேவைகள் சம்பந்தமான பொருட்களை கிராமத்திலேயே பெறுவதற்கான வியாபார நிறுவங்களை அமைப்பதற்கு உதவி நாடல்.
5. பொதுப் போக்குவரத்து சேவையினை எமது கிராமம் வரை அல்லது எமது கிராமத்தினூடாக பெறுவதற்கு முயற்சித்தல்.
6. பொது இடங்கள், குளங்களை புனரமைப்பு செய்தல்.

எமது கிராமங்களை நோக்கிய எமது உதவிகளும் சேவைகளும் , உலகெங்கும் வாழும் எமது உறவுகளுடனும் ஊரில் உள்ளோருடனும் இணைந்து சரியான திட்டமிடலுடன் தொடரும்.

**தாழ்மையுடன்**

**பாலர் ஞானோதய சங்கம் – ஐக்கிய இராட்சியக் கிளை (PGS-UK)**

# சங்கம் வளர்த்த எங்களூரின்

## மீள் வாழ்வு



**பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன்**
**மேனாள் துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

"சங்கம் வளர்த்த எங்களூர்" என்ற பெருமிதத்தின் மீள் எழுச்சியாய் பாலர் ஞானோதய சங்கத்தின் நூற்றாண்டு நிறைவினைக் கொண்டா டும் இவ்வேளை பெறுமதியானது எங்கள் முந்தையோரின் சமுதாய உணர்நிலையின் – கூட்டு வாழ்வின் வரமாக வாய்த்த பாலர் ஞானோதய சங்கம் என்கின்றபோதே எங்கள் நிலத்தில் சங்கம் விளைத்த மேன்மைகளில் நெஞ்சம் நிமிர்கின்றது. சங்கத்தினை நிலைபேறானதாக்க 'வீடுகள் தோறும் பனை ஓலைக் குட்டான்களைக்கொடுத்து பிடியரிசி போடுவித்து, மாதம் முடிய அவற்றை எடுத்து ஒன்று சேர்த்து விற்று அதனால் வரும் பணத்தைப்பெற்று சுருக்கமாகவும் நன்னோக்குடனும் செலவுக்கு உபயோகித்து' கஷ்ட நிலைமையிலும் சங்கத்தைக்காத்து நின்ற எந்தையர் பற்றிய பதிவுகள் நெஞ்சைக் கனக்க வைப்பன. (வெள்ளிவிழா நினைவு மலர்,1948)

இத்தகைய சிறந்த குணங்கள் படைத்தோர் நாட்டுக்குப் பெறற்கரிய செல்வமாவர். அநேக சங்கங்கள் தோன்றுகின்றன. உற்சாகம் குறைந்ததும் அவை மறைந்து விடுகின்றன. ஆனால் பாலர் ஞானோதய சங்கத்தை நோக்குமிடத்து, அது எத்தனையோ கஷ்டங்களையெல்லாம் மேற்கொண்டு சேவையையே குறிக்கோளாகக் கொண்டு உழைத்து வந்திருக்கிறது என்பது புலனாகின்றது. பல்வேறு துறைகளிலும் பணிபுரிந்துவரும் இச்சங்கம் இன்று ஒரு பூரண நிலையை அடைந்திருக்கிறது.

(இராசரத்தினம்,1948).

வெள்ளிவிழாக் காலத்திலேயே பூரணத்துவத்தினை சங்கம் எய்தியதான அந்த மதிப்பீடு, சங்கத்தின் பூரணத்துவத்தை மட்டும் குறிக்கவில்லை. சங்கம் வளர்த்த எங்களூரின் பூரணப்பொலிவையும் புலப்படுத்தி நிற்பது.

ஊர் மேம்பாட்டினதும் எங்கள் ஆளுமை மலர்ச்சியினதும் ஆதார சுருதியாக அமைந்த பாலர் ஞானோதய சங்கப் பணிகள் யாவும் முழுதளாவிய நோக்கிலானவை. கல்வி, வாழ்வாதாரம், கலை, சுகநலம், ஆன்மீகம், கூட்டுறவு என்றவாறு பன்முகத்தன.

- ஞானோதய வித்தியாசாலை
- ஸ்ரீ கணேச வாசிகசாலை
- வைத்தியசாலை
- நெசவுசாலை

மற்றும் வறிய விவசாயிகள் தங்கள் கமங்களை செவ்வனே நடத்துதற்கான ஆதார உதவி அமைப்புகளான

- மத்திய மயிலிட்டி ஐக்கிய சங்கம்
- மத்திய மயிலிட்டி ஐக்கிய பண்டகசாலை
- உற்பத்தி விளைபொருள் கூட்டுறவுச்சங்கம் (வெங்காயச் சங்கம்)

என்றவாறு விரிந்த எங்கள் சங்கத்தின் பணிகள் ஏனைய கிராமங்களின் மேம்பாட்டுக்குமான முன்னுதாரணங்களாக விளங்கின என்றால் மிகையில்லை.

ஒரு சமூகவியல் பேராசிரியனாக, எங்கள் செழுங்கலை நியம மான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நான் கண்ட மேன்மைகள் யாவினதும் மூலாதாரமாக இளமைக்கால முதலாய் எனக்கு வாய்த்த சங்கம் வளர்த்த எங்களூரின் அனுபவ பாடங்களை நினைந்து போற்றாத நாளில்லை என்பேன். கிராமிய மேம்பாடும் தலைமைத்துவமும் வீட்டுப் பாடங்களாகவே எனக்கு கிடைக்க என்ன தவம் செய்தேனோ. பாலர் ஞானோதய சங்கத்தின் முதல் தலைவராக விளங்கிய என் பெரிய தந்தையார் பொன்னம்பலம், அவர் பணிகளிலெல்லாம் உடனிருந்த “சின்னப்பொன்னம்பலம்” என ஊர் கொண்டாடிய என் தந்தையார் நாகலிங்கம், சங்கத் தலைமைப் பொறுப்பில் வழிகாட்டி நின்ற, சுதேச வைத்தியர், ஞானச்செல்வர் பரிகாரியார் நாகமுத்துவின் பேரன் என்ற பேற்றினை எனக்களித்ததுடன் “அப்பு” வைப்போல நான் என்று ஊரிலே அப்பு என என் பெயர்விளங்க காரணரான என் அம்மாவின் அப்பா. அந் நாளின் மாதர் சங்க செயற்பாடுகளில் , சங்க செயற்திட்டங்களில் முக்கிய பொறுப்புக்களில் இசைந்திருந்த என் அம்மா நகுலேஸ்வரி என்றவாறு அமைந்து என் குடும்பச் சூழல்.

இவ்வாறே ஊரின் குடும்பங்கள் ஒவ்வொன்றுமே சங்க மேம்பாட்டில் தங்கள் தங்கள் உறவுகளின் பங்களிப்பினை நினைந்து பெருமிதம் கொள்ளும்படியாகவே சங்கத்தின் மேம்பாட்டுப்பணிகள் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய' ,சங்கம் வளர்த்த எங்களூரின் அழகிய வாழ்வில் இந்த பெருமிதங்களின் மீது கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முன்னால் விழுந்த ஆக்கிரமிப்பு

இடியும் அதனால் ஏற்பட்ட நிலை குலைவும் , நிலமிழந்தும் போன துயர் வலியும் இன்னமும் தொடர்வன. நிலம் என்பது வெறும் பௌதீக நிலப்பரப்பல்ல் தலைமுறையாக வாழ்ந்த வீடும் வளவும் அவை சார்ந்த ஞாபகங்களும் ,அவற்றினை இழத்தலின் துயரும் உயிர்வலியாகும். சொந்த ஊரிலிருந்து பிடுங்கப்பட்டதுமே வாழமுடியாமை உயிர்விட்டவர்கள் முதல் இடம் பெயர், புலம் பெயர் வாழ்வில் மீள வேர்விட முடியாமல் தவிப்பவர்கள் வரை மீள் வாழ்வுபற்றிய எங்கள் கவனம் வேண்டப்படுகின்றது .

மீளக்குடியேற வழிவிடப்பட்ட மக்களின் வாழ்வுபற்றிய அந்தரங்களும் எம் கவனத்துக்குரியன. அனைத்துமே அழிக்கப்பட்ட அல்லது காடாகவே எஞ்சியுள்ள முன்னை வாழ்விடங்களுக்குள் மீளத் தங்களை வேர் விடுதற்கான ஆதரவுப்பலத்தை தருதலும் எம் கடமையாகும். இவ்வேளை மக்கள் மீளக்குடியேற முன்னரே கடைவிரித்துவிடும் நிதி உபயகாரர்களான 'லீசிங்'கம்பனிகளிடமிருந்து மக்களைக் காப்பதும் அவசியமும் அவசரமுமானதுமாகும் (நிஷாலினி ,2014).எளிமையான வாழ்க்கை முறையில் வேர்விட்டிருந்த மக்கள் வாழ்வியலானது இன்றைய நுகர்வுப் பண்பாட்டின் அலைகளுக்குள் சுயமிழந்து போகின்ற தன்மையும் சுய மீள் வாழ்வு தொடர்பான சுய விமர்சனமாக ஆழ உரையாடப் படவேண்டும்.

சுயம் பற்றிய சுய விசாரணை என்பது பாரம்பரிய வாழ்வின் மேன்மைகளை மீட்டும் வாழ்வியலாக வேண்டும். சுயம் மறந்த அல்லது சுயத்தின் மேன்மைகளைத் தாழ நோக்கும் நிலை அகல, எங்களூர் கண்ட சுதேச அறிவின், சுதேச கூட்டுறவு வாழ்வியலின் பாடங்கள் மீட்கப்பட வேண்டும். மேட்டுக்குடி மேலாண்மைகள் இல்லாமல் அன்று ஏழைக் கமக்காரர் முதல் அனைத்துத்தரப்பினரினது வாழ்வாதார, பண்பாட்டு தேவைகள் கவனம் பெற்ற ஊரின் அமைப்புகள் மீள் உயிர்ப்படைய வேண்டும். அதேவேளையில் , மீள் வாழ்வு என்ற பெயரால் உலகமயமாக்கலுக்கு ஆரத்தி எடுக்கும் திட்டவரைபுகளை இனங்கண்டு புறந்தள்ளுதலும் இன்றியமையாதது. இந்தவகையில் ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கப் பண்பாட்டுப்புலங்களில் போருக்குப்பிந்திய மீள் வாழ்வுத் திட்டங்களில் சுதேச அறிவின், பண்பாட்டு வாழ்வியலின் வல்லமை ஆழப் பதிவு பெற்றமை தொடர்பாக ஆய்வனுபவமாக கண்ட பாடங்கள் நெஞ்சில் மேலெழுகின்றன (Escober, 1995 சண்முகலிங்கன், 2013)

எங்கள் மீள் வாழ்வுத்திட்டங்கள் எங்களாலேயே திட்டமிடப்பட வேண்டும். மக்களின் பாரம்பரிய அடையாளம்,கூட்டுணவு என்பவற்றினைக் குலைக்காத திட்டங்களே நிலைபேறானவை. அவையே தங்களது மேம்பாடாக மக்களை உணரவைக்கும். அவர்களை அவர்களின் பாரம் பரிய மேன்மைகளுடன் அடையாளப்படுத்தும் அத்தகைய திட்டங்களின் வழியாகவே அர்த்தமுள்ள மீள் வாழ்வு வசமாகும் .

## உசாத்துணைகள்


1. இராசரத்தினம், சு(1948)–மதிப்புரை, வெள்ளி விழா மலர், மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய சங்க வெளியீடு, சுன்னாகம் : திருமகள் அழுத்தகம்
2. சண்முகலிங்கன், என்(2013)–அறிவின் சமூகவியல் சிந்தனைகள், தெல்லிப்பழை: நாகலிங்கம் நூலாலயம்
3. நிஷாலினி, மகேந்திரன்(2014)–லீசிங் கம்பனிகளின் வரவும் மக்களின் கடன் சுமையும், தெல்லிப்பளை பிரதேசத்தினை மையமாகக்கொண்ட ஆய்வு, சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (பிரசுரிக்கப்படாத ஆய்வேடு)
4. Escober, Arturo (1995)-Encounting Development:The making and un making of third world, Princeton NJ: Princeton University Press

# கட்டுவனும் மயிலிட்டி தெற்கும்
# இரட்டைக் கிராமங்கள்



**கலாநிதி சிவ. தியாகராஜா**
**தமிழ் ஆர்வலர், எழுத்தாளர்**

பல நூற்றாண்டு காலமாக கிளை படர்ந்து, விழுது விட்ட பெரிய ஆலமரம் ஒன்று கட்டுவன் சந்தியின் அடையாளச் சின்னமாக நின்றிருந்தது. சந்திக்கு அருகிலிருந்த துரைச்சாமி ஐயரின் இருப்பிடக் காணியை இம் மரம் ஆக்கிரமித்ததால் 1956ல் இது தறிக்கப்பட்டது.

**அறிமுகம்**

வட யாழ்ப்பாணத்தில் கட்டுவனூரும் அதற்கு வடகிழக்கே அமைந்த தென்மயிலை என அழைக்கப்படும் மயிலிட்டி தெற்குப் பகுதியும் இரட்டைக் கிராமங்கள். இக் கிராம மக்களிடையே இனசனத் தொடர்புகளும், விவாகத் தொடர்புகளும், இணைந்து பழகும் ஐக்கியமும் இருப்பதைக் காணலாம். குடும்பத்தினரும், உறவினர்களும், நண்பர்களும் இவ்விரு கிராமங்களிலும் கலந்து வாழ்ந்தமையால் நெடுங்காலமாக இந்த இரு பகுதிகளும் ஒன்றிணைந்து ஒரே கிராமமாகவே செயற்பட்டு வந்திருக்கின்றன. நடைமுறையில் இதை இரு கிராமங்களாக எவரும் வேறுபடுத்திக் காட்டியதே கிடையாது.

**கட்டுவனூர்– மயிலிட்டி தெற்கு**

இலங்கையில் வடயாழ்ப்பாணத்தின் வலிகாமப் பகுதியில் – தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து கிழக்கே ஒரு கிலோமீட்டர் தொலைவில் – வர்த்தலை விளான், கட்டுவன், மயிலிட்டி தெற்கு (தென் மயிலை) ஆகிய கிராமங்கள் கிழக்கு–மேற்காக மூன்று கிலோமீட்டர் தூரமும், வடக்குக்–தெற்காக நான்கு கிலோமீட்டர் தூரமும் பரந்திருக்கின்றன. முற்காலத்தில் – ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் வரை – இம் மூன்று கிராமப் பகுதிகளும் 'கட்டுவன், மயிலிட்டி' என்ற இரு கிராமப் பெயர்களினாலுமே வழங்கப்பட்டு வந்திருக்கிறது. போர்த்துக்கேய (1621–1658) ஆவணங்களில் இக் கிராமங்கள் கட்டுவன், மயிலிட்டி என்ற பெயர்ப் பதிவுகளில் மட்டுமே காணப்படுகின்றன (Pieris, P. 1920).

இரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிரித்தானிய அரசின் நிர்வாகத்தின் கீழ் மயிலிட்டி என்ற கிராமம் 'மயிலிட்டி வடக்கு', 'மயிலிட்டி தெற்கு' எனப் பிரிக்கப்பட்டது. பின்னர் மயிலிட்டி தெற்கிலிருந்து 'வர்த்தலைவிளான்' தனிக்கிராமமாகப் பிரிந்தது. பண்டைய கட்டுவனிலிருந்து 'குரும்பசிட்டி' என்ற பெயரால் ஒரு கிராமம் தனியாகப் பிரிக்கப்பட்டது.

**பூர்வீக வரலாறு**

கிறிஸ்தாப்த காலத்தில் நாகநாடு என்ற பெயரால் வழங்கப்பட்டு வந்த புராதன யாழ்ப்பாணத்தை கந்தகோட்டத்திலிருந்து (இன்றைய கந்தரோடை) நாக அரசர்கள் ஆட்சி புரிந்து வந்தார்கள். அக்காலத்தில் இக் கிராமம் 'குட்டுவனூர்' என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்திருக்கிறது; குட்டுவனூர் என்ற பெயரே காலப்போக்கில் கட்டுவனூர் என மருவியிருக்கிறது என்பது சில வரலாற்று அறிஞர்களின் கருத்து. இதற்குத் தரப்படும் விளக்கங்கள் இவை:

இக் கிராமம் குட்டுவன் என்ற பெயர் கொண்ட அரச பிரதிநிதி ஒருவனின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தமையால் இக் கிராமத்திற்கு குட்டுவனூர் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பார் வரலாற்றாசிரியர் முதலியார் இராசநாயகம்.

பண்டைய தமிழகத்தைச் சேர்ந்த குட்ட நாட்டு மக்கள் இங்கே இடம் பெயர்ந்து வந்து குடியேறியபடியினால் இக் கிராமம் குட்டுவனூர் எனப் பெயர் பெற்றது என்பார் யாழ் பல்கலைக் கழகப் பேராசிரியர் கலாநிதி பாலசுந்தரம். இதற்கு மாறாக மற்றுமொரு மாற்றுக் கருத்தைத் தருகிறார் மகாஜனக் கல்லூரி முன்னாள் ஆசிரியரான அறிஞர் த. சண்முகசுந்தரம்:

"இந்த மண்ணில் மழை இல்லை. வற்றாத பேராறு எதுவும் இல்லை. மாரியில் மட்டும் மழைநீர் தேங்கி ஓடும். இந் நீரை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முன்னோர்கள் தேக்கி வைத்தனர். தமது நிலப்பரப்பிற்கு ஏற்ப கல்லணை, மண்ணனை என்பவற்றை அமைத்தனர். மேட்டுப் பூமியான கட்டுவன் ஊரிலே தோன்றுவது வழுக்கை ஆறு. இங்கே அதற்கு அணை ஒன்றைக் கட்டினார்கள். அதனைத் தொடர்ந்து அதற்கு 'அணைக்கட்டுவன் ஊர்' என்ற பெயர் எழுந்தது. இதுவே காலபப் போக்கில் கட்டுவன் ஆயிற்று." இந்த மண்ணில் தலைமுறை தலைமுறையாக வழங்கிவந்த பாரம்பரிய ஞாபகங்களை ஆதாரமாகக் கொண்டு இந்த விளக்கத்தை ஆசிரியர் தருகிறார்.

**வழுக்கை ஆறு**

இன்று வட யாழ்ப்பாணத்தில், சுன்னாகத்தினருகாமையில் அமைந்த கந்தரோடை கிராமம் உள்ள பகுதி கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட காலத்தில் கதிரமலை என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அங்கே வட இலங்கையை ஆட்சி புரிந்த நாக அரசர்களின் ஆட்சிபீடம் அமைந்த பகுதி 'கந்த கோட்டம்' என வழங்கலாயிற்று. இப் பெயரே பின்னர் கந்தரோடை ஆயிற்று (Navaratnam C.S. 1958).

இலங்கையின் ஆதிக்குடிகளான நாகர், இயக்கர் என்பவர்கள் பல வரலாற்றாசிரியர்கள் கூறுவது போல வெவ்வேறு இன மக்களல்ல. அவர்கள் மேற்கொண்ட வழிபாட்டு முறைகளாலும், வழிபட்ட தெய்வங்களினால் மட்டுமே வேறுபட்டவர்கள் என்பது அறிஞர் ஆனந்தா குமாரசாமியின் கருத்தாகும். புராதன குடிகளில் நாக வணக்கத்தை மேற்கொண்டவர்கள் நாகர்கள் எனவும், யக்ஷ தெய்வங்களை வழிபட்டோர் இயக்கர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள். மத்திய காலத்தில் சிவனை முழுமுதற் தெய்வமாக மேற்கொண்டவர்கள் சைவர்கள் எனவும், விஷ்ணுவை முதற் தெய்வமாகக் கொண்டோர் வைஷ்ணவர்கள் என அழைக்கப்பட்டதும் போன்ற வேறுபாடே இது.

கந்தரோடையைத் தலைநகராகக் கொண்டு நாகநாட்டை ஆட்சி புரிந்த ஓர் அரசனை வளைவாணன் எனவும், அவனது பட்டத்து அரசியை வாசமயிலை எனவும், அவர்களது இளவரசியை பீலிவளை என்றும் சீத்தலைச் சாத்தனாரின் மணிமேகலை காப்பியம் குறிப்பிடுகிறது.

இந்த நாக மன்னர்கள் உள்நாட்டில் அமைந்திருந்த தங்கள் தலைநகரத்திற்கு கடல் மூலம் வந்துசேரும் பொருட்களைக் கொண்டு வருவதற்காக மேற்குக் கடலிலிருந்து கந்தரோடை வரையும் — பொருட்களை அனுப்பி வைப்பதற்காக தலைநகருக்கு அப்பாலும் — நீண்டதொரு கடல் கால்வாயை வெட்டுவித்தார்கள்.

மேற்குக் கடற்கரையில் நாவாந்துறை துறைமுகத்திலிருந்து கல்லுண்டாய் கடற்கரை, கலையோடை(நவாலி), ஆனைக்கோட்டை வழியாக வந்த இக் கடல்கால்வாய் கந்தரோடையூடாக சங்கானை, அளவெட்டி, அம்பனை, தெல்லிப்பளை ஆகிய கிராமங்கள் வழியாக ஓடி இறுதியில் கட்டுவனூரில் முடிவு பெற்றது.

தெற்கிலிருந்து மன்னார்க் குடா மூலம் பாக்கு நீரிணை வழியாகவும், வடக்கே தமிழகத்திலிருந்தும், கிழக்கே சீனா போன்ற தூர கிழக்கு நாடுகளிலிருந்தும் வந்து நாவாந்துறையில் தரிக்கும் கப்பல்களிலிருந்து வழுக்கையாறு வழியாக வரும் சிறிய படகுகளில் கந்தரோடை வரையும், அப்பால் கட்டுவன் வரையும் இப் பொருட்கள் வந்தடைந்தன என்பதை அறிய முடிகிறது. இன்றைய கந்தரோடை அகழ்வுகளில் பண்டைய உரோமாபுரி நாணயங்களும், அரேபிய சாடிகளும், சீன பீங்கான்களும் காணப்படுவது இதை உறுதிப்படுத்துகிறது

(Thiagarajah, Siva 2016).

கந்தரோடையில் நாக அரசர்களின் ஆட்சிக்காலம் முடிவுபெற்ற பின்னர் காலப்போக்கில் இக் கால்வாய் கவனிப்பாரற்று தூர்ந்துபோய், பின்னர் மாரி காலத்து மழைநீர் வடிந்தோடும் கால்வாயாக வழுக்கை ஆறு செயற்பட்டது. இன்றுவரை இக் கால்வாய் தெல்லிப்பழையிலிருந்து கல்லுண்டாய் வரை ஓடிச்சென்று கடலை அடைகிறது.

**மயிலிட்டி தெற்கு**

"திருக்கிளர்சீர் மாடங்கள் திருநிறைந்த குடிமல்கி
பெருங்கடலின் கரைமேவி பெருந்துவளர் பூம்பொழில்கள்
வருக்கைநெடுஞ் சுளைபொழிதேன் வாழைகமுகு அடர்ந்துவளர்
மருக்கையென்ப தில்லாது மருவுபதி தென்மயிலை"

தென்மயிலை எனப்படும் மயிலிட்டி தெற்குப் பகுதி மாவும் பலாவும் கொண்ட குடிமனைகளோடு வயல்களும், குளங்களும், வாழைத் தோப்புகளும், புகையிலைத் தோட்டங்களும், தென்னை மரங்களும், கமுக மரங்களும் நிறைந்த பகுதி. பெரும்பாலும் கமத்தொழில் செய்வோரும், பள்ளி ஆசிரியர்களும், வர்த்தகத் துறையில் ஈடுபட்டோரும் இக் கிராமத்தில் அதிகம் காணப்படுவார்கள்.

இவ்விரு கிராமங்களில் வாழும் மக்களுக்கிடையே அவர்களது தபால் இலகா விலாசம் ஒன்றைத்தவிர வேறுவகை வேறுபாடுகள் ஏதும் இல்லாத படியினால், இனிவரும் பகுதிகள் ஒன்றாகவே கூறப்படுகிறது.

**வாழ்க்கை நிலை**

இக் கிராமங்களில் வாழ்ந்த பெரும்பாலான மக்கள் கமத்தொழில் மூலமே தமது சீவனத்தை நடத்திவந்தார்கள். ஒரு சிலர் மட்டும் வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தார்கள். வற்றாத கிணறுகளும், மாரி காலத்து மழைநீரைத் தேக்கிவைக்கும் குளங்களும், வளமான இரும்புச்சத்து கொண்ட செம்மண் நிலங்களும் அவர்களின் அன்றாட வாழ்க்கைக்கு ஆதாரமாயின.

கிணறுகள் பத்து மீட்டருக்கு மேல் ஆழம் கொண்டவையாக இருந்தன. இவற்றிலிருந்து வயல்களுக்கு நீர் பாச்சுவது ஒரு கூட்டு முயற்சி. பனை மட்டை நார்களால் பின்னப்பட்ட உலக்கை போன்ற மொத்தமான துலாக்கயிற்றின் அடியில் கட்டப்பட்டிருக்கும் பட்டையைப் பிடித்து நீர் இறைக்க ஒருவர், நீண்ட துலாக்கோலின் மீது முன்னும் பின்னும் நடந்து துலா மிதிக்க இருவர், கையில் 'கொக்கைச் சத்தகம்' பிடித்து வாய்க்கால் மாற்றி நீர் பாய்ச்ச ஒருவர் என நான்கு பேர் ஓர் இறைப்புக்குத் தேவைப்பட்டது. இதன் காரணமாக அந்த ஊர் மக்கள் ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

இக் கிராம மக்கள் "முயற்சி மிகுந்து சுறுசுறுப்பானவர்களாகவும், உடல் உறுதியும் அங்கலட்சணமும் உடையோராகவும், பெற்றது போதும் என்ற நிறைமனம் கொண்டவர்களாகவும் வாழ்ந்தார்கள்" எனப் பதிவு செய்திருக்கிறார் அந்த ஊர் வாசியான பண்டிதர் நமசிவாய தேசிகர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்த கட்டுவனூரின் வாழ்க்கை நிலை பற்றி விசுவப்புலவர் என அழைக்கப்பட்ட 'கட்டுவனூர்க்கவி' சட்டம்பியார் விசுவநாதரின் (1795–1862) 'வசந்தன் நாடகம்' பாடல்கள் மூலம் நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

அக்கால விவசாய வாழ்க்கையின் நடைமுறைகள்— நாற்று நடுகை, வெள்ளப் பாய்ச்சல், பள்ளம் தோன்றி உதவிக் கரம் தருதல், தினைப்புனம், அருவி வெட்டல், சூடு மிதித்தல் ஆகியன கோலாட்டப் பாடல்களாகக் கூறப்படுகிறது. நெற் பயிரீடு, புகையிலைப் பயிரீடு, விவசாயம் தந்த பொருளாதார வளம், கோயில்களோடு இணைந்த சமூக வாழ்க்கை, குடும்ப ஒற்றுமை, கூட்டு வாழ்க்கை என்பன அக்கால வாழ்க்கையின் ஆதார சுருதிகளாக விளங்கின.

**கிராமக் கோயில்கள்**

பண்டைய காலம் தொட்டு கிராமக் கோயில்கள் தொழுகைத் தலங்களாகவும், மக்கள் கூடிப் பேசும் இடங்களாகவும், இலக்கியப் பேச்சுக்கள் நடைபெறும் மன்றங்களாகவும், கதா காலாட்சேப மண்டபங்களாகவும், கலாச்சாரக் காவலரண்களாகவும் விளங்கி வந்தன. சினிமாவோ, நாடக அரங்கங்களோ, சங்கீத சபாக்களோ இல்லாத ஒரு காலகட்டத்தில் கோயில் செல்வது தொழுகைக்காக மட்டுமல்லாது பொழுது போக்கிற்காகவும் இருந்தது. திருவிழாக் காலங்களில் நடனமும் நாட்டியமும், நாடகமும் கூத்தும், நட்டுவமும் நாதஸ்வரமும் கோயில்களில்தான் நடைபெற்றன.

இக் கிராமங்களின் மிகப் பழமையான கோயில் வறுத்தலை விளானின் வடமேற்கு மூலையில் அமைந்த கண்ணகி ஆலயமாகும். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து கஜபாகு மன்னன் (கி.பி. 174–196) கண்ணகி வழிபாட்டை வடயாழ்ப்பாணத்தின் யம்புகோளத்துறை வழியாக கொண்டுவந்த காலத்தில் இந்த ஆலயம் கட்டப்பட்டதாக மரபுவழிச் செய்திகள் உள்ளன.

**சிதிலமடைந்த நிலையிலிருக்கும் விநாயகர் ஆலயம்**

இக் கிராமங்களின் காவல் தெய்வங்களாக ஊரின் நான்கு மூலைகளிலும் நான்கு எல்லைக் கோவில்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. ஊரின் வடமேற்கு மூலையில் வடக்கே தையிட்டியும், மேற்கே வீமன்காமமும் வர்த்தலைவிளானோடு இணையும் மூலையில் கண்ணகி கோயிலும், மருதடி விநாயகர் ஆலயமும் காணப்பட்டன.

வடகிழக்கு மூலையில் வடக்கே பலாலியும், கிழக்கே வசாவிளானும் தென்மயிலையோடு இணையும் இடத்தில் மாகாளி அம்மன் கோயில் இருந்தது. இரண்டாவது உலகப் போரின் போது 1943–44 ம் ஆண்டுகளில் ஆங்கிலேய அரசினர் பலாலி விமானத் தளத்தை அமைத்த போது இக் கோயில் அழிக்கப்பட்டது. ஆனாலும் இக் கோயில் இருந்த இடத்தில், விமானத் தளத்தின் அருகாமையில் ஒரு அம்பாள் விக்கிரகம், மேலே கற்பலகையினால் மூடப்பட்டு ஒரு பக்கம் திறந்த ஒரு கற்குழியினுள்ளே நெடுங்காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தென்கிழக்கு மூலையில் கிழக்கே குரும்பசிட்டியும், தெற்கே குப்பிளானும் கட்டுவனோடு இணையும் பகுதியில் தண்ணீர்த்தாழ்வு வைரவர் ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது.

தென்மேற்கு மூலையில் தெற்கே மல்லாகமும், மேற்கே தெல்லிப்பழையும் (கொத்தயாகல்) இணையும் இடத்தில் ஐயனார் கோயிலும், கோயில் குளமும் காணப்பட்டன.

இவை தவிர சைவமடம் ஞானவைரவர் ஆலயம், வீரபத்திரர் ஆலயம், மாவடி வைரவர் கோயில், ஆறன் வைரவர் ஆலயம், பிடாரத்தனை அம்மன் கோயில், முத்துமாரி அம்மன் ஆலயம், கற்வீருடத்துப் பிள்ளையார் கோயில், இலந்தையடி வைரவர் கோயில் என்பன கிராமம் முழுவதும் பரந்து செறிந்து காணப்பட்ட ஆலயங்களாகும். இக் கோயில்களில் பல பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில்— சுதேச தெய்வங்களை வணங்குவதற்கான தடை அரசினால் நீக்கப்பட்ட பின்னர் —1796 ம் ஆண்டின் பின்னர் கட்டப்பட்ட கோயில்களாகும்.

போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் (1621–1658) பழமையான சிறிய உள்ளூர்க் கோயில்கள் அழிக்கப்படாதிருந்த போதிலும் பிரார்த்தனைகள் முற்றாகத் தடைசெய்யப் பட்டிருந்தன.

**சைவமடம் சந்தி**

பிந்நாட்களில், ஊரின் பெயரால் 'கட்டுவன் சந்தி' என அழைக்கப்பட்ட முச்சந்தி தெல்லிப்பழை செல்லும் சாலையும், மல்லாகம் செல்லும் பாதையும், வசாவிளான் செல்லும் பாதையும் சந்திக்கும் முச்சந்தி முந்நாளில் 'சைவமடம் சந்தி' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. வண்டிப்பாதைகளாக இருந்த இச் சாலைகள் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில்தான் தார் ரோட்டுக்களாக மாற்றப்பட்டன.

1910 ம் ஆண்டில் வசாவிளான் மெஸ் வேலுப்பிள்ளை என்பவரால் எழுதி வெளியிட்ட 'வசாவிளான் வைபவம்' என்ற நூலில் காணப்படும் சைவமடம் பற்றிய பகுதி இது:

"மல்லாகத்திலிருந்து வசாவிளான் போகும் மாட்டுவண்டிப் பாதையானது முதலில் வடக்கு நோக்கி ஏழாலை, கட்டுவன் ஆகிய ஊர்களினூடாகச் சென்று சைவமடம் சந்தியையடைந்த பின்னர் வலது புறம் திரும்பி கிழக்குத் திசை நோக்கிச் செல்கிறது. நீண்ட விழுதுகள் கொண்ட நெடிதுயர்ந்த ஆலமரங்கள் சூழ்ந்திருக்கும் சைவமடம் சந்தியில், சுண்ணாம்பாலும் கல்லினாலும் கட்டப்பட்டு ஓடுகளினால் வேயப்பட்ட ஒரு சத்திரமும், அதையடுத்து பாதையருகே வரிசையாகச் சுமைதாங்கிக் கற்களும் இருக்கின்றன. சத்திரத்தினருகே கால்நடைகளுக்கான வைக்கோற் போரும், தண்ணீர்த் தொட்டியும் உள்ளன. இச் சத்திரத்திற்குக் கிழக்கே, பரந்த கிளைகளுடன் விரிந்து நிற்கும் ஆலமரத்தின் கீழே ஒரு வைரவர் கோவில் இருக்கிறது. சத்திரத்தின் பின்னாலும், கோயிலின் சுற்றாடலிலும் இராமேச்சரத்திலிருந்து குடிவந்த பல சைவக் குடும்பங்களின் வீடுகளும் குடிசைகளும் இருக்கின்றன. இக் குடிகளினாற்போலும் இச் சந்தி சைவமடம் எனப் பெயர் பெற்றது என்ப."

கட்டுவன் சைவமடம் சந்தியிலிருந்த சத்திரம் வழிப்போக்கர்களும் நீண்ட தூர கால்நடைப் பயணிகளும் இரவு தங்கி, இளைப்பாறி, மறுநாள் தமது பயணத்தைத் தொடருவதற்காகக் கட்டப்பட்ட சத்திரம். இச் சத்திரத்தில் எல்லா நாளும் வரகரிசிச் சோறும்,

கம்பங் கூழும் இலவசமாகவே கிடைக்கும் எனப் பதிவு செய்திருக்கிறார். வசாவிளானில் வாழ்ந்த வரலாற்றாசிரியர் மெஸ் வேலுப்பிள்ளை.

“சாலை வழியே மாட்டு வண்டியில் பயணிப்போரும், தலையில் பொதி சுமந்த காலாட் பயணிகளும் இச் சத்திரத்தில் தங்கி, உண்டி புசித்து, நீராகாரம் செய்து, இளைப்பாறிய பின்னர் தமது பயணத்தை மேலே தொடர்வர். இச் சத்திரத்தில் எந்த நாளும் வரகரிசிச் சோறும், கம்பங் கூழும் சும்மாவே கிடைக்கும்.”

வசந்த நாடகம் இயற்றப்பட்டு ஒரு நூற்றாண்டுகளின் பின்னர் எழுதப்பட்ட இத் தரவு, அன்றைய இக் கிராமம் பற்றிய சிறப்பான சில செய்திகளை அறியத்தருகிறது.

விருந்தோம்பல் இக் கிராம மக்களின் தலையாய பண்பாக இருந்த ஒரு காலம் அது என்பதை இத்தால் அறிய முடிகிறது. வாகன வசதிகள் இல்லாத அக் காலத்தில் மாட்டு வண்டி மற்றும் கால்நடைப் பயணிகளுக்கு தினமும் இலவசமாக உண்ணுவதற்கு உணவும், குடிப்பதற்கு கூழும், தங்கிச்செல்ல இடமும் கொடுத்து வருவதற்கு இக் கிராம மக்களுக்கு தாராள மனமும், தகுந்த வருமானமும் இருந்திருக்க வேண்டும்.

இரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் வண்டிப்பாதைகள் ஒன்று கூடிய கட்டுவன் சந்தியில் இது போன்ற ஒரு சுமைதாங்கிக் கல்லே பாதைகாட்டியாக நின்றது. இடது பக்கத்தில் தெல்லிப்பழை என்றும், வலது பக்கத்தில் அச்சுவேலி என்றும், எதிரே சென்ற பாதை சுன்னாகம் என்றும் பொறிக்கப்பட்டிருந்தது.

1950 களில் கட்டுவன் சந்தியில் கிளைவிட்டு, விழுது விட்டு பரந்த ஓர் ஆலமரம் நின்றிருந்ததை நம்மில் வயதானவர்கள் ஞாபகம் வைத்திருப்பார்கள். ஆனால், சந்தியடி ஞானவைரவர் ஆலத்திற்கு மேலாகவும் ஓர் ஆலமரம் படர்ந்திருந்தது என்பது நாம் அறியாத தகவல்.

பிந்நாட்களில் இக் கோயில் பெரிதாக அமைக்கப்பட்ட சமயம் இந்த ஆலமரம் தறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**கல்வி, விளையாட்டு, பொருளாதார மேம்பாடு**

பல நூற்றாண்டுகளாக இக் கிராம மக்கள் அக் காலகட்டத்திற்கு ஏற்ற கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி வந்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் கட்டுவனூரில் வாழ்ந்த சட்டம்பியார் காசிநாதர் என்பவர் உக்குடைப் பகுதியில் நடாத்தி வந்த திண்ணைப் பள்ளிக்கூடம் அயலூர்களிலெல்லாம் பெயர்பெற்றிருந்தது. பலாலி, வசாவிளான், மல்லாகம் ஆகிய கிராமங்களிலிருந்து வந்த மாணவர்கள் அங்கே தமிழ் இலக்கணம், இலக்கியம், கணிதம் ஆகிய பாடங்களில் பயிற்சி பெற்றார்கள்.

காசிநாதரின் பிள்ளைகள் மூவரும் சட்டம்பியார் என வழங்கப்பட்ட படியினால் அவர்களும் படிப்பாற்றல் மிக்க ஆசிரியர்களாக இருந்திருக்க வேண்டும். சட்டம்பியார் விசுவர், சட்டம்பியார் பூதர், சட்டம்பியார் சின்னர் என்பன அவர்களுக்கு ஊரில் வழங்கிய

பெயர்களாகும். இவர்களில் மூத்தவரான விசுவநாதப் புலவர் வரகவி எனப் பெயர் பெற்றவர். இவர் உக்குடையில் தந்தையார் நடத்திவந்த திண்ணைப் பள்ளியைத் தொடர்ந்து நடத்திவந்த படியால் இத் திண்ணைப் பள்ளிக்கூடப் பாரம்பரியம் அக் குடும்பத்தில் பல தலைமுறைகளாகத் தொடர்ந்து வந்திருக்க வேண்டும்.

கட்டுவனூரின் கல்விப் பாரம்பரியத்தைப் பேணிவந்தோர் பலர். வசந்தன் நாடகம், வல்லைப் பதிகம், மருதடி விநாயகர் வெண்பா ஆகிய நூல்களை இயற்றிய வரகவி சட்டம்பியார் விசுவநாதர்; சித்திரக்கவி, வினோத விசித்திர என்னும் நூலைப்பாடிய மயில்வாகனப் புலவர்; அவரது தம்பியாரான சரவணமுத்துப் புலவர்; தொல்பழம் இலக்கணமான தொல்காப்பியத்திற்கு உரை கண்ட பிரம்மஸ்ரீ சணேசையர் அவர்கள்; கணேசையரின் மாணாக்கர்களான பண்டிதர் வ. முத்துக்கமாரு, பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் ஆகியோர் இவ் வழிவழி வந்த கட்டுவனூர் கல்விப் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்களாவார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இக் கிராம இளைஞர்கள் தெல்லிப்பழையிலும், சுன்னாகத்திலும் அமைந்த ஆங்கிலக் கல்லூரிகளில் பயிலத் தொடங்கினார்கள். விஞ்ஞானம், வரலாறு, பௌதிகம், உயர் கணிதம் ஆகிய துறைகளில் பயிற்சி பெற்ற பலர் பரீட்சைகளில் சித்தியடைந்து உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உத்தியோகம் பெற்றார்கள். சிலர் பல்கலைக் கழகங்களில் உயர் கல்வி பெற்று விரிவுரையாளர்களாகவும், ஆய்வாளர்களாகவும் பணியாற்றினார்கள்.

சில மாணவர்கள் விளையாட்டுத் துறையில் யாழ்ப்பாணக் குடாநாட்டு அளவிலும் (பரமநாதர் குலசிங்கம் - JSSA Athletic Champion 1954: First place in 100 yards, 200 yards, Long Jump), தேசிய அளவிலும் (நாகலிங்கம் இராசலிங்கம் - All Ceylon National Badminton Champion 1960) பெருஞ்சாதனைகனை நிலைநாட்டினார்கள். இன்னும் பலர் கல்லூரிகளின் உதைபந்தாட்ட, கிரிக்கெட் அணிகளில் சிறப்பாக ஆடி பெயரும் புகழும் பெற்றார்கள். பிந்நாட்களில் பொலிஸ் அதிகாரியாகப் பதவி வகித்த திரு. நல்லையா மகாஜனக் கல்லூரியில் உதைபந்தாட்ட அணியின் தலைவனாகவும் (Football Team Captain – 1953), திரு ஜெயராஜசிங்கம் யூனியன் கல்லூரி கிக்கெட் அணியின் தலைவனாகவும் (Cricket Team Captain) பணியாற்றியவர்கள்.

இவர்களை முன்னோடியாகக் கொண்டு ஆண்டு தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதிலும், கிராம உதைபந்தாட்ட, கிரிக்கெட் அணிகளை இயக்குவதிலும் கட்டுவனூர் ஒரு முன்னோடிக் கிராமமாக விளங்கியது. இக் கிராம அணிகளில் விளையாடிய பல மாணவர்கள் கல்லூரி அணிகளில் வெற்றிகரமாக ஆடினார்கள். இந்த ஆர்வமே சிறிய வயதில், இந்த ஊர் வீரபத்திர ஆலய முன்றலில் கிரிக்கெட் பந்துருட்டிய என்னையும் பிந்நாளில், கொழும்பு பல்கலைக் கழக கிரிக்கெட் அணியில் விளையாடுவதற்கான அடித்தளமாக அமைந்தது.

மற்றும் பலர் இலங்கையின் பல பாகங்களிலும் வியாபாரத் துறையில் ஈடுபட்டு பெரும் பொருள் ஈட்டினார்கள். இவ்வாறு பணவசதி கொண்டவர்கள் பல வகையான பொதுப் பணிகளுக்கும், வசதி குறைந்தவர்களுக்கும் பொருளுதவி புரிந்தார்கள். இதனால் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு மக்கள் வாழ்க்கை வளம் பெற்றது.

**கிராம அபிவிருத்தி**

1918ம் ஆண்டிலிருந்து இக் கிராமத்தின் கல்வி கற்ற சில இளைஞர்கள் ஒன்றுகூடி 'தென் மயிலை செந்தமிழ் தேர்ச்சிக் கழகம்' என்ற பெயரில் ஒரு சங்கம் ஆரம்பித்தார்கள். இச் சங்கத்தினர் மாதாமாதம் கட்டுவன் ஞானவைரவர் ஆலய மண்டபத்தில் கூடி கல்வி–கேள்விகளிலும், சமயப் பேச்சுக்களிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

இக் கிராமத்தின் முன்னேற்றத்திற்காக ஒரு கிராம அபிவிருத்திச் சங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தை முதலில் ஆரம்பித்து வைத்தவர்கள் மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த மலாயா பென்சனர் திரு. கந்தவனம் பொன்னம்பலம், ஆசிரியர் திரு. சி. கந்தவனம் ஆகியோராவர். இவர்களோடு கட்டுவனூர் நில அளவையாளர் திரு. கந்தையா சின்னப்பு, வர்த்தலைவிளான் ஆசிரியர் திரு. க. சரவணமுத்து ஆகியோரும் இணைந்து கொண்டார்கள்.

1922ம் ஆண்டில் 'பாலர் ஞானோதய சங்கம்' என்ற பெயரில் ஒரு சங்கம் நிறுவப்பட்டது. அவ்வாண்டு நவம்பர் மாதம் 23ந் திகதி சைவமடம் புறச்சாரில் மயிலிட்டி தெற்கு, கட்டுவன், வர்த்தலைவிளான் ஆகிய கிராமங்களிலுமுள்ள சில இளைஞர்கள் ஒன்றுகூடி இச் சங்கத்தை ஆரம்பித்து வைத்தார்கள். இச் சங்கத்தின் 1922–1923 ஆண்டுக்கு திரு. கந்தவனம் பொன்னம்பலம் தலைவராகவும், திரு. சின்னத்தம்பி சரவணமுத்து காரியதரிசியாகவும், திரு. கந்தையா சின்னப்பு தனாதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார்கள். இச் சங்கம் ஒரு கிராம அபிவிருத்திச் சங்கமாக யாழ். கச்சேரியில் பதிவுசெய்யப்பட்டது.

இச் சங்கம் விரைவாக, விரிவாக வளர்ச்சியடைந்து வெகு சிறப்பாகச் செயற்பட்டது. திரு. க. பொன்னம்பலத்தைத் தொடர்ந்து திரு. சி. கந்தவனம், திரு சி. சுவாமிநாதன், திரு. சி. கார்த்திகேசு, வித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையர் ஆகியோர் முதல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இச் சங்கத்தின் தலைவர்களாகப் பணியாற்றினார்கள். நீண்ட காலத்திற்கு இச் சங்கம் 'மயிலிட்டி தெற்குப் பாலர் ஞானோதய சங்கம்' என்ற பெயராலே அழைக்கப்பட்டு வந்தது.

தொடர்ந்த ஆண்டுகளில் சங்கத்திற்கான ஒரு கட்டடம் கட்டுவதற்கான பணம் சேகரிக்கப்பட்டது. 1925ம் ஆண்டில் கட்டுவன் சந்திக்கு அருகாமையில் இருந்த 'வளமாரி' என்னும் நிலத்தில் 4 பரப்பு 400 ரூபா விலைக்கு அதன் உரிமையாளரான வர்த்தலைவிளான் வாசி ஒருவரிடமிருந்து வாங்கப்பட்டு சங்க மண்டப கட்டிட வேலையும் ஆரம்பிக்கப்பட்டது. 1926ம் ஆண்டில் 1233 ரூபா செலவில் இந்த மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவும் நடைபெற்றது. பின்னர் இச் சங்க மண்டபத்தை விரிவாக்கி ஒரு சைவ வித்தியாசாலையாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பாடசாலையைப் பூர்த்தி செய்வதற்கும், அதற்குரிய உபகரணங்களை வாங்குவதற்கும்,

ஆசிரியர்களின் வேதனங்களைக் கொடுப்பதற்கும் சங்கத்திடம் பணமின்மையால் இவ் வித்தியாசாலை 1927ம் ஆண்டில் சங்கப் பஞ்சாயத்தார் முடிவுப்படி சைவவித்தியாவிருத்திச் சங்கத்திற்கு (The Hindu Board of Education) கையளிக்கப்பட்டது. பஞ்சாயத்தினர் செய்த ஒரு தவறினால் பாடசாலைக் கட்டிடமும் சைவவித்தியாவிருத்தச் சங்கத்திற்கு அளிக்கப்பட.டது.

பாலர் ஞானோதய சங்கத்தினர் இதை எதிர்பார்க்கவில்லை. தாங்கள் செலவு செய்து கட்டிய பாடசாலைக் கட்டிடம் தங்களுக்கு உரிமையாக இருக்கவேண்டும் என்றும், அதன் நிர்வாகத்தை மட்டுமே சைவவித்தியாவிருத்திச் சங்கத்திற்கு கொடுக்கவேண்டும் என தாங்கள் பஞ்சாயத்தினருக்குக் கட்டளையிட்டதாகவும், ஆனால் பஞ்சாயத்தினர் தவறிழைத்துவிட்டார்கள் எனவும் கருதினார்கள். சங்கத்தில் சில அங்கத்தவர்கள் (பஞ்சாயத்திற்குச் சாதகமாக) பாடசாலைக் கட்டிடத்தையும் சைவவித்தியாவிருத்திச் சங்கம் எடுத்தால் என்ன? என வாதாடினார்கள். இதனால் ஏற்பட்ட வாதப்பிரதிவாதங்களால் சங்கத்தில் பிரிவுகள் ஏற்படலாயின.

1928ம் ஆண்டில் பாலர் ஞானோதய சங்கம் சைவ வி.வி. சங்கத்திற்கும், பஞ்சாயத்தாருக்கும் எதிராக யாழ். பெரிய நீதி மன்றத்தில் வழக்கைத் தொடர்ந்தார்கள். வழக்கு சாதகமில்லாது போகவே யாழ். உயர் நீதி மன்றத்திற்கு மனுச் செய்தார்கள். இறுதியில் பாடசாலைக் கட்டிடம் சங்கத்திறகு உரியதென்றும், அதன் நிர்வாகத்தை சைவ வி.வி. சங்கத்தினர் நடத்துமாறும் தீர்ப்பு வழங்கப்பட்டது. சங்கத்தினர் கடன்பட்டே வழக்கை நடத்தினார்கன். இதனால் சங்கத்திற்கு ஏற்பட்ட கடனை (ரூ. 3399) அடைக்க முடியாமல் சங்கம் அழிந்துவிடுமோ எனவும் சிலர் அஞ்சினர். சங்கத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காக திரு. சி. கந்தவனம், திரு. க. பொன்னம்பலம் இருவரும் (சங்க ஆரம்ப நிறுவனர்கள்) தமது சொந்தப் பணத்தில் இக்கடனை அடைத்து சங்கத்தைப் பாதுகாத்தார்கள். பாடசாலை தொடர்ந்து பாலர் ஞானோதய வித்தியாசாலை என்ற பெயரில் நடைபெற்றது.

அக்காலத்தில் கடிதங்களை அனுப்பும் பொருட்டு கிராம மக்கள் இரு மைல்களுக்கு அப்பாலுள்ள தெல்லிப்பழை தபால் நிலையத்திற்கு சென்றுவர வேண்டியதாக இருந்தது. இக் கஷ்டத்தை உணர்ந்த சங்கத்தினர் அரசிடம் முறையிட்டு மயிலிட்டி தெற்கு – கட்டுவன் சந்தியில் 1927ம் ஆண்டில் ஒரு தபாற் பெட்டி நிறுவப்பட்டது.

1932ம் ஆண்டு பங்குனி மாதத்திலிருந்து கிராம வாலிபர்களினதும். பொது சனங்களினதும் நலன் கருதி கட்டுவன் சந்திக்குச் சமீபமாக ஞானோதய வித்தியாசாலையின் அருகில் ஸ்ரீ கணேச வாசிகசாலை ஆரம்பிக்கப்பட்டது.

சங்கத்தினர் பல தடைவ வேண்டிக்கொண்டதன் பேரில் 1940ம் ஆண்டு மார்கழி மாதம் 5ந் திகதி பூ. பத்திநாதர் கட்டுவன்–தென்மயிலை கிராம விதானையாக நியமனம் பெற்றார்.

தொடர்ந்த ஆண்டுகளில் ஒரு கிளை வைத்தியசாலை, உப தபாற்கந்தோர், கூட்டுறவுப் பண்டகசாலை, நெசவு நிலையம், விளையாட்டு மைதானம் என்பவற்றை அரசாங்க உதவியோடு (அரசாங்க உதவி பெறுவதற்கு எத்தனை விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி, அலையலையாய் அலைந்து, எத்தனை அரச உத்தியோகத்தருக்கு 'ஐயா' போட்டு,

எத்தனை ஊழியருக்கு லஞ்சம் கொடுத்து இவற்றைச் சாதித்தார்கள் என்பதை எனது தந்தையார் மூலம் அறிந்திருக்கிறேன்) இச் சங்கம் அமைத்துக் கொடுத்து கிராமத்தை முன்னேற்றமடையச் செய்தது.

காலப் போக்கில் பாலர் ஞானோதய சங்கம் கிளைவிட்டு, விழுது விட்டு ஆல்போலப் பெருகி வளர்ந்தது. ஐக்கிய நாணய சங்கம் (உழவர்களுக்கு மிகக் குறைந்த வட்டியில் பணம் கொடுப்பது), ஐக்கிய பண்டகசாலை (விளைபொருட்களை சேமித்து வைக்குமிடம்), விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் (விளை பொருட்களை இடைத் தரகர் இல்லாமல் விவசாயிகளுக்கு விற்றுக் கொடுப்பது), கிராம முன்னேற்றச் சங்கம் (மக்களின் குறைகளைக் கேட்டறிந்து முடிந்த அளவில் நிவாரணம் பெற்றுக் கொடுப்பது), மத்தியத்தர் சபை (மக்களில் ஒருவருக்கொருவர் இடையே ஏற்படும் காணி மற்றும் பிரச்சினைகளை கோர்ட்டுக்குப் போகாமல் தீர்த்து வைப்பது), மாதர் சங்கம், மாதர் ஐக்கிய நாணய சங்கம், இந்து சமய அபிவிருத்திச் சங்கம், அந்தியகால சகாயநிதிச் சங்கம் அனைத்தும் பாலர் ஞானோதய சங்கத்தின் கிளைகளாகும்

**பாலர் ஞானோதய மாதர் சங்கம் 1956**

இது மட்டுமா? எத்தனை எத்தனை குச்சொழுங்கைகளை அகலமான கார்ப் பாதைகளாக்கி, முக்கிய தெருக்களோடு இணைத்து, அவசரமாக வைத்திய உதவி பெறுவதற்கான போக்குவரத்தைச் சுலபமாக்கிய பெருமையும் இச் சங்கத்தையே சேரும். இச் சங்கம் கிராமத்திற்காக ஆற்றிய சேவைகளும் தொண்டும் எழுத்திலும், சொற்களிலும் அடக்க முடியாதவை.

அரை நூற்றாண்டுகளாக இச் சங்கம் ஆற்றிய பணிகளால் மிகத் தங்கிய நிலையிலிருந்த இக் கிராமம் விரைந்து முன்னேறியது. மக்களின் கல்வியறிவும் பொருளாதாரமும் பெருகியது. பொருளாதாரம் பெருக மாடிமனைகள் எழுந்தன. ஆலயங்கள் புனர் நிர்மாணம் செய்யப்பெற்றன. மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்ட வல்லுனர்கள், கலாநிதிகள், பேராசிரியர்கள், பல்துறைப் பட்டதாரிகள், ஆசிரியர்கள், நகர்காவற் பகுதி, தபாற் கந்தோர்ப் பகுதி, வங்கிப் பகுதி முதலிய பல துறைகளில் உத்தியோகத்தர் தோன்றினார்கள். இக் கிராமம் யாழ்ப்பாணத்திலிருந்த மற்றைய பல கிராமங்களுக்கு ஒரு முன்மாதிரிக் கிராமமாக மிளிர்ந்தது.

**அழிவும் துளிரும்**

1987 – 1988 ம் ஆண்டுகளில் இலங்கை அரசினர் பலாலி இராணுவ முகாமை விஸ்தரிப்புச் செய்யும் பொருட்டு கட்டுவன், தென்மயிலை, வசாவிளான் ஆகிய பழைமையான கிராமங்களில் வாழ்ந்த மக்களை அவர்களின் வதிவிடங்களிலிருந்து வெளியேற்றினார்கள். வெளியேற மறுத்தவர்கள் வலுக்கட்டாயமாக இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்டார்கள். பலரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான மக்கள், தலைமுறை தலைமுறையாக, வாழையடி வாழையாக வாழ்ந்து வந்த தென்மயிலை–கட்டுவன் கிராமம் முப்பத்திரண்டு ஆண்டுகளாக கோயில்களும், கோபுரங்களும், வீடுகளும், மாடங்களும் உடைந்து சிதிலமாகி, அப் பிரதேசம் முழுவதுமே காடுபிடித்து கிடந்தது. சென்ற ஐந்து ஆண்டுகளில் இக் கிராமத்தின் சில பகுதிகள் மட்டும் இலங்கை அரசினரால் விடுவிக்கப்பட்டு உரிய மக்களிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

இக் கிராம மக்களில் பெரும் பகுதியினர் புலம் பெயர்ந்து பிற நாடுகளிலும், இன்னொரு பகுதியினர் அயல் கிராமங்களிலும் வாழ்ந்து வருகிறார்கள். இலங்கை அரசின் இராணுவத்தினரால் இவர்களது வீடுகளையும், உடமைகளையும் மட்டும்தாம் பறித்தெடுக்க முடிந்தது. இம் மக்களது இன்றைய வம்சாவளியினரோ கிழக்கே நியூஸிலாந்திலிருந்து மேற்கே கனடா, அமெரிக்கா தேசங்கள் வரை உலகெங்கும் பரவி, துளிர்த்து, கிளைவிட்டு, பூத்துப் பூரித்து நிற்கிறார்கள். ஈழத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க புராதன கிராமமொன்றின் இன்றைய தலைமுறையினருக்கு முடிவோ, முற்றுப்புள்ளியோ கிடையாது.

**உசாத்துணை நூல்கள்**


1. வேலுப்பிள்ளை, க. (1910): வசாவிளான் வைபவம், வசாவிளான்.
2. இராசநாயகம், செ. (1933): யாழ்ப்பாணச் சரித்திரம், சென்னை.
3. முத்துக்குமாரு, வ. (1948): பாலர் ஞானோதய சங்க வெள்ளிவிழா மலர்,
4. திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.
5. சிற்றம்பலம், சி.க.(1993): யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு, யாழ்ப்பாணம்.
6. பாலசுந்தரம், இ. (2002): ஈழத்து இடப்பெயர் ஆய்வு, ரொறன்ரோ, கனடா.
7. Pieris, Paul (1920): The Kingdom of Jafanapatam, Ceylon Daily News Press, Colombo.
8. Rasanayagam, Mudaliyar C. (1926): Ancient Jaffna, Madras
9. Coomaraswamy, Ananda (1928): The Yaksas, part I, Washinton, USA
10. Navaratnam, C.S. (1958): Tamils and Ceylon, Jaffna.
11. Thiagarajah, Siva (2016): Kantarodai Civilization of Ancient Jaffna, Colombo.

## முதல் 25 ஆண்டுகள்தோறும்

## சங்கத்திற் சொற்பொழிவு செய்த பெரியார்கள் (1922/23 - 1947/48)

1. சங்கானை திரு. நாகலிங்க சுவாமிகள்
2. திருவாலங்காடு ஸ்ரீமத் சங்கரசுப்பைய சச்சிதானந்த யோகிகள்
3. இணுவில் ஆசிரியர் திரு. சி. ஆறுமுகதாஸ்
4. வேதாரணியம் ஸ்ரீமத் அ. க. செல்லையாக்குருக்கள்
5. வீமன்காமம் ஆசிரியர் திரு. V. முத்துக்குமாரு M. A.
6. மயிலிட்டி ஆசிரியர் திரு. சி. சுவாமிநாதன் B.A
7. தெல்லிப்பளை நியாய துரந்தரர் திரு. க. தம்பையாபிள்ளை
8. அளவெட்டி ஆசிரியர் திரு. க. சற்குணசிங்கம்
9. மாவிட்டபுரம் பண்டிதமணி பிரம்மஸ்ரீ சு. நவநீதகிருஷ்ண பாரதியார்
10. ஏழாலை திரு.அ.பொன்னையா (அருளானந்தசிவம்)
11. ஏழாலை ஆசிரியர் திரு. வே. தம்பையா
12. ஏழாலை வடக்கு ஆசிரியர் பிரம்மஸ்ரீ பொ.சுந்தரசர்மா
13. குரும்பசிட்டி ஆசிரியர் திரு. பொ. பரமானந்தம்
14. வர்த்தலைவிளான் ஆசிரியர் திரு. க. சரவணமுத்து
15. உடுவில் பண்டிதர் பிரம்மஸ்ரீ சோமசுந்தரம்
16. நீர்வேலி பண்டிதர் திரு. சிற்சபேசன்
17. யாழ்ப்பாணம் உயர்திரு. சுவாமி உருத்திரகோடீஸ்வரர்
18. வேதாரணியம் ஸ்ரீமத் நா, அருணாசலதேசிகர்
19. வட்டுக்கோட்டை நியாயவாதி திரு. மு.சு.இராசரத்தினம்
20. தெல்லிப்பனை ஆசிரியர் திரு.தெ.அ. துரையப்பாபிள்ளை
21. காங்கேசன்துறை பிரம்மஸ்ரீ E. K. சிவசுப்பிரமணியஐயர்
22. மாவிட்டபுரம் பிரம்மஸ்ரீ சு. அரிகரக்குருக்கள்
23. குரும்பசிட்டி ஆசிரியர் திரு. த. கந்தையா
24. மட்டுக்களப்பு உயர்திரு.சுவாமி விபுலானந்தா
25. மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர்
26. திருநெல்வேலி வைத்தியர் திரு. கனகசபைப்பிள்ளை
27. யாழ்ப்பாணம் நியாயவாதி திரு. சு. இராசரத்தினம் B.A.
28. அளவெட்டி ஆசிரியர் திரு. C. மயில்வாகனம்

29. சுன்னாகம் பண்டிதர் திரு. மாணிக்கத்தியாகராசா
30. உடுவில் பிரம்மஸ்ரீ முத்துச்சாமிஐயர்
31. வட்டுக்கோட்டை நியாயதுரந்தரர் பண்டிதர் க.சிதம்பரநாதன்
32. ஈழகேசரி'ப் பத்திராதிபர் திரு. நா.பொன்னையா
33. தெல்லிப்பளை நியாய துரந்தரர் திரு. சி. சுப்பிரமணியம்"
34. தெல்லிப்பளை நியாயதுரந்தரர் திரு.வ.குமாரசுவாமி B.A
35. தெல்லிப்பளை நியாயதுரந்தரர் திரு. கு. ச. கனகராயர்
36. வட்டுக்கோட்டை நியாயதுரந்தார் கு. வே. நாகலிங்கம்
37. வட்டுக்கோட்டை நியாயதுரந்தார் திரு. S. நாகலிங்கம்
38. சுன்னாகம் ஆசிரியர் திரு. கு. முத்துக்குமாரசாமி B.A
39. கொக்குவில் ஆசிரியர் திரு. த. குமாரசாமிப்பிள்ளை
40. யாழ்ப்பாணம் நகரசபைத்தலைவர் திரு. சு. சு.நல்லையா
41. கொழும்பு உயர்தர நீதிமன்ற நீதியரசர் கௌரவ M. T. அக்பார்
42. மட்டுவில் பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை
43. இணுவில் திரு. க.வடிவேற்பிள்ளைச்சாமி.
44. மருதனார்மடம் திரு. சு. நடேசபிள்ளை B.A., B. L, M.SC.
45. சுன்னாகம் ஆசிரியர் திரு.மா.குமாரசாமி
46. இணுவில் வழக்கறிஞர் திரு.T.C. இராசரத்தினம்
47. யாழ்ப்பாணம் வடபெரும்பாக வித்தியாதரிசி திரு. K.S. அருள்நந்தி M. Sc.
48. வல்லுவெட்டித்துறை திக்கம் திரு. செல்லையாபிள்ளை
49. உரும்பிராய் பண்டிதர் திரு. வ. சு. இராஜஐயனார்
50. மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதம ஆசிரியர் திரு. வீ. வீரசிங்கம் B.A.
51. தெல்லிப்பளை ஆசிரியர் திரு. T. V. செல்லப்பா
52. 'இந்துசாதன' உதவிப் பத்திராசிரியர் திரு.K. K. நடராசா
53. தெல்லிப்பளை மகாஜன வித்தியாசாலை ஆசிரியர் திரு.கா.சின்னப்பா
54. சுன்னாகம் ஆசிரியர் திரு. கு.அம்பலவாணர்
55. கரவெட்டி வித்துவான் திரு.க.கார்த்திகேசு B. A. .
56. நியாயவாதி G. G. பொன்னம்பலம் M. A, M. S.C
57. நியாயவாதி திரு. கு. வன்னியசிங்கம் B. A.
58. வடபகுதி பொலிஸ் சுப்பிறின்ரென்டன் திரு. S. G. de சொயிசா
59. திருநெல்வேலி சங்கீத ஆசிரியர் திரு. அ. இராசுப்பிள்ளை

# பாலர் ஞானோதய சங்க
# நூற்றாண்டு வளாகம்




பாலர் ஞானோதய சங்க ஐக்கிய இராட்சிய கிளை தனது முக்கிய கனவாக எமது தாய்ச் சங்கத்துக்கு ஒரு மண்டபம் அமைப்பதை 2009ம் ஆண்டிலிருந்து திட்டமிட ஆரம்பித்தது. சங்கத்திற்கான நூறாவது வருட ஞாபகார்த்த மண்டபம் பல ஆண்டுகளின் தீர்மானத்தின் பின், 2014 ஆம் ஆண்டிலே பல வரைபுகள் ஆராயப்பட்டு இறுதியாக, பல தடங்கல்களுகளுக்கு பின் 2018ம் ஆண்டில் சங்கம் அமைந்த காணியிலேயே மண்டபம் அமைக்க தீர்மானிக்கப்பட்டது. இக் காணி சங்கத்துக்குரியது என உறுதிப்படுத்தப்பட்டு, 01/08/2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. நாட்டின் பொருளாதார நிலைமைகள் மோசமடைந்த காரணமாகவும் , மேலதிகமாக இரண்டு அறைகள் (விருந்தினர் அறைகள்) மற்றும் சில மாற்றங்கள் காரணமாகவும் திட்டமிடத்தை விட 50% அதிகமாக இம் மண்டபம் கட்டுவதற்கான செலவு உயர்வடைந்துள்ளது.

இம்மலர் வெளியிடும்போது இம் மண்டபம் பூர்த்தியடைந்து திறப்புவிழாவும் முடிவடைத்திருக்கும், (திறப்புவிழா 20/09/2023, நூற்றாண்டுவிழா 23/09/2023, தவிர்க்க முடியாதகாரணங்களால் சென்றவருடம் செய்ய முடியவில்லை).

இத்திட்டமானது வெளிநாடுகளில் உள்ள எமது கிராமம் சார்ந்த சங்கங்கள் , தனி நபர்கள் போன்றோருடன் பல ஆண்டுகளாக கலந்துரையாடப்பட்டு வந்தது. 2020 இல் இருந்து காணொளிமூலம் வெளிநாடுகளில் உள்ள சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினோம். எல்லோரும் ஆதரவு தெரிவித்த போதும், Swiss நாட்டு சங்கம் மட்டுமே எம்முடன் கைகோர்த்து, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உதவியது. இதனை விட சில தனிப்பட்ட நபர்கள் வேறு நாடுகளில் இருந்தும் உதவி புரிந்துள்ளார்கள்.

**இம் மண்டபத்தின் சில பயன்பாடுகளாக:**

- பாலர் ஞானோதய பாடசாலையின் விழாக்களுக்கும், கலை நிகழ்வுகளுக்கும் பயன் படுவதற்கு வழங்குதல்.
- வேறு கல்வித்தேவைகளுக்கும், உள்ளரங்க விளையாட்டுத்தேவைகளுக்கும் பயன்பாடுடையதாக வழங்குதல்.
- நூலக வசதி.
- பொது நிகழ்வுகள், தனியார் வைபவங்களுக்கு வழங்குதல்.
- தங்குமிட வசதியுடன் அறைகள்.
- காணொளி உதவியுடன் கூடிய கலந்துரையாடல் வசதி.
- மருத்துவ மற்றும் கருத்தரங்குகளுக்கு வழங்குதல்.

அருகிலுள்ள காணி உரிமையாளர்கள் தமது காணிகளை எமக்கு அன்பளிப்பாகவோ அல்லது விற்க முன்வரும் சந்தர்ப்பத்தில் வாகன தரிப்பிடங்களுடன், வெளி விளையாட்டு திடல்களும் உடையதாக இம் மண்டபம் முழுமை பெறும்.

இம் மண்டபம் அமைப்பதற்கு திட்டமிடல், நிதி சேகரிப்பு, கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவத்துக்கு ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் அங்கம் வகித்தோர் :

**ஐக்கிய இராட்சியத்தில் இருந்து :**

ஜெயஸ்ரீ முத்துக்குமாரு (ஸ்ரீ), கனகசபை கணேசநாதன், கந்தவனம் துரைராஜா, சங்கரப்பிள்ளை சிவானந்தா, சுமதி விஜயதாஸ் . தம்பிப்பிள்ளை விஜயதாஸ் , குட்டித்தம்பி கருணாகரன் (கண்ணன்), ரஞ்சிதமலர் ஸ்ரீவசந்தேஸ்வரன், கமலினி ஸ்ரீதரன் (சுவிஸ்), வ. ராஜதுரை (இலங்கை)

தொழில்நுட்ப கண்காணிப்பு : Eng. கனகரட்ணம் அருளொளிபவன்,

தொழில்நுட்ப ஆலோசகர் : Eng. சின்னத்துரை தயாபரன்

கட்டிட ஒப்பந்தக்காரர் : செல்வராஜா அஜித்குமார்

இக்கட்டிடத்துக்கு கலாநிதி.குட்டித்தம்பி கருணாகரன் அவர்கள் சுமார் 66% நிதி பங்களிப்பை வழங்கியது மட்டுமின்றி சுமார் 7 தடவைகள் நேரடியாக லண்டனிலிருக்குது விஜயம் செய்து மேற்பார்வை செய்தார். கலாநிதி .ச . சிவானந்தா அவர்களும் 15% நிதி பங்களிப்பை வழங்கியது மட்டுமின்றி 2 தடவைகள் நேரடியாக லண்டனிலிருக்குது விஜயம் மேற்பார்வை செய்தார். இத்துடன் க. கணேசனாதன், திருமதி ரஞ்சிதமலர் ஸ்ரீவசந்தேஸ்வரன், திருமதி.கமலினி ஸ்ரீதரன் ஆகியோரும் விஜயம் செய்தனர். இக்கட்டிடத்துக்கு நிதிப்பங்களிப்பு வழங்கியோர் விபரங்கள் இப்புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளது .

## போரின் பின் விடுவிக்கப்பட்ட போது,






## 01.01.2023 இல்



**06/2023 இல்**






**இன்று**



# பாலர் ஞானோதய சங்க நூற்றாண்டு வளாகம் கட்டுவதற்கு அன்பளிப்பு செய்தோர் விபரம்

Accont managed by building sub committee.
9/11/2023

| Country | | In British Pounds |
|---|---|---|
| | In memory of Late Mr.Kanapathipillai Kuddithamby & Mrs. Rasamma Kudddithamby | £100,000.00 |
| UK | Donated by Dr.K.Karunakaran | |
| | | |
| | In memory of Late Mr.Sangarappalai & Mrs. Nagaratnam Sangarappalai | £21,200.00 |
| UK | Dr.S.Sivanantha | |
| UK | Dr.(Mrs). Saroja Balendran | |
| UK | Mrs.Shantha Maxwell | |
| | | |
| | In memory of Late Mr. Chelliah Paramaswara | £9,765.00 |
| Canada | Dr.Ramesh Warren | |
| Canada | Mrs.S. Parameshwara | |
| US | Mrs. Bamini Rolest Blau | |
| Canada | Mr.Sathees Parameswara | |
| | | |
| | In memory of All our late village people | £10,000.00 |
| UK | Palar Gnanothaya sangam -UK | |
| | | |
| | In memory of Late Mr & Mrs.Thangarajah | £3,551.14 |
| UK | Mrs.Saro Pathamanathan | |
| Canada | Mr. T.Tharmabala | |
| | | |
| | In memory of Late Mr & Mrs.Kanagasabai | |
| UK | Dr.K.Kaneshanathan | £3,016.60 |
| Australia | Mr.Kanagasabai Ganeshanantham | |
| Australia | Mr.Kanagasabai Ganesharajah | |
| | | |
| | In memory of Late Mr Sinnakkuddi Kanthavanam | £2,000.00 |
| UK | Mr.K.Thurairajah | |
| | | |
| | In memory of Late Mr. Suppiah Kandiah & Mrs. Selvarani Kandiah | £2,229.65 |
| Swiss | Mrs.Kamalini Sritharan | |
| | | |

| | | |
|---|---|---|
| | In memory of Late Mr Sinnathurai Puvanarajah | £2,000.00 |
| UK | Mrs.Vanaja Parameshwaran | |
| UK | Mr.P.Kangeyan | |
| UK | Mrs.K.Puvanaraja | |
| | | |
| | In memory of Late Pandit Muthukumaru | £1,600.00 |
| UK | Dr.M.Ganeshananthan | |
| UK | Mr.M.Ganeshadevan | |
| | | |
| UK | Mr &Mrs.Vijayathas | £1,000.00 |
| UK | Mr.Sri Muthukumaru | £2,000.00 |
| Swiss | Mrs. Rajani Annalingam | £111.48 |
| Swiss | Mrs. Gowsini Sanmuganathan | £111.48 |
| Swiss | Mr.S Nirmalanathan | £1,114.83 |
| UK | Mr.K.Gnaneswaran | £150.00 |
| NewZeland | Mr.Sri Thambiya Satheeswaran | £518.70 |
| UK | Mrs. Ranjithamalar Srivasanthaswaran | £500.00 |
| Srilanka | Palar Gnanothaya sangam - Srilanka | £39.68 |
| UK | Mr.M.Arichandran | £1,000.00 |
| UK | K Kirupakaran | £100.00 |
| UK | Mr.Mahenthiran (Veemaraja) | £227.27 |
| Swiss | Mrs.Jeyanthi Selvaratnam | £454.55 |
| UK | Mr.S.Alalasundram | £400.00 |
| Canada | Mr.Vivekananthan Velayuthar | £307.78 |
| UK | Mr.Veyajaseelan | £500.00 |
| Canada | Mrs. Luxmi Sivasubramaniyam | £227.27 |
| UK | Mr.M.Thavendran | £1,000.00 |
| UK | Mr.Karthigesu Uthayathas | £1,000.00 |
| UK | Dr.S.Sivakumar | £1,000.00 |
| Swiss | Mrs.Janaki Parameswaran | £244.50 |
| Swiss | Mr.S.Kanathasan | £438.75 |
| UK | Mrs.Suganthy Sivaganeshan | £80.00 |
| UK | Mr.Velautham Ravindran | £1,000.00 |
| | External Donners | |
| UK | Access Direct (UK) | £100.00 |
| UK | Mr.K.Loganathan (Mallagam) | £100.00 |
| | In memory of Late Mrs.Selvaratnarajah Joharani | £3,374.69 |
| Srilanka | Mr. Selvaratnarajah Ajithkumar | |
| | **Total** | **£172,463.38** |

| Paid | | Srilankan | £ |
|---|---|---|---|
| | Pre Building work including Tube well, land cleaning | Rs. 1,189,460.00 | |
| | Building as planned including foundation for upstairs | Rs. 39,815,990.00 | |
| | Upstairs rooms+ balcany | Rs. 9,586,100.00 | |
| | Additional work including painting+ Celing | Rs. 5,444,000.00 | |
| | Wall+ design works+ additional work including Tiles | Rs. 7,558,307.00 | |
| | Air conditioners | Rs. 7,449,882.00 | |
| | Other | Rs. 17,513.00 | |
| | Total Spend | Rs. 71,061,252.00 | |
| | | | |
| | So far we paid | Rs. 69,452,468.00 | £166,423.91 |
| | We need to pay | Rs. 1,608,784.00 | |

இக் கட்டிடம் ஆரம்பித்ததில் இருந்து முக்கியமான வேலைகள் முடியும் வரை எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி தொழிநுட்ப மேற்பார்வை செய்த கட்டுவனைச் சேர்ந்த பொறியியலாளர் திரு .கனகரட்ணம் அருளொளிபவன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் . இவர் இப்போது UK இங்கு இடம்பெயர்ந்து விட்டார்.

இத்துடன் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி எமக்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்கிய பொறியியலாளர் திரு. சின்னத்துரை தயாபரன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் .

எமது எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்றபடி கட்டிடத்தை வடிவமைத்து, எமது கட்டிட அனுமதியை விரைவாகப் பெற்றுத்தந்த அம்பாள் கட்டிட ஒப்பந்த உரிமையாளர் திரு. செல்வராஜா அஜித்குமார் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் .

# முதல் இருபத்தைந்து ஆண்டுச் சங்க உத்தியோகத்தர்கள் (1922 / 23 - 1947/48)

| ஆண்டு | தலைவர் | உபதலைவர்கள் | காரியதரிசிகள் | தனாதிகாரிகள் |
|---|---|---|---|---|
| 1 | திரு. க. பொன்னம்பலம் | | திரு. சி. சரவணமுத்து | திரு. க. சின்னப்பு |
| 2 | திரு.சி.கந்தவனம் | | திரு. சு. பொன்னம்பலம் | திரு.சு கந்தையா |
| | | | | திரு.க. சின்னப்பு |
| 3 | திரு. சி. சுவாமிநாதன் | | திரு.சி.கந்தவனம் | |
| 4 | திரு. சி. சுவாமிநாதன் | | திரு.க.பொன்னம்பலம் | திரு.க.கந்தையா |
| 5 | திரு. சி. சுவாமிநாதன் | திரு.சி.கந்தவனம் | திரு.க.பூ.பொன்னம்பலம் | திரு.க.பொன்னம்பலம் |
| 6 | திரு.சி.கந்தவனம் | திரு.அ.பொன்னையா | திரு.க.சின்னப்பு | திரு.க.கந்தையா |
| | திரு.சி.கார்த்திகேசு (பின்) | திரு.சோ.பொன்னையா | திரு.சி.சரவணமுத்து | திரு.க.கந்தையா |
| 7 | திரு.சி.கார்த்திகேசு | திரு.சோ.பொன்னையா | திரு.க.பொன்னம்பலம் | திரு.க.கந்தையா |
| 8 | திரு.சி.கார்த்திகேசு | திரு.சி.கார்த்திகேசு | திரு.க.பொன்னம்பலம் | திரு.ஆ.சின்னத்துரை |
| 9 | திரு.சி.கார்த்திகேசு | திரு.வே.நாகமுத்து | திரு.கா.ஆறுமுகம்பிள்ளை | திரு.இ.குட்டித்தம்பி |
| 10 | வித்துவான் பிரம்மஸ்ரீ சி.கணேசையர் | திரு.வே.நாகமுத்து | திரு.இ.ஆறுப்பிள்ளை | திரு.இ.குட்டித்தம்பி |
| 11 | | திரு.சி.பொன்னம்பலம் | திரு.இ.ஆறுப்பிள்ளை | திரு.வி.கந்தையா |
| | | திரு.சி.கந்தவனம் | திரு.கா.ஆறுமுகம்பிள்ளை | திரு.ஆ.சின்னத்துரை |
| 12 | | திரு.சி.கந்தவனம் | திரு.க.பொன்னம்பலம் | திரு.கா.ஆறுமுகம்பிள்ளை |
| | | திரு.வே.நாகமுத்து | திரு.வி.கந்தையா | திரு.இ.குட்டித்தம்பி |
| | | திரு.சி.பொன்னம்பலம் | | |

| | தலைவர் | உபதலைவர்கள் | காரியதரிசிகள் | தனாதிகாரிகள் |
|---|---|---|---|---|
| | | | திரு.க.பொன்னம்பலம் | திரு.கா.ஆறுமுகம்பிள்ளை |
| | | திரு.சி.கந்தவனம் | திரு.த.செல்லத்துரை | திரு.க.நாகலிங்கம் |
| | | திரு.வே.நாகமுத்து | திரு.பூ பத்திநாதர் | திரு.சி.பொன்னம்பலம் |
| | | திரு.கா.நாகலிங்கம் | திரு.க.பொன்னம்பலம் | திரு.த.செல்லத்துரை |
| 13 | | திரு.சி.கந்தவனம் | திரு.இ.தாமோதரம்பிள்ளை | திரு.பூ.பத்திநாதர் |
| | | திரு.வே.நாகமுத்து | திரு.க.பொன்னம்பலம் | திரு.சீ.விஜயசுந்தரம் |
| 14 | | திரு.சோ.செல்லப்பா | திரு.இ.தாமோதரம்பிள்ளை | திரு.க.பொன்னம்பலம் |
| | | திரு.சோ.செல்லப்பா | திரு.பூ பத்திநாதர் | திரு.த.செல்லத்துரை |
| 15 | | திரு.வே.நாகமுத்து | திரு.சி.கந்தவனம் | திரு.க.பொன்னம்பலம் |
| | | திரு.சோ.செல்லப்பா | திரு.த.செல்லத்துரை | திரு.இ.தாமோதரம்பிள்ளை |
| | | திரு.பூ.பத்திநாதர் | திரு.க.பொன்னம்பலம் | திரு.இ.தாமோதரம்பிள்ளை |
| 16 | | திரு.சி.கந்தவனம் | திரு.இ.நமசிவாயம் | திரு.த.செல்லத்துரை |
| | | திரு.சோ.செல்லப்பா | திரு.க.பொன்னம்பலம் | திரு.இ.தாமோதரம்பிள்ளை |
| | | திரு.பூ.பத்திநாதர் | திரு.த.செல்லத்துரை | திரு.வ.முத்துக்குமாரு |
| 17 | | திரு.சி.கந்தவனம் | திரு.இ.தாமோதரம்பிள்ளை | திரு.த.சிவக்கொழுந்தார். |
| | | திரு.சி.சரவணமுத்து | திரு.வ.முத்துக்குமாரு | திரு.த.செல்லத்துரை |
| 18 | | திரு.இ.நமசிவாயம் | திரு.சி.கந்தையா | |
| | | திரு.இ.நமசிவாயம் | திரு.இ.நமசிவாயம் | |
| 19 | | திரு.சி.கந்தவனம் | | |
| 20 | | திரு.சி.சரவணமுத்து | | |
| 21 | | திரு.சோ.செல்லப்பா | | |

| | தலைவர் | உபதலைவர்கள் | காரியதரிசிகள் | தனாதிகாரிகள் |
|---|---|---|---|---|
| 22 | வித்துவான் பிரம்மஸ்ரீ சி.கணேசையர் | திரு.சி.கந்தவனம் | திரு.க.பொன்னம்பலம் | திரு.பூ.பத்திநாதர் |
| | | திரு.சி.கந்தையா | திரு.த.செல்லத்துரை | திரு.கா.ஆறுமுகம்பிள்ளை |
| | | திரு.சோ.செல்லப்பா | திரு.க.பொன்னம்பலம் | திரு.கா.ஆறுமுகம்பிள்ளை |
| 23 | | திரு.சி.கந்தவனம் | திரு.த.கதிரவேலு | திரு.சீ.விஜயசுந்தரம் |
| | | திரு.சி.கந்தையா | திரு.இ.நமசிவாயம் | திரு.த.செல்லத்துரை |
| 24 | | திரு.வ.முத்துக்குமாரு | திரு.அ.நல்லையா | திரு.வீ.செல்லையா |
| | | திரு.வ.முத்துக்குமாரு | திரு.க.பொன்னம்பலம் | திரு.த.செல்லத்துரை |
| 25 | | திரு.சி.கந்தவனம் | திரு.வ.முத்துக்குமாரு | திரு.ஆ.த.சுப்பிரமணியம் |
| | | திரு.சிகந்தையா | | |
| | | திரு.இ.நமசிவாயம் | | |

வெள்ளிவிழாவின் பின்னரான ஆவணங்கள் கிடைக்க பெறாமையால் எம்மால் பல சங்க உறுப்பினர்களின் விபரங்களை சரியாக நிறைப்படுத்த முடியவில்லை . பின்வரும் எமது ஊரவர்கள் முக்கிய பதவிகளை வகித்துள்ளார்கள்.

தலைவர்கள்
அமரர். திரு க. சின்னப்பு, அமரர். பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் . (நீண்டகாலமாக தலைமை பதவி வகித்தவர்)
அமரர்.திரு.கா .நாகலிங்கம், திரு வ .சின்னத்துரை, அமரர்.திரு . K.T. பாலசுப்ரமணியம், திரு.நமசிவாயம் பாலச்சந்திரன் (தற்போதைய தலைவர்.)

செயலாளர்கள் :
Dr .மு .சிதம்பரநாதன், திரு.வ . இராஜதுரை (தற்போதைய செயலாளர், நீண்டகாலமாக)

பொருளாளர்கள்:
திரு .சு .நவரத்தினம் , திரு. க .தர்மநாயகம் , திரு .கா .அருள்தாஸ் ( தற்போதைய பொருளாளர் )

## பாலர் ஞானோதய சங்கத்தில் தலைவர்களாக அங்கம் வகித்தோர்
## (1922 இல் இருந்து)

(யாருடைய தகவல்களும் திட்டமிட்டு மறைக்கப்படவில்லை.
எம்மிடம் தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை)



அமரர் திரு. க. பொன்னம்பலம்



அமரர் திரு. சி. கந்தவனம்

இவர்கள் இருவரின் படங்களும் கிடைக்கப்பெறவில்லை.


அமரர் திரு. சி. சுவாமிநாதன்

அமரர் திரு. சி. கார்த்திகேசு


அமரர் பிரம்ம ஸ்ரீ சி.கணேசையர்



அமரர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர்


அமரர் திரு கா .நாகலிங்கம்


அமரர் திரு க. சின்னப்பு



திரு. வ .சின்னத்துரை




அமரர் திரு. K. T. பாலசுப்ரமணியம்



தற்போதைய தலைவர் திரு. நமசிவாயம் பாலச்சந்திரன்



1990 இல் இருந்து இச் சங்கத்தைக் கட்டிக்காத்துவரும்
தற்போதைய செயலாளர் திரு. வ. இராஜதுரை



தற்போதைய பொருளாளர் – திரு. கா. கார்த்திகேசு

பா.ஞா.சங்கம், வெள்ளிவிழா நிருவாகஸ்தர் (1947 – 1948)



L to Rt seated: Pathinathar (GS - Myliddy South), K ponnampalam (Co-op Bank), Pandit Namasivayam (Teacher), S Kandavanam(Teacher), Pandit V Muthukumaru (Teacher), T Sellathurai (BanK- Jaffna), S.Thamotharampillai (Teacher),
A Arumugam (Trader).
L to Rt standing: S.Vijaysundaram (Co-op Stores), S Kathirgamar (Teacher), A T Nadarajah (Govt Service), ? / May be Saravanamuthu Teacher), (Teacher- name ?) K Sinnappu (Surveyor), A T Subramaniam (Teacher), V Chelliah (Govt Service),
S Kanthar (Farmer).

**இலங்கை சோசலிச குடியரசின்**

**1980 ஆண்டின் 31ம் இலக்க வலிந்துதவு**

**சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள்**

**(பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்)**

**சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பதிவுச்சான்றிதழ்**

1980 ஆண்டின் 31ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 2ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கவேண்டிய 5ம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகப் பிரிவு வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பு பதிவாளர் **திரு.ச.சிவஸ்ரீ** ஆகிய நான் **கட்டுவன்,மயிலிட்டி தெற்கு வர்த்தலைவிளான்** எனும் முகவரியில் அமைந்துள்ள"**பாலர் ஞானோதய சங்கம்"** என்னும் பெயருடைய நிறுவனம் குறிப்பிட்ட பிரிவின் கீழ் வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என இத்தால் உறுதி செய்கின்றேன்.

பதிவு இல:- **JF/VN/VOL/2018/42**

ஒழுங்கமைப்பு பதிவாளரும்
பிரதேச செயலாளரும்

திகதி:- 2018.12.20

ச.சிவஸ்ரீ
பிரதேச செயலாளர்,
வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பளை.

பிரதி – சமூகசேவைப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.
யாழ்ப்பாணம்.

# பாலர் ஞானோதய சங்கத்தின் யாப்பு

## கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான்

**1. சங்கத்தின் பெயர்** : பாலர் ஞானோதய சங்கம்
(கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான்)

**2. சங்கத்தின் முகவரி** : கட்டுவன், தெல்லிப்பளை.

**3. சங்கத்தின் சின்னம்** :

**4. தூர நோக்கு**

உடல், உள, ஆன்மிக மேம்பாடுடைய சமூகக் கட்டமைப்பை உருவாக்கத் தேவையான அறிவு சார் வளங்களையும் பௌதிக நிதி வளங்களையும் கொண்ட அமைப்பாக நிலைத்திருத்தல்.

**5. நோக்கக் கூறு**

தூரநோக்கினை எய்தக் கூடிய செயற்பாடுகளைக் கூறுகளாக்கி உப குழுக்களை அமைத்து அவற்றின் செயற்பாடுகளிற்கான வளங்களை வழங்குவதுடன் வழிகாட்டல்களையும் நெறிப்படுத்தல்களையும் மேற்கொள்ளல்

**6. குழுக்கள்**

**1. கலாச்சாரக்குழு**

கலை, கலாச்சாரம், சமயம், ஒழுக்கநெறி பற்றிய அறிவை மேம்படுத்துவதற்கராக அறிவூட்டல்கள், விழாக்கள், பயனுள்ள பொழுது போக்கு வசதிகளை திட்டமிட்டுச் செயற்படுத்தல்.

**2. விளையாட்டுக்குழு**

பாரம்பரிய விளையாட்டுக்களுடன் உள்ளக் மைதான விளையாட்டுக்களுக்கான பயிற்சிகளை வழங்கி போட்டிகளைத் திட்டமிட்டு நடாத்துதல்

**3. நலிவுற்றோர் நலன் விருத்திக் குழு**

நலிவுற்ற குடும்பப் பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கல்

சுய முயற்சிக்கான உதவு தொகை வழங்கல்

அநாதரவானவர்க்கு வாழ்வாதார உதவி வழங்கல்

ஈமச்சடங்கை நடத்தி வைத்தல்.

**4. கிராம அபிவிருத்திக்குழு**

கிராமத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல், பராமரித்தல், நிர்மாணித்தல்,

**5. இணக்க சபை**

குடும்ப, சமூகப் பிணக்குகளுக்கு சுமூகமான தீர்வு காணல்.

**7. பொதுச் சபை**

கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவரையும் உறுப்பினராகக் கொண்டது பொதுச்சபையாகும்.

**8. பொதுச் சபை கூட்டப்படும் சந்தர்ப்பங்கள்**

1. ஆண்டுப் பொதுக் கூட்டம்.
2. விசேட பொதுக் கூட்டம்.

நிர்வாக சபையின் கோரிக்கையின் பேரில்

பொதுச்சபை உறுப்பினர்களின் கோரிக்கையின் பேரில்

- பொதுச்சபை உறுப்பினர்களின் கோரிக்கையானது எழுத்து மூலமானதாக இருத்தல் வேண்டும்.
- குறைந்த பட்சம் 20 உறுப்பினர்களின் ஒப்பம் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்
- பொதுக் கூட்டம் கூட்ட வசதியாக 30 நாள் அவகாசத்துடன் கோரப்பட வேண்டும்.
- செயலாளரிடம் நேரடியாக ஒப்படைக்க வேண்டும்.

**9. பிரேரணைகள்**

பொதுச் சபைக்கு பிரேரணைகள் சமர்ப்பிப்பதாயின் பொதுக்கூட்டம் கூட்டப்படும் திகதியிலிருந்து 10 நாட்களுக்கு முன்னதாக செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**10. பொதுக் கூட்ட அறிவித்தல்.**

செய்தித்தாள் மூலமோ துண்டுப் பிரசுரம் மூலமோ, திகதி, நேரம், இடம், நிகழ்ச்சிநிரல் குறிப்பிடப்பட்டு 15 நாட்கள் அவகாசம் இருக்கும் வகையில் செயலாளரால் அறிவிக்கப்பட வேண்டும்.

**11. கோரம்**

குறைந்த பட்சம் 20 உறுப்பினர்களின் பிரசன்னத்துடனேயே கூட்டம் நடாத்தப்பட வேண்டும்.

**12. வாக்களிப்பு**

கையை உயர்த்துவதன் மூலம் வாக்களிக்கலாம்

தேவையேற்படின் இரகசிய வாக்கெடுப்பு நடாத்தப்படும்.

**13. தீர்மானம் எடுத்தல்**

கூட்டத்தில் பங்கு பற்றுபவர்களில் பெரும்பான்மையினரின் ஆதரவுடன் எடுக்கப்பட வேண்டும்.

**15. நிர்வாக சபை உறுப்பினர்கள்**

தலைவர்

உப தலைவர் (மூவர்)

செயலாளர்

உப செயலாளர்

பொருளாளர்

சபை உறுப்பினர்கள் (நான்கு பேர்)

**16. கணக்குப் பரிசோதகர்**

கணக்கியல் தெரிந்தவராகவோ வங்கி உத்தியோகத்தவராகவோ இருத்தல் வேண்டும்.

**17. போசகர்கள்**

சங்க நலனில் ஈடுபாடு கொண்ட ஊர்ப் பெரியவர்களில் ஒருவரோ, பலரோ பொதுச் சபைத் தீர்மானத்துடன் தெரிவு செய்யப்படுவர்.

**18. பதவிக் காலம்**

ஏப்பிரல் 1ந் திகதியிலிருந்து தொடர்ந்த ஆண்டு மார்ச்சு 31 திகதி வரை

**19. நிர்வாக சபைக் கூட்டம் கூட்டப்படும் சந்தர்ப்பங்கள்**

- மாதம் ஒரு முறை
- செயலாளரின் கோரிக்கைக்கு இணங்க,

**20. நிர்வாக சபைக் கூட்ட அறிவித்தல்**

அஞ்சல் மூலம் திகதி, இடம், நேரம், நிகழ்ச்சி நிரல் குறிப்பிடப்பட்டு 5 நாள் அவகாசத்துடன் செயலாளரால் அறிவிக்கப்பட வேண்டும்.

**21. கோரம்**

குறைந்த பட்சம் நிர்வாகசபை உறுப்பினரின் எண்ணிக்கையின் 2/3 உறுப்பினரின் பிரசன்னத்துடன் கூட்டப்படல் வேண்டும்.

**22. தீர்மானங்கள்**

கூட்டத்திற்குச் சமூகம் அளித்தவர்களில் பெரும்பான்மையினரின் ஆதரவுடன் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

**23. வாக்களிப்பு**

- கை உயர்த்துவதன் மூலம் வாக்களிக்கப்படும்
- நிர்வாக சபையில் வாக்களிப்பில் சம எண்ணிக்கை வரும் பட்சத்தில் தலைவர் சிறப்புரிமையைப் பயன்படுத்தி வாக்களித்தல் வேண்டும்.

**24. நிர்வாக சபை உறுப்பினர்களின் கடமைகள்**

- யாப்புப் பற்றி அறிந்திருத்தல்,
- கூட்டங்களுக்குத் தவறாது சமூகம் அளித்தல்
- சங்கச் செயற்பாடுகளில் ஈடுபாட்டுடன் பங்குபற்றல்

**25. தலைவரின் கடமைகள்**

- கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல்
- சம்பிரதாயம், ஜனநாயகம், நிதிப்பிரமாணம் ஆகியவற்றிற்கு அமைய செயற்பாடுகளை முன்னெடுப்பதில் உறுதியாயிருத்தல்.
- நிதி நடவடிக்கையில் செயலாளர் பொருளாளருடன் ஈடுபடல்

**26. உபதலைவரின் கடமைகள்**

தலைவர் இல்லாதவிடத்து கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல்.

**27. செயலாளரின் கடமைகள்**

- நிர்வாக ஆவணங்களைப் பேணலும் பொறுப்பானவராயுமிருத்தல்.
- செயற்பாடுகளை திட்டமிடுதலிலும் செயற்படுத்தலிலும் பொறுப்பானவராக இருப்பதும் வழிப்படுத்துபவராகவும் இருத்தல்,
- நிதி நடவடிக்கைகளில் தலைவர் பொருளாளருடன் ஈடுபடல்
- பதவி விலகும் போது ஆவணங்களை பதவி ஏற்பவரிடம் ஒப்படைத்து அறிக்கையிடுதல் வேண்டும்.

**28. செயலாளரால் பேணப்பட வேண்டிய ஆவணங்கள்**

- அங்கத்துவ இடாப்பு
- கூட்ட அறிவித்தல் பற்றிய தகவல்கள்.
- அங்கத்துவ வரவு (கையொப்பப்) பதிவேடு.
- பொதுக் கூட்ட, நிர்வாக சபைக் கூட்ட, அறிக்கைப் புத்தகம்.
- சம்பவத்திரட்டு

**29. பொருளாளரின் கடமைகள்**

- நிதி ஆவணங்களைப் பேணலும் பொறுப்பானவராயும் இருத்தல்.
- மாதாந்த வருடாந்த நிதி நிலை அறிக்கை தயாரித்து சபை ஒப்புதல் பெறுதல்.
- ஆண்டுத் தொடக்கத்தில் உத்தேச வரவு செலவுத் திட்டம் தயாரித்தல்.
- நிதி நடவடிக்கையில் தலைவர் செயலாளருடன் ஈடுபடல்.
- பதவி விலகும் போது ஆவணங்களைப் பதவி ஏற்பவரிடம் ஒப்படைத்து அறிக்கையிடுதல் வேண்டும்.

**30. பொருளாளரினால் பேணப்பட வேண்டிய ஆவணங்கள்.**

- காசேடு –
- பொருட்பதிவேடு.
- பணம், பொருள் பெற்றமைக்கான ரசீது புத்தகம்,
- வரவு செலவுப் பதிவேடு.
- மாதாந்த, வருடாந்த நிதி நிலை அறிக்கைகள்.
- உத்தேச வரவு, செலவுத் திட்டம்,
- கொடுப்பனவுக்கான வவுச்சர்கள்.
- யாப்பின் சரத்து 06இல் குறிப்பிடப்பட்ட குழுக்களின் செயற்பாட்டினை செம்மையாகவும், பயனுறுதி மிக்கதாகவும் மேற்கொன்வதற்கு தனித்தனியான வங்கிக் கணக்குகளும் பதிவேடுகளும் பேணப்படல் வேண்டும்.

**31. சங்கத்தின் பணவைப்பு**

- நிர்வாக சபை தீர்மானத்திற்கு அமைவாக வங்கியில் சேமிப்பு, நிரந்தர வைப்புக்களாகப் பேணல் வேண்டும்.
- நிர்வாக சபை தீர்மானத்திற்கு அமைவாக குறித்த தொகை கையிருப்பில் பேணப்படலாம்.
- வங்கியில் நிலையான வைப்பு கையாள்கையில் தலைவர், பொருளாளர், செயலாளர் மூவரும் ஒப்பிமிடல் வேண்டும்.
- சேமிப்புக் கணக்கு கையாள்கையில் பொருளாளருடன் தலைவர் அல்லது செயலாளர் ஒப்பமிடல் வேண்டும்.
- வங்கி நடவடிக்கைகள் யாவும் நிர்வாக சபைத் தீர்மானத்திற்கு அமைய இடம்பெற வேண்டும்.

**32. கொடுப்பனவுகள்**

- கொடுப்பனவுகள் யாவும் நிர்வாகசபைத் தீர்மானத்திற்கு அமைவாக இடம்பெறவேண்டும்.
- எமது நிர்வாகத்தினரால் இனங்காணப்பட்ட நலிவுற்ற மக்களின் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முன்னர் குறித்த பணிகளுக்கான பணத்தை அன்பளிப்புச் செய்பவர்களிடம் இருந்து ஆலோசனைகள் பெறப்படவேண்டும்.

**33. பதவி விலக்கல்**

தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு தகுந்த காரணமின்றி சமூகமளிக்காதவர் நிர்வாக சபையின் தீர்மானத்திற்கமைய பதவி இழப்பார்

**34. வெற்றிடம் நிரப்புதல்**

பதவி நிலை உறுப்பினர் வெற்றிடம் ஏற்கனவே உள்ள நிர்வாக சபை உறுப்பினரிலிருந்தும் சாதாரண உறுப்பினர் வெற்றிடம் பொதுச் சபை உறுப்பினரிலிருந்தும் தெரிவு செய்யப்படுவார். தெரிவுகள் நிர்வாக சபை தீர்மானத்திற்கு அமைய எடுக்கப்படும்.

**35.** பதவி நிலை உறுப்பினர் ஒருவர் தொடர்ந்து மூன்று முறைக்குமேல் குறித்த பதவி வகிக்க முடியாது எனினும் பொதுச் சபையின் ஏகமனதான தீர்மானம் ஒன்றின் மூலம் மட்டுமே பதவி வகிக்க முடியும்.

**36.** யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளல் அல்லது புதிய அம்சங்கள் சேர்த்துக் கொள்ளல் ஆகியன பாலர் ஞானோதய சங்க வெளிநாட்டுக் கிளைகளின் அபிப்பிராயங்களுடன் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குபற்றியவர்களில் 73 அங்கத்தவர்களின் அங்கீகாரத்துடனேயே மேற்கொள்ளப் பட வேண்டும்.

**37.** சங்கத்தின் செயற்பாடுகள் யாவும் பாரம்பரியம், ஜனநாயகம், யாப்பு, நிதிப்பிரமாணம் என்பவற்றிற்கு அமைவாக இடம் பெறுதல் வேண்டும்.

**செய்வன திருந்தச் செய்**

## யாப்புக் குழு

| | பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| 01. | ந. பாலச்சந்திரன் | ........................................ |
| 02. | செ. சுப்பிரமணியம் | ........................................ |
| 03. | வ. இராசதுரை | ........................................ |
| 04. | சு. நவரத்தினம் | ........................................ |
| 05. | கா. அருள்தாஸ் | ........................................ |

## நிர்வாகசபை உறுப்பினர்கள் :

01. திரு. ந. பாலச்சந்திரன் - தலைவர்
02. திரு. செ. சுப்பிரமணியம் - உபதலைவர்
03. திரு. க. கனகநாயகம் - உபதலைவர்
04. திரு. வ. இராசதுரை - செயலாளர்
05. திரு. சு. நவரத்தினம் - பொருளாளர்
06. திரு. கா. அருள்தாஸ் - பொருளாளர் - கல்விநிதி
07. செல்வி சி. மகேஸ்வரி
08. திருமதி நி. விமலாதேவி
09. திரு. மு. சிவப்பிரகாசம்
10. திரு. அ. கணேசலிங்கம்
11. திரு. க. தர்மநாயகம்
12. திரு. கு. சத்சனாமூர்த்தி
13. திரு. பூ. சிவராசா
14. திரு. க. சிவபாலன்
15. திரு. ப. தங்கராசா

இவ் யாப்பானது 19-03-2017ந் திகதி யா/மல்லாகம் தங்கம்மா அப்பாக்குட்டி ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் விரிவான முறையில் விவாதிக்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு பொதுச்சபையின் அங்கீகாரம் பெற்றதென்பதை உறுதி செய்கின்றோம்.

| ........................................ | ........................................ | ........................................ |
|---|---|---|
| செயலாளர் | பொருளாளர் | தலைவர் |


# நன்றி

இம் மலரினில் பிரசுரிப்பதற்கு கட்டுரைகள், ஆசியுரைகள், வாழ்த்துரைகள் எழுதியனுப்பிய கல்விமான்களுக்கும், பெரியோருக்கும் பாலர் ஞானோதய 25 ம் ஆண்டு மலரினைப் பாதுகாத்துத் தந்துதவிய பேராசிரியர்.கலாநிதி N.சண்முகலிங்கன் அவர்களுக்கும், பாலர் ஞானோதய சங்க கலை உடல் வளர்ச்சிக் கழக 25வது ஆண்டு மலரினை பாதுகாத்துத் தந்துதவிய மாரிமுத்து முத்துக்குமாரு (France) அவர்களுக்கும், விளம்பரங்கள் வழங்கியதன் மூலம் எமது மலர் வெளியீட்டிற்கு ஆதரவளித்த வர்த்தகப் பெருமக்களுக்கும், மிகக் குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக இம்மலரை வெளியிட உதவிய Andra (இல.379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) பதிப்பகத்தாருக்கும் பாலர் ஞானோதய சங்கத்தின் சார்பில் உள்ளம் கனிந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இம் மலரில் வெளியிடப்பட்ட ஆசியுரைகள், ஆக்கங்கள், கட்டுரைகள், செய்திகள் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள், எண்ணங்கள் யாவும் அவற்றை எழுதிய எழுத்தாளர்களினுடையதே அன்றி பாலர் ஞானோதய சங்க நிர்வாகத்தினது அல்ல என்பதனை மிகத் தாழ்மையுடன் அறியத் தருகிறோம்.

**நன்றி**
**வணக்கம்**
**பாலர் ஞானோதய சங்க மலர்க்குழு**
**(PGS – Srilanka, UK & Swiss)**

# Outstanding Sportsmen



Dr. N. Rajalingam

## Ceylon Badminton Champion

Represented Ceylon in Badminton against INDIA, PAKISTAN, and MALAYSIA.


## Most Popular Soccer Player 1973 - 1974



N. Appiah

Represented Sri Lanka in Soccer against PAKISTAN, BURMA, BANGKOK, MALAYSIA, SINGAPORE, ENGLAND, WEST GERMAN & RUSSIA. Regular member of the Ratnams Sports Club from 1967. During this period the Club has reached 33 Cup finals.

## Best Allrounders



K. Vinayagamoorthy

Represented Jaffna district in Cricket, Soccer, and Hocky, and to the University of Sri-lanka in Soccer and Cricket. Captained the University Soccer XI in 1970 - 1971.

### J. S. S. A
### Javelin Record

Holder from 1951 to 1953. Represented the club and secured 1st places in Hop-Step & Jump and Long Jump. An outstanding cricketer scored 206 runs not-out a Jaffna record in 1951.



V. Jeyarajasingham

# பாலர் ஞானோதய சங்க ஐக்கிய இராட்சிய கிளை நிர்வாகத்தில் 1972 இல் இருந்து .....

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 1972 – 2000 | திரு.ஆறுமுகம் சிவானந்ததசுந்தரம் | திரு . சின்னப்பு ஆலாலசுந்தரம் | திரு . கந்தவனம் துரைராஜா |
| 2000 – 2007 | திரு . கந்தவனம் துரைராஜா | Dr. முத்துகுமாரு கணேசானந்தன் | |
| 2007 – 2008 | திரு . வேலாயுதம் ரவீந்திரன் | திரு . கனகசபை கணேசநாதன் | திரு. முத்துகுமாரு ஜெயஸ்ரீ (ஸ்ரீ ) |
| 2008 – 2011 | திரு . கனகசபை கணேசநாதன் | திரு. முத்துகுமாரு ஜெயஸ்ரீ (ஸ்ரீ ) | திரு . சங்கரப்பிள்ளை சிவானந்தா |
| 2011 – 2014 | திரு. மயில்வாகனம் தவேந்திரன் | திரு. முத்துகுமாரு ஜெயஸ்ரீ (ஸ்ரீ ) | திரு . சங்கரப்பிள்ளை சிவானந்தா |
| 2014 – 2018 | திரு . கனகசபை கணேசநாதன் | திரு. முத்துகுமாரு ஜெயஸ்ரீ (ஸ்ரீ ) | திருமதி . சுமதி விஜயதாஸ் |
| 2018 – 2023 | திரு . கனகசபை கணேசநாதன் | திரு. முத்துகுமாரு ஜெயஸ்ரீ (ஸ்ரீ ) | திருமதி . சுமதி விஜயதாஸ் |

இவர்களுடன் பின்வரும் உறுப்பினர்களும் முக்கிய பங்காற்றினார் :

அமரர் .திரு . மயில்வாகனம் மகேந்திரன் , அமரர் . திரு .சிவகுரு பிரேமச்சந்திரா , திரு . முத்துக்குமார் கணேசதேவன் , Dr . சிவசுப்ரமணியம் சிவகுமார் , Dr .ஆறுமுகம் சிவநாயகம்

இன்றும் தொடர்ந்து நிவாக உறுப்பினராக கடமை ஆற்றுவதுடன் மிகப்பெரிய பொருளாதார உதவி வழங்கிவரும் திரு .குட்டித்தம்பி கருணாகரன் , திரு. சங்கரப்பிள்ளை சிவானந்தா இவர்களுடன்

திரு .கார்த்திகேசு உதயதாஸ் , திருமதி . ரஞ்சிதமலர் ஸ்ரீ வசந்தேஸ்வரன் .

நிர்வாகத்துக்கு வெளியில் இருந்தும் உதவி வழங்கிவரும் திருமதி. சுகந்தி சிவகணேசன், திருமதி. சரோ பத்மநாதன், திரு. தம்பிப்பிள்ளை விஜயதாஸ்

2008 இல் இருந்து எமது போஷகர்களாக இருப்போர் : திரு . கந்தவனம் துரைராஜா. Dr . முத்துகுமாரு கணேசானந்தன், திரு . சின்னப்பு ஆலாலசுந்தரம், திருமதி . முத்தம்மா தர்மலிங்கம் , திரு. C .வேலாயுதம்



# Kanapatipillai Kuddithamby Kuddithamby Rasama Trust Fund

அமரர்கள் உயர் திரு. கணபதிப்பிள்ளை குட்டித்தம்பி, திருமதி இராசம்மா குட்டித்தம்பி ஆகியோரின் ஞாபகார்த்தமாக அவரது மகன் திரு. குட்டித்தம்பி கருணாகரனின் நிதிப்பங்களிப்பிலும், வழிநாடத்தலிலும் 2011 இல் இருந்து எமது தெல்லிப்பளை உபபிரிவில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கும் நிறுவனமாக தற்போது 42 ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கும், 12 உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கிராம சேவகர்கள் மற்றும் தெல்லிப்பளை உப அதிபர் ஆகியோரின் அனுமதியுடனும் வழங்கி வருகிறோம்.

**நீங்களும் உங்கள் பிள்ளைகள் இவ் உதவி பெற தகுதியானவர்கள் என்று கருதுகிறீர்களா?**
**தயவுசெய்து கீழ்வரும் மின்னஞ்சலுக்கு தொடர்பு கொள்ளவும்.**

**நீங்களும் உங்கள் பெற்றோர்கள் மற்றும் உறவினர் ஞாபகார்த்தமாக உதவி வழங்க விரும்புகிறீர்களா?**
**தயவு செய்து கீழ்வரும் மின்னஞ்சலுக்கு தொடர்பு கொள்ளவும்.**

**உங்களுக்கான உதவிகள் தெல்லிப்பளை உப அதிபர் மற்றும் கிராமசேவகர்கள் ஒப்புதலுடனேயே வழங்கப்படும்.**

**Email: kuddyrasama@gmail.com**

மீள் எழுச்சியுடன் நூற்றாண்டு விழாக் காணும் எங்கள் ஊர் மேம்பாட்டின் உயிர்விசையான

# பாலர் ஞானோதய சங்கம்

கட்டுவன், மயிலிட்டி தெற்கு (தென்மயிலை), வர்த்தலைவிளான் தழைத்து நிமிர்ந்திட

திருவேற்காடு கருமாரி அம்மன்

பெருங்கருணையை வேண்டுகின்றோம்



## ஜெயதேவி கருமாரி அம்மா ஆனந்த நிலையம்

Centre of Social work (JF/VN/VOL/2023)

வட்டாரம் -16, ஈழகேசரி பொன்னையா வீதி,
குரும்பசிட்டி மேற்கு, தெல்லிப்பளை.

PRINT@ANDRA +94 21 222 8929 | +94 77 66 22 981